மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**Manonmaniam Sundaranar University**
**Tirunlveli**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்
**Directorate of Distance and Continuing Education**

# B.A. TAMIL

## இளங்கலை தமிழ் இலக்கியம்

இரண்டாம் பருவம்

## இக்கால இலக்கியம்

முனைவர் ஜா. ஜினிலா
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் - 629 165
குமரி மாவட்டம்

| LearningObjectives |
| --- |
| TheMainObjectivesof thisCourseareto: |

- இக்கால இலக்கியம் கட்டுமர, தன் வரலாறு பயண இலக்கியம் கடித இலக்கியம், நாடகம் ஆகிய களங்களில் அமடந்துள்ளவற்மத அறிதல்
- கட்டுமர இலக்கியத்தின் இலக்கிய அழமகயும் தமிழின் நுட்பங்கமளயும்
- பயண இலக்கியத்தின் இலக்கிய அழகு தமிழ்ப் பண்பாட்டின் வீச்சு, தகவல் நாயக அடிகளின் ஒன்மற உலகம் நூலின் வாயிலாக அறிதல்
- நாடக இலக்கியத்தின் சிறப்மபயும் புது மநாக்கிலான பதால்கமத வாசிப்மபயும் சங்க இலக்கியச் பசய்திகளின் அடிப்பமடயிலான உருத்தாக்கத்மதயும் "பா௱ி படுகளம்" நாடகத்தின் வாயிலாக உணர்தல்

கடித இலக்கியத்தின் தனித்தன்மமயும் அருமமயும் பசய்திகமளயும் தமிழ் இலக்கிய ஆளுமமகளின் பதா௱ிவு பசய்த கடிதங்களின் வழி அறிதல்

## பருவம் - 2
## தாள் : 3 - இக்கால இலக்கியம்

**நோக்கம்**

இக்கால இலக்கியமானது கட்டுரை, பயண இலக்கியம், தன் வரலாறு, நாடகம், கடித இலக்கியம் ஆகிய களங்களில் அடைந்துள்ள வளத்தை அறிதல்.

**அலகு : 1**

கட்டுரை - தமிழ் இன்பம்

ஆசிரியர்- இரா.பி.சேதுப்பிள்ளை

**அலகு : 2**

பயண இலக்கியம் - உலகம் சுற்றும் தமிழன்

ஆசிரியர் அ. க. செட்டியார்

**அலகு : 3**

தன் வரலாற்று நூல் - வனவாசம்
ஆசிரியர் - கண்ணதாசன்

**அலகு : 4**

நாடகம்-சபாபதி

ஆசிரியர் - பம்மல் சம்பந்த முதலியார்

**அலகு : 5**

கடித இலக்கியம் - இரசிகமணியின் கடிதங்கள்

### பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| அலகு : 1 | கட்டுரை - தமிழ் இன்பம் | 1-46 |
| அலகு : 2 | பயண இலக்கியம் - உலகம் சுற்றும் தமிழன் | 47-60 |
| அலகு : 3 | தன் வரலாற்று நூல்- வனவாசம் | 61-103 |
| அலகு : 4 | நாடகம்-சபாபதி | 104-112 |
| அலகு : 5 | கடித இலக்கியம்- இரசிகமணியின் கடிதங்கள் | 113-123 |
| | மாதிரி வினாத்தாள் | 124 |

# அலகு - 1

# தமிழ் இன்பம்

**ஆசிரியர் - டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை**

ரா.பி. சேதுப்பிள்ளை சிறந்த எழுத்தாளராகவும், வழக்குரைஞராகவும், மேடைப் பேச்சாளராகவும் விளங்கியவர். தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். வெவ்வேறு காலகட்டங்களில் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பல அரங்கங்களின் மேடைகளிலும், வானொலியிலும் ஆற்றிய உரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மொழி குறித்தும் அதன் இலக்கியங்கள் குறித்தும் தமிழர்தம் வாழ்வியல், பண்பாடு, கலாச்சாரம் போன்றவை குறித்துமான கட்டுரைகள் ஒவ்வொன்றும் தனித்த இன்பத்தைத் தருவனவாகும். படிக்கப் படிக்க திகட்டாத தீஞ்சுவை தரும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் எழுத்து ஆகச்சிறந்த தமிழ் இன்பம் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

இந்திய அரசின் சார்பில் சாகித்ய அகாடெமி விருது முதன்முதலில் 1955 - ஆம் ஆண்டு வழங்கப்பட்டபோது தமிழ் நூலுக்கான விருது ‘தமிழ் இன்பம்’ என்ற இந்நூலுக்கு வழங்கப்பட்டது.

## 1. மேடைப் பேச்சு

### தமிழாசிரியர் மகாநாடு
### தலைமை உரை

**கல்வித்துறை அமைச்சர் அவர்களே! ஆசிரியத் தோழர்களே!**

‘கற்றாரைக் காண்பதுவும் நன்று; கற்றார் சொற் கேட்பதுவும் நன்று; கற்றாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று’ என்பர் நற்றமிழ் வல்லார். அந்நலத்தை இம்மாகாணத் தமிழாசிரியர் மாநாட்டில் எனக்குச் சிறப்பாகத் தந்த அன்பர்களை மனமாரப் போற்றுகின்றேன்.

இம்மாநாட்டிலே தமிழ்த்தாயின் மணிக்கொடி ஏறக் கண்டேன்; மனம் களித்தேன் வில்லும் கயலும் வேங்கையும் தாங்கிய மணிக்கொடி. முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக் கண்ணெதிரே காட்டி நிற்கின்றது.

சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று குலத் தமிழ் மன்னர், நித்தம் தமிழ்வளர்த்த நீர்மை நம் நினைவிற்கு வருகின்றது. சேர நாட்டு மாளிகையில் மெல்லிய வீரமஞ்சத்தில்

கண்ணுறங்கும் தமிழறிஞர் ஒருவருக்குக் கவரி வீசி நிற்கும் காவலனை மனக்கண்ணெதிரே காண்கின்றோம். சோழநாட்டு மாநில மன்னன், தமிழ்த்தாயின் திருவடி தொழுது "நான் பண்டித தோழன்" என்று இறுமாந்து பேசும் இனிய வாசகத்தைக் கேட்கின்றோம். சங்கத் தமிழ் மணக்கும் மதுரையில் அரியாசனத்தில் அமர்ந்து ஆசிரியரின் சிறப்பையும், அவர்களை ஆதரித்தற்குரிய முறையையும் அழகிய பாட்டால் எடுத்துரைக்கும் பாண்டியனைப் பர்ர்க்கின்றோம். "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாண்டியன் அன்று பிறப்பித்த ஆணை என்றென்றும் தமிழ்நாட்டில் நின்று நிலவுதல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது அருமையும் கருதாது அவமதிப்பும் கொள்ளாது. அன்று தமிழ்த்தாயின் பொன்னடி போற்றி நின்ற தமிழாசிரியரை இன்று மறக்கலாகுமோ? ஆதலால் தமிழ் அறிஞர்களே! தமிழ் நாடெங்கும் தமிழ்ச் சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள்; கலைச்செல்வத்தை வாரி வழங்குங்கள். 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும் அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர்! அதனை எய்தியே தீர்வோம்; பணி செய்ய வாரீர்!

## 2. புறநானூறு மகாநாடு

**மெய்யன்பர்களே! செந்தமிழ்ச் செல்வர்களே!**

இந்நாள் தமிழ்நாட்டுக்கு ஒரு நன்னாள் ஆகும். தமிழ்த் தாயைப் போற்றும் அன்பரும் அறிஞரும் நூற்றுக்கணக்காக இங்கே நிறைந்திருக்கின்றார்கள். பழந்தமிழ் நாட்டின் தன்மையை எடுத்துக்காட்டும் தொகை நூல்களில் தலைசிறந்தது புறநானூறு என்பர். அந்நூலில் படைத்திறம் வாய்த்த பெருவேந்தரைக் காணலாம். கொடைத்திறம் வாய்ந்த வள்ளல்களைக் காணலாம். சுற்றறிந்து அடங்கிய சான்றோரைக் காணலாம். பழந்தமிழ்க் குலங்களையும் குடிகளையும் காணலாம். சுருங்கச் சொல்லின், கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பழந்தமிழ் நாட்டைப் புறநானூற்றிலே காணலாம்.

**கவிதையும் காவலரும்**

முற்கால தமிழ் மன்னரில் பலர் பொன்மலர், மணமும் பெற்றாற் போன்று புவிச்செல்வத்தோடு, கவிச்செல்வமும் உடையராய் விளங்கினார்கள். புகழ்பெற்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், கவிபாடும் திறம் பெற்ற காவலருள் ஒருவன் மக்களாகப் பிறந்தோரெல்லாம் கல்வி கற்று மேம்படல் வேண்டும் என்ற ஆசையை அம் மன்னன் ஒருபாட்டால் அறிவிக்கின்றான்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்ற பாட்டு அவ்வார்வத்தைக் காட்டுகின்றது.

**முற்காலப் போர்முறை**

பகைமையும் போரும் எக்காலத்தும் உண்டு. முற்காலப் போர் முறைகளில் சிலவற்றைப் புறநானூற்றிலே காணலாம். அக்காலத்தில், ஓர் அரசன் மாற்றரசனது நாட்டின் மீது படையெடுத்தால் அந்நாட்டில் வாழும் நல்லுயிர்களை நாசமாக்கக் கருதுவதில்லை. பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளரையும் இவர்போன்ற பிறரையும் போர் நிகழும் இடத்தை விட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும் இந்த அறப்போர் முறை முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகின்றார்.

**மக்கள் வாழ்க்கை நலம்**

தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைக் குறித்துப் புறநானூறு பல செய்திகள் கூறுகின்றது. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றவாறு முற்கால மக்கள் மன்னனையே பின்பற்றி நடக்க முயன்றார்கள். அரசன் கடமையை அறிவிக்கின்ற புறநானூற்றுப் பாட்டு ஒன்று இக்கருத்தைக் குறிக்கின்றது. பிள்ளையைப் பெற்று வளர்ப்பது தாயின் கடமை என்றும், அவனை அறிவுடையவன் ஆக்குவது தந்தையின் கடமை என்றும், ஒழுக்க நெறியில் நிறுத்துவது அரசன் கடமை என்றும் பொன்முடியார் என்ற புலவர் திறம்படப் பாடியுள்ளார்.

வாழ்க்கைக்கு உரிய சிறந்த நெறிகளையெல்லாம் எடுத்தோதுகின்ற புறநானூறு எல்லோரும் கடைபிடிப்பதற்குரிய ஓர் அறத்தினைத் திட்டவட்டமாகக் கூறுகின்றது.

"பல்சான் றீரே! பல்சான் றீரே!
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்!"

என்ற அறிவுரையைக் கடைப்பிடித்தல் தமிழ்மக்கள் கடனாகும்.

**இலக்கிய நலம்**

புறநானூற்றுப் பாடல்களில் அமைந்துள்ள சொல்லையும், பொருளையும் பிற்காலப் பெருங்கவிஞர் பொன்னே போல் போற்றினர் நாட்டில் வாழும் உயிர்களுக்கு அரசனே உயிர் என்ற உண்மை.

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று புறப்பாட்டிலே கூறப்படுகின்றது.

ஆகவே, புறநானூறு, தமிழ்ச்சுவை தேறும் மாணவர்க்கு ஓர் இலக்கியக் கேணியாம்; பழமையைத் துருவுவார்க்குப் பல பொருள் நிறைந்த பண்டாரமாகும்; தமிழ்நாட்டுத் தொண்டர்க்கு விழுமிய குறிக்கோள் காட்டு மணிவிளக்காகும். இத்தகையை பெருநூலைத் தமிழ்மக்களாகிய நாம் போற்றிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோமாக.

## 3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு

**திறப்புரை**

**பெரியோர்களே! தாய்மார்களே!**

பழம்பெருமை வாய்ந்த மதுரையம்பதியில் வேளாளப் பெருமக்கள் மாநாடு இன்று நடைபெறுகின்றது. வேளாண்குல மாந்தர் பல்லாயிரவர் இங்கே குழுமியிருக்கின்றார்கள். முன்னாளில், வேளாளர் குலம் இந்நாட்டில் மிக்க மேன்மையுற்றுத் திகழ்ந்தது. வேளாளருக்குரிய பயிர்த்தொழிலைப் புகழாதார் தமிழ்நாட்டில் எவருமில்லை. மேழிச்செல்வம் கோடை படாது" என்பது இந்நாட்டார் கொள்கை மேழியே வேளாண்மையின் சின்னம். அம்மேழிக்கொடி இந்த மகாநாட்டுக் கொட்டகையில் அழகுற மிளிர்கின்றது. அதனை 'வாழி வாழி' என்று வாழ்த்துகின்றோம்.

முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டிலே ஒரு திருமணம் மன்னரும் முனிவரும், பாவலரும் நாவலரும், குடிகளும் படைகளும் மணமாளிகையில் நிறைந்திருந்தார்கள். ஔவையாரும் அங்கே வந்திருந்தார். மன்னன் திருமகனே மணமகன் மணம் இனிது முடிந்தது மங்கல வாழ்த்துத் தொடங்கிற்று முனிவர் ஒருவர் எழுந்தார். 'மணமக்கள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்று வாழ்த்தினார். 'இளவரசு வாழையடி வாழையென வையகத்தில் வாழ்க' என்று வாழ்த்தினார், மற்றொரு முனிவர் ஔவையார் எழுந்தார். 'அரசே உன் நாட்டில் வரப்பு உயர்க!' என்று வாழ்த்தினார். அவ்வாழ்த்துரையின் பொருத்தமும், பொருளும் அறியாத சபையார் ஒருவரை ஒருவர் வெறித்து நோக்கினர். அதுகண்ட ஔவையார் தம் வாழ்த்துரையின் கருத்தை விரித்துரைப் பாராயினர்; "சபையோரே! 'வரப்பு உயர்க!' என்று இளவரைச நான் வாழ்த்தினேன். விளை நிலத்தின் வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர, நெல் உயரும், நெல் உயர குடிஉயரும்; குடி உயர, கோன் உயர்வான்" என்று விளக்கம் கூறினான்.

சிறந்த தொழிலைச் செய்யும் உழவன் பெருமையெல்லாம் அவன் உழைப்பின் பெருமையே யாகும்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்று திருக்குறள் பாடிற்று.

**வேளாளர் என்றவர்கள்**
**வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்"**

என்பது அவர் தேவாரம்.

## 4. தமிழ்த்திருநாள்

**தலைமையுரை**

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இன்று இலங்கையில் தமிழ்த் திருவிழா நடைபெறுகின்றது. இது நான்காம் திருவிழா முதல் ஆண்டிலே தமிழ் விழா மதுரையம்பதியில் நடைபெற்றது. மதுரை மாநகரம் பாண்டி நாட்டின் தலைநகரம்; செந்தமிழை உருவாக்கிய திருநகரம் இத்தகைய மதுரை மாநகரம் முதலாண்டு விழாவினை நடத்தியது. மிகப் பொருத்தமாயிருந்தது அடுத்த ஆண்டு விழா சோழ நாட்டி பழந்தலைநகராகிய திருவாரூரில் நிகழ்ந்தது. சோழவளநாட்டின் செழுமைக்கு ஏற்ற முறையில் எடுப்பாக நடந்தது. அம்மகாநாடு மூன்றாம் மகாநாடு பண்டைத் சேரநாட்டின் ஓர் அங்கமாக விளங்கிய கொங்கு நாட்டிலே சீரும் சிறப்பும் உற்று விளங்கும் கோம்புத்தூரில் நடைபெற்றது. நான்காம் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. இம்மகாநாட்டின் இலக்கியப் பகுதியில் என்னையும் பங்கு பெறுமாறு பணித்த அன்பர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம் உரியதாகும்.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் பழமையான தொடர்புண்டு. தமிழ் இலக்கியமே இதற்குச் சான்று. பண்டமாற்று முறையிலும் பண்பாட்டு முறையிலும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த உறவு சங்க நூல்களிலும் பிற்காலத்துப் பெருநூல்களிலும் பேசப்படுகின்றது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள், "பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" என்று பாடினார். அந்நகரத்தின் துறைமுகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நிகழ்ந்தன. கடல் கடந்து பிற நாடுகளிலிருந்து அங்கு வந்திறங்கிய பண்டங்களைப் பட்டினப்பாலை தொகுத்து கூறுகின்றது. அந்த வரிசையில் ஈழநாட்டுப் பண்டமும் இடம் பெற்றுள்ளது. "ஈழத்து உணவும் காழகத்து

ஆக்கமும்'' பட்டினத் துறைமுகத்தில் வந்து இறங்கிய பண்டங்களென்று அப்பாட்டு கூறுகின்றது.

சேரநாடு என்று பழங்காலத்தில் பெயர் பெற்றிருந்த மலையாள நாட்டிற்கும், ஈழ நாட்டிற்கும் பல வகையான தொடர்பிருந்தது. செங்குட்டுவன் என்னும் சிறந்த சேரமன்னன் மலையாள நாட்டில் அரசு வீற்றிருந்தபொழுது தமிழ்நாட்டில் அரும்பெருஞ் செயலொன்று நிகழ்ந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகி, பாண்டிய மன்னனைத் தன் கற்பின் திண்மையால் வென்று சேரநாட்டையடைந்து தெய்வீகமுற்றாள். இந்த நிகழ்ச்சி மூன்று தமிழ்நாட்டையும் அதிரச் செய்தது. சேர நாட்டு அரசன்தன் நாட்டில் வந்து தெய்வீகமுற்ற வீரபத்தினியாகிய கண்ணகிக்குச் சிறந்ததிருக்கோயில் ஒன்று அமைத்தான். அக்காட்சியைக் காண்பதற்கு அயல்நாட்டு மன்னர் பலரைச் செங்குட்டுவன் அழைத்திருந்தான். அன்னவருள் ஒருவன் ஈழநாட்டு மன்னன் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' என்று சிலப்பதிகாரத்தில் அவ்வரசன் குறிக்கப்படுகின்றான்.

இலங்கைக்கும், தமிழகத்திற்கும், ஆன்மநேய ஒருமைப்பாடும் உண்டு சிவமணமும், தமிழ்மணமும் ஒருங்கே வாழும் தேவாரம் பாடிய பெரியோர்கள் இலங்கையில் உள்ள சிறந்த சிவஸ்தலங்களை பாடியுள்ளார்கள்.

ஈழநாட்டிலே பிறந்து, தமிழ்நாட்டிலே வாழ்ந்து தமிழ்த்தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய் வருத்தம் பாராது பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தார்கள் உதவிய பெருமை யாழ்ப்பாணத்தில் தோன்றிய தாமோதரம் பிள்ளையவர்களுக்கே உரியதாகும்.

இலங்கை நாட்டிலே, யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம்; தமிழ்மணங் கமழும் திருநகரம். யாழ்ப்பாணர் என்பார் பழந்தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு வகுப்பார். பண்ணோடு இசைபாட வல்லவர் பாணர் என்று முன்னாளில் அழைக்கப் பெற்றவர் அவருள் யாழிலே வல்லவர்கள் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றார்கள். சிலப்பதிகாரத்தில் இவர் பெருமை குறிக்கப்படுகின்றது. கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில்

**''குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்**
**வழுவின் றிசைத்து வழிந்திறங் காட்டும்**
**அரும்பெறன் மரபின் பெரும்பாண் இருக்கையும்''**

என்று அவர் இருந்த வீதி புகழப்படுகிறது.

நாமிருக்கும் நாடு நமது என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடம் பெருகிவருகின்றது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்; யாமறிந்த

புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை'' என்ற பாரதியார் பாட்டின் உண்மையை உணர்ந்து பண்டைத் தமிழ்ப் பனுவல்களைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் பாராட்டிப் படிக்கின்றார்கள். இத்தகைய ஆர்வம் தமிழ் வழங்கும் நல்லுலகெங்கும் பரவுதல் வேண்டும். 'தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று பாடினார் ஒரு புலவர். அவர் பாடிய தமிழ்ப் பண்பு பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரக்க பேசப்படுகின்றது.

## 5. தமிழ் இசைவிழா

**தலைமையுரை**

**பெரியோர்களே! அன்பர்களே!**

இந்நாள் தமிழ் மக்களுக்கு ஒரு நன்னாள் ஆகும். சென்னை மாநகரில் பத்தாண்டுகளாகச் சிறந்த பணியாற்றி வரும் தமிழிசைச் சங்கம், இன்று அண்ணாமலை மன்றம் என்னும் அழகிய கலைக் கோவிலில் அமர்ந்து காட்சியளிக்கின்றது. மன்றம் என்ற தமிழ்ச் சொல்லைக் கேட்பது செவிக்கின்பம்; அதன் பொருளை அறிவது சிந்தைக்கு இன்பம். பழந்தமிழ் மொழியில் மன்றம் என்பது ஊர் நடுவேயுள்ள பொதுவிடமாகும். இன்று தமிழகத்தின் தலைநகராகிய சென்னையம்பதியின் நடுவே, தமிழரின் சீர்மைக்கு ஒரு சான்றாக நிற்கும் இம்மாளிகை, தமிழ்மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாதலால் இதனை மன்றம் என்று அழைப்பது சாலவும் நன்றே.

அண்ணாமலையரசருடன் இசைவளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுக் கண்ணினைக் காக்கும் இமைபோல் தமிழிசைச் சங்கத்தைக் காத்துவரும் பேரறிஞர் டாக்டர். ஆர். சண்முகம் செட்டியார் அவர்களுடைய கலை வண்ணமும் இம்மாளிகையிலே காட்சி தருகின்றது.

இசைத்தமிழ் விழா இன்று இம்மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இசைத்தமிழ் என்பது முத்தமிழின் நடுநாயகமாக விளங்குவது இசைத்தமிழ் என்றாலும் தமிழிசை என்றாலும் பொருள் ஒன்றே இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழையும் முன்னாளில் முனிவரும் மன்னரும் முன்னின்று வளர்த்தார்கள். முத்தமிழையும் துறைபோகக் கற்ற வித்தகராகிய முனிவர் ஒருவர். பொதிய மலையில் அமர்ந்து தமிழ்ப் பணிபுரிந்தார். அவரைத் திரு முனிவர் என்றும், குறு முனிவர் என்றும், முத்தமிழ் முனிவர் என்றும் கவிஞர்கள் புகழ்ந்துரைத்தார்கள்.

> ''முத்தமிழ் மாமுனி நீள்வரை யேநின்று
> மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு''

என்று பாடினார் பாரதியார்.

இலங்கை வேந்தனாகிய இராவணன் தமிழ்நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த தலைப்பட்டான். இசைக்கலையில் ஏற்றம் வாய்ந்த இராவணன் தமிழிசையில் புகழ்பெற்ற முனிவனிடம் தன் கைவரிசையைக் காட்ட ஆசைப்பட்டான்.

மன்னனுக்கும் முனிவருக்கும் இசைப்போட்டி நிகழ்ந்தது; முதலில் அரக்கர்கோன் அருமையாகப் பாடினான். அதன்பின் அகத்தியர் தமிழிசையை யாழில் அமைத்துப் பாடினார். அவர் பாட்டொளி கேட்ட பறவைகளும் விலங்குகளும் பரவசமுற்றன. எதிரே நின்ற கரும்பாறை இளகிற்று. அரசக்கர் கோன் உள்ளம் உருகிற்று. அந்நிலையில் அகத்தியரை நோக்கி, 'என் உயிரினும் இனிய இசை ஞானியே உமக்கு என்ன வேண்டும்?' என்றான் இராவணன். தமிழ்நாட்டைப் பாதுகாப்பதற்கு ஏற்ற சமயம் வந்துற்றது என்று அறிந்த முனிவர், 'ஐயனே! இந்நாட்டிலுள்ளார் எவரையும் நீ துன்புறுத்தாமல் இருக்க வேண்டும்' என்றார். அதற்கிசைந்த இராவணனும் பொதியமலையை விட்டகன்றான். அன்று முதல் தமிழகத்தில் ஆட்சி செலுத்தும் கருத்தை அடியோடு விட்டொழிந்தான் அரக்கர் கோமான். 'தமிழிசையின் வெற்றியால் அரக்கர் அச்சம் அகன்றது' என்று தமிழ்மக்கள் அகங்களித்தார்கள். இச்செய்தியைத் தொல்காப்பியப் பாயிரவுரையாலும் மதுரைக் காஞ்சியுரையாலும் அறியலாம்.

இவ்வாறு தமிழ்நாட்டைப் பாதுகாத்த இசைத் தமிழ், கடல் கடந்து இலங்கைக்குச் சென்று வெற்றி பெற்ற செய்தியும் அறியத்தக்கதாகும்.

பழந்தமிழ்க் குடிகளாகிய பாணரைத் தமிழ்நாட்டுப் பெருநில மன்னரும் குறுநில மன்னரும் ஆதரித்தார்கள்; வரிசை அறிந்து அவர்க்குப் பரிசளித்தார்கள். சோழநாட்டு மன்னனாகிய கரிகால் வளவனும் தொண்டை நாட்டில் ஆட்சிபுரிந்த இளந்திரையனும் குறுநில மன்னனாகிய நல்லியக்கோடனும் இசைவாணர் குலத்தை ஆதரித்த செய்தி பத்துப்பாட்டிலே கூறப்படுகின்றது.

இவ்வாறு பாணர்களும் புலவர்களும் வளர்த்து வந்த தமிழிசையைச் சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் பத்தி நெறியைப் பரப்புவதற்குப் பயன்படுத்தினார்கள். ஈசனைப் பாடிய தேவாரத் திருப்பாசுரங்கள், இறைவன் திருவருளை இன்னிசையால் எளிதில் பெறலாம் என்னும் உண்மையை எடுத்துரைக்கின்றன.

சிவாலயங்களில் தேவாரம் முதலிய திருமுறைகளை விண்ணப்பம் செய்யும் இசைவாணர், ஓதுவார் என்று பெயர் பெற்றனர்.

**"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நல்நெறிக்கு உய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே"**

என்று திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்தில் 'ஓதுவார் என்னும் சொல் ஈசன் புகழைப் பாடுவார்' என்று பொருள்படுகின்றது. எனவே, ஆதியில் அரசரால் ஆதரிக்கப் பெற்ற இசைத் தமிழ், இடைக் காலத்தில் ஆலயங்களின் ஆதரவு பெற்று வளர்ந்தது.

தமிழ்நாட்டின் பெருமையைப் புத்தம் புதிய முறையில் பாடிய பாரதியார் பாட்டு இந்நாளில் தமிழ்நாடெங்கும் பரவி இன்பம் பயக்கின்றது.

**"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு"**
**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை**
**அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி**
**ஆரம் படைத்த தமிழ்நாடு"**

என்ற பாரதியார் பாட்டைக் கேட்கும் மக்களின் உள்ளத்தில் தமிழ் ஆர்வம் வளராது ஒழியுமோ? "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் பாட்டு தமிழ் மக்களைத் தட்டி எழுப்பும் தகைமை வாய்ந்ததன்றோ? இத்தகைய இசைப்பாட்டு ஆயிரம் ஆயிரமாக எழுந்து தமிழ்நாடு எங்கும் பரவுதல் வேண்டும்.

பழமையான பண்களின் வரலாற்றை ஆராய்வதும் புத்தம் புதிய இசைப்பாடல்களை இயற்றுவதும் இத்தமிழிசைச் சங்கந்தின் அடிப்படையான நோக்கமாகும்.

## II. இயற்கை இன்பம்

### 6. பொங்கலோ பொங்கல்

தமிழ்நாட்டிலே பல சாதிகள் உண்டு; பல சமயங்கள் உண்டு. ஆயினும், தமிழர் அனைவருக்கும் பொங்கல் நாள் ஒரு புனித நாள் அந்தநாளில் "பொங்கலோ பொங்கல்" என்பதே எங்கும் பேச்சு.

பொங்கல்விழா நடைபெறும் காலமும் இனியகாலம்; கார் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம் இயற்கை அன்னை பசுமையான புடவை உடுத்தி, பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும், கனியும் கரும்பும் அணிந்து இன்பக் காட்சி தருங்காலம்.

பொங்கலுக்குத் தலைநாள் போகி பண்டிகை. போகி என்பவன் இந்திரன் அவன் மேகங்களை இயக்கும் இறைவன். தமிழ்நாட்டார் பழங்காலத்தில் இந்திரனை

விளைநிலங்களின் இறைவனாக வைத்து வணங்கினார்கள். சோழவள நாட்டில் இந்திரவிழா இருபத்தெட்டு நாள் கோலாகலமாக நடைபெற்றது.

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க”**

வேண்டும் என்று அவ்வானவரைத் தமிழ்நாட்டார் வழிபட்டார்கள்.

போகி பண்டிகையை அடுத்து வருவது பொங்கற் புதுநாள்; அந்நாளில் ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ நிகழும்; வீட்டிலுள்ள பழம்பானைகள் விடைபெறும்; புதுப்பானைகளில் பொங்கல் நடைபெறும். பால்பொங்கும் பொழுது, “பொங்கலோ பொங்கல்” என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும் அப்பொழுது பெண்கள் குரவையாடுவர்; பிறகு பூவும் புகையும் பொங்கலும் கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்குவர். அனைவரும் வயிராற உண்டு மகிழ்வர்.

பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழ்வது மாட்டுப்பொங்கல். முற்காலத்தில் மாடே செல்வமாக மதிக்கப்பட்டது. விளைநிலத்தில் ஏர் இழுப்பது மாடு; பரம்பு அடிப்பது மாடு; அறுவடைக் காலத்தில் சூடடிப்பது மாடு; களத்து நெல்லைக் களஞ்சியத்தில் சேர்ப்பது மாடு. ஆகவே, மாடு இல்லையென்றால் பண்ணையும் இல்லை; பயிர்த்தொழிலும் இல்லை.

“அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்” பசுக்களை ஆதரித்தல்வேண்டும் என்பது தமிழர் கொள்கை. கழனியில் பணி செய்யும் காளை மாடுகளும், காலையும் மாலையும் இனிய பாலளிக்கும் கறவை மாடுகளும், நோயின்றிச் செழித்து வளர்வதற்காக திகழ்வது மாட்டுப்பொங்கல்.

அந்த நாளில் கன்று காலிகளுக்கு கொண்டாட்டம் அவற்றை ஆற்றிலும் குளத்திலும் நீராட்டுவர்; கொம்பிலே பூவும் தழையும் சூட்டுவர்; மணிகளைக் கழுத்திலே மாட்டுவர்; நல்ல தீனியை ஊட்டுவர்.

“இனிவரும் பொங்கல் பெரும் பொங்கலாக வேண்டும்; தமிழ் நாட்டில் உள்ள வெற்றிடம் எல்லாம் விளைநிலமாக மாறவேண்டும். உண்ண உணவும் உடுக்க உடையும் எல்லார்க்கும் கிடைக்க வேண்டும்.

## 7. சித்திரை பிறந்தது

தமிழ்நாட்டில் கூனியாகிய பங்குனி மாதம் கழிந்தால் எங்கும் மங்கல ஒலி “கூனி குடி போகாதே; ஆனி அடி கோலாதே” என்பது பழமொழி இப்படிக் கூனியும் ஆனியும் கூடாதென்று கருதும் தமிழர் சித்திரையைச் சிறந்த ஆர்வத்தோடு வரவேற்கின்றார்கள்.

சித்திரை மாதத்தில் இளவேனிற்காலம் தொடங்குகின்றது வசந்தம் என்னும் இளவேனில் இன்பசுகம் தரும் காலம். அப்போது, பசுமையான செழுஞ்சோலை பார்க்குமிடமெங்கும் கண்ணுக்கு விருந்தளிக்கும்.

புதுமணம் புரிய விரும்புவோர் சித்திரையின் வரவை மெத்த ஆசையுடன் நோக்குவர். திருமணத்திற்குரிய சூழ்நிலை அப்போது இயல்பாக அமைந்திருக்கும்; பகவலன் ஒளி தருவான். வீடுதோறும் நெல்லும் பிறவும் நிறைந்திருக்கும் தென்றல் என்னும் இளங்காற்று வீசிக்கொண்டிருக்கும் இனிய திருமணம் இன்பமாக நடைபெறும்.

இயற்கை அன்னை இனிய கோலத்தில் இலங்கும்காலம் இளவேனிற்காலம் மாந்தர் ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இன்பம் பொங்கும் காலம் இளவேனிற்காலம், பனியால் நலிந்த மக்கள் பகைவன் ஒளியைக் கண்டு "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று இன்புற்று ஏத்தும் காலம் இளவேனிற் காலம். ஆகவே, இயற்கையோடு இசைந்து வாழ்ந்த பழந்தமிழ் மாந்தர், இன்பநெறி காட்டும் இளவேனில் பருவத்தின் முதல் நாளைத் தமிழ் ஆண்டின் கலைநாளாகக் கொண்டது மிகப் பொருத்தமுடையதன்றோ?

## 8. தமிழ்த் தென்றல்

தென்னாட்டிலே தென்றல் என்றொரு பொருள் உண்டு. தனியே அதற்கொரு சுகம் உண்டு வசந்த காலத்தில் தெற்கேயிருந்து அசைந்து வரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர்.

'திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி'க்குத் திருஞான சம்பந்தர் எழுந்தருளிய பொழுது, பொதிகைத் தென்றல் அவரை வரவேற்று இன்ப சுகம் தந்தது. தண்ணறுஞ் சோலைகளிலும், தாழம் பூக்களிலும் நுழைந்து, நறுமணம் கவர்ந்து வந்த பொதிகைத் தென்றலைத் தேவாரப் பாட்டில் இசைத்துப் பாராட்டினார் அவ்விளங்கவிஞர்

**"துன்றுதண் பொழில் நுழைந்து எழுவிய கேதகைப்**
**போதளைந்து**
**தென்றல்வந் துலவிய திருநெல்வே லிஉறை**
**செல்வர் தாமே"**

என்பது அவர் திருப்பாட்டு.

மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பேரின்ப சுகத்தை ஒல்லும் வகையால் உணர்த்தலுற்றார் அருட்கவிஞர் ஒருவர்.

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றனும் வீங்கிள வேனிலும்**

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

என்பது திருநாவுக்கரசர் இசைத்த பாட்டு.

## 9. திருக்குற்றாலம்

தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கிவளரும் குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்; கோல மாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச்சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் சிறு நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும் அவ்வருவியில் நீராடி இன்புற்ற மேலைநாட்டுப் பெரியார் ஒருவர், 'இந்நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலைசிறந்தது குற்றால அருவியே என்று கூறுதல் மிகையாகாது! என்று புகழ்ந்துரைத்தார்.

நறுமணங் கமழும் பொழில்களைக் காணும்பொழுதும் அப்பொழில்களின் இடையே கிளைக்குக் கிளை தாவி விளையாடும் குரங்குகளைப் பார்க்கும் பொழுதும் பிள்ளைப் பெருமானாகிய திருஞானசம்பந்தர் உள்ளம் துள்ளி மகிழும் 'தேனருவித் திரையெழும்பி வானின் வழி யொழுகும்' திருக்குற்றால மலையில் இந்நாள் இளைஞர்கள் கண்டு இன்புறுகின்ற வானரங்களை அந்நாளில் திருஞான சம்பந்தரும் கண்டார்போலும்.

''மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்''

என்ற தேவாரப் பாட்டில் மந்திகள் தம் வயிற்றைக் கட்டித் தழுவிய குட்டிகளோடு வாழைக் குலைகளின் மீது அமர்ந்து வளமான கனிகளை மாந்தும் காட்சி அழகுற மிளிர்கின்றது.

## 10. பழகு தமிழ்

தமிழகத்தில் பல நாடுகள் உண்டு; பல குலங்கள் உண்டு ஒரு நாட்டுத் தமிழுக்கும் இன்னொரு நாட்டுத் தமிழுக்கும் வேற்றுமையே இல்லை என்று கூறமுடியாது ஒரு குலத்தார் பேசுந்தமிழ் மற்றொரு குலத்தார் பேசுந் தமிழை எல்லா வகையிலும் ஒத்திருக்கும் என்று சொல்ல முடியாது.

பந்தல் என்ற சொல்லின் ஆட்சியைப் பார்ப்போம்; திருமணத்திற்குப் பந்தல் போடும் வழக்கம் பட்டினத்திலே செல்வக் குடியிற்பிறந்த கண்ணகிக்கும் கோவலனுக்கும்

முத்துப்பந்தலிலே திருமணம் நிகழ்ந்தது. "மாலை தாழ் சென்னிவயிரமணித் தூணகத்து நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்" என்று அப்பந்தலைச் சிலம்பு பாடிற்று. கோடையிலே வழிநடந்து செல்வார்க்கு நீரும் நிழலும் தரும் பந்தலைத் தண்ணீர்ப் பந்தல் என்பர்.

இத்தகைய மேன்மையான சொல் தனவணிகர் நாடு என்னும் செட்டிநாட்டிலே அமங்கலச் சொல்லாகக் கருதப்படுகின்றது. பந்தல் என்பது அந்நாட்டிலே மணப்பந்தலைக் குறிப்பதில்லை; பிணப்பந்தலையே குறிக்கும். இழவு வீட்டில் போடுவது பந்தல்; கல்யாண வீட்டில் போடுவது காவணம் அல்லது கொட்டகை. இலக்கியத்தில் வழங்கும் காவணம் என்ற அருஞ்சொல் செட்டி நாட்டிலே பழகு தமிழாய்ப் பயில்கின்றது. தொண்டு என்பது சேவை. நாட்டுக்கு செய்யும் சேவை திருத்தொண்டு எனப்படும். கொங்கு நாட்டிலே இப்பொழுது இழிந்த பொருளில் வழங்குகின்றது. ஒழுக்கம் கெட்டவரைச் குறிக்கின்றது அச்சொல்.

அங்காடி என்பது முன்னொரு காலத்தில் தமிழ்நாடெங்கும் வழங்கிய சொல். இக்காலத்தில் 'பசார்' என்று சொல்லப்படும் இடமே முற்காலத்தில் அங்காடி எனப்பட்டது. பெரிய நகரங்களில் அந்தியும் பகலும் அங்காடி நடைபெற்றது. அந்தியில் நடைபெற்ற அங்காடியை அல்லங்காடி என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை நாளங்காடி என்றும் அழைத்தனர். பட்டினத்தடிகள் அங்காடி என்ற சொல்லை எடுத்தாள்கின்றார். "அங்காடி நாய் போல் அலைந்து திரிந்தேனே" என்பது அவர் பாட்டு கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்றும் அங்காடி என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்திலும் அங்காடி உண்டு தமிழ்மொழியில் அங்காடியை மீண்டும் ஆட்சியில் அழைத்தால் எத்துணை அழகாக இருக்கும்.

## III. காவிய இன்பம்

### 11. காதலும் கற்பும்

காதல் என்பது காதுக்கினிய சொல்; கருத்துக்கினிய பொருள் காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு; காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. "காதல், காதல் காதல் இன்றேல் சாதல், சாதல், சாதல் என்று பாடினார் பாரதியார்.

தேவாரத்திலே அடியாரது காதல் பேசப்படுகின்றது.

**"காதலாலே கருதும் தொண்டர்**
**காரணத்தர் ஆசி"**

நின்ற சிவபெருமானச் சுந்தரர் பாடுகின்றார். இன்னொரு பெரியார் திருஞானசம்பந்தர் இறைவன் திருநாமத்தை ஓதும் காதலடியார் பெருமையைக் கூறுகின்றார்.

**''காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓது வார்த்மை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சிய வாயவே''**

என்பது அவர் திருப்பாட்டு.

காதல் என்ற சொல்லின் பொருள்தான் என்ன? அன்பு என்றாலும் காதல் என்றாலும் பொருள் ஒன்றே. பெற்றோர்க்குப் பின்ளையிடம் உள்ள அன்பு காதல்தான் கடந்த பேர்களும் மக்கள் மேல் காதல் என்று கவிஞர் பாடவில்லையா? பெற்ற பிள்ளையைக் காதலன் என்று கூறுவதுண்டு வாலியின் மைந்தனாகிய அங்கதனை 'வாலி காதலன் என்று குறிக்கின்றார் கம்பர் இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர். கங்கைக் கரையிலே இராமனுடைய நண்பனாயினான் குகன்; அவன் அன்பிற்குச் கங்கு கரையில்லை அது கண்ட இராமன்

**''சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்**
**காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்**
**யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மொடு நின்றான்''**

எனவே பக்தியும் காதல்; பிள்ளைப் பாசமும் காதல்; நேசமும் காதல்; சுருங்கச் சொல்லின் தலைசிறந்த அன்பே காதல்.

ஆதியில் காதல் மணமே தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிற்று காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போன்றது என்பது தமிழர் கொள்கை காதலுள்ள கன்னியர், தம் கருத்து நிறைவேறும் வண்ணம் காமனை வேண்டிக்கொள்ளும் வழக்கமும் முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. காதல் விளைக்கும் தேவனைக் 'காமன்' என்றும் 'காமவேள்' என்றும் தமிழர் அழைத்தனர். தாம் கருதிய காதலனைக் கணவனாகப் பெறுவதற்கும், பிரிந்த கணவனை மீண்டும் அடைவதற்கும், காமன் கோயிலிற் சென்று மங்கையர் வழிபடும் வழக்கம் அந்நாளில் இருந்தது. கோவலன், மாதவி என்னும் நடிகையின் மையலிலே முழ்கி தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்திருந்து போது, 'காமவேள் கோயிலில் சென்று தொழுதால் கணவன் மீண்டும் வந்து சேர்வான்' என்று அக்கற்பரசியிடம் அவள் உயிர்த்தோழி எடுத்துரைத்தாள்.

**''கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்**
**காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு**
**தாமின் புறுவர் உலகத்துத் தையலார்''**

என்று கூறினாள் தோழி. இதனால், காவிரிப்பூம்பட்டினத்தில் அந்த நாளிலே காமன் கோயில் இருந்ததென்றும், குலமாதர் அங்குச் சென்று வழிபடும் முறை இருந்ததென்றும் நன்றாக விளங்குகின்றன.

காதல் என்பது உணர்ச்சி; கற்பு என்பது ஒழுக்கம் உணர்ச்சியால் ஒன்றுபட்ட நம்பியும் நங்கையும் (தலைமகனும், தலைமகளும்) ஒருவரையொருவர் தமக்கே உரியவராகக் கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்.

சீதையின் காதலில் வைத்து இந்த உண்மையைக் காட்டுகின்றார் கம்பர். மிதிலை மாநகரத்தில் கன்னிமாடத்தின் மேடையிலே நின்ற சீதையும் விதியின் வழியாகச் சென்ற இராமனும் தற்செயலால் ஒருவரையொருவர் நோக்கினர். இருவர் கண்ணோக்கும் ஒத்தது. காதல் பிறந்தது. காதலர் இருவரும் ஒருவர் இதயத்தில் ஒருவர் புகுந்து உறவாடினர்.

காதலையன்றி மற்றோர் ஆடவனை மனத்திலும் கருத ஒருப்படாத உறுதியே கற்பு எனப்படும் இதையே திருவள்ளுவர் வியந்து பாடினார்.

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண் டாகப் பெறின்"**

என்பது அவர் திருவாக்கு.

கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு; மனத்திண்மையும உண்டு. பொறுக்கும் திறமும் உண்டு: மாறுபட்டோரை ஒறுக்கும் திறமும் உண்டு. சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகியிடம் இவ்விரு தன்மைகளையும் பார்க்கின்றோம்.

கண்ணகி மதுரை மாநகரில் தன் கணவனை இழந்தபோது வன்மையின் வடிவம் கொண்டாள்; கற்பெனும் திண்மை அவ்வடிவத்திலே களிநடம் புரிந்தது. அத்திண்மையைக் கண்டு திடுக்கிட்டான் அரசன்; அப்பால் அவள் பேசிய திடமொழியைக் கேட்டபோது மயங்கி விழுந்து மாண்டான். தவறு செய்த அரசனைக் கற்பின் திண்மையால் ஒறுத்த கண்ணகி, வீரபத்தினியாகத் தமிழ்நாட்டிலே போற்றப்பட்டாள். அன்று முதல் இன்றளவு கண்ணகி மாதர் குல மணிவிளக்காய் வீரக்கற்பின் விழுமிய கொழுந்தாய் விளங்குகின்றாள்.

## 12. கண்ணகிக் கூத்து

சிலப்பதிகாரம் என்னும் நாடகக் காவியம் தமிழ்நாட்டு மூவேந்தர்க்கும் உரியதாகும். கதைத் தலைவியாகிய கண்ணகி சோழ நாட்டிலே பிறந்தாள்; பாண்டிநாட்டிலே தன் கற்பின் பெருமையை நிறுவினாள்; பின்பு சேரநாடு போந்து வானகம் எய்தினாள். ஆகவே,

நாவலாசிரியர், சேர சோழ பாண்டியர்கள் ஆண்டு வந்த முந்நாட்டின் பெருமையையும் முறையாக எடுத்துரைக்கின்றார். இவ்வுண்மை,

> "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
> அடிகள் நீரே அருளுக"

என்று சீத்தலைசாத்தனார் இளங்கோவடிகளை நோக்கிக் கூறுமாற்றால் இனிது விளங்கும்.

மாந்தரை ஒழுக்க நெறியில் நிறுத்துதற்கு நாடகம் ஒரு சிறந்த கருவியாகும் என்பர்.

தமிழ்நாட்டு நாடக மேடையில் நடைபெறும் கோவலன் என்னும் நாடகம் பழந்தமிழ் காவியமாகிய சிலப்பதிகாரத்திலுள்ள சிறந்த கதையைத் தழுவி எழுந்ததாகும். ஆயினும் நாடகக் கண்ணகிக்கும் காவிய கண்ணகிக்கும் உள்ள வேற்றுமை புல்லுக்கும் நெல்லுக்குமுள்ள வேற்றுமையைப் போன்றது கோவலனைக் 'கோவிலன்' என்றும், கண்ணகியைக் 'கர்ணகி' என்றும் சிதைத்து வழங்கும் சிறுமை ஒருபுமிருக்க, கற்பின் கொழுத்தாகிய கண்ணகி, நாடகமேடையில் ஆவேசமுற்று வெறியாட்டயர்வதும் தவறிழைத்த பாண்டியன் மார்பை பிளந்து அவன் குடலை மாலையாக அணிந்து குருதியிலே திளைத்துக் கூத்தாடுவதும் அருவருக்கத்தக்க காட்சியன்றோ?

நாடகக் கண்ணகியின் தன்மை இவ்வாறாக காவியக் கண்ணகியின் செம்மையையும் மேன்மையையும் சிறிது காண்போம்; மதுரை மாநகரில் கோவலன் கொலையுண்டிறந்தான் என்றறிந்த கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து, நீதியை நிலை நிறுத்துமாறு அவன் மாளிகையினுள்ளே சென்றாள். காவி மலரனைய கண்கள் கண்ணீர் சொரிய, கருங்கூந்தல் விரிந்து கிடக்க, சிலம்பைக் கையிலேந்திக் கொற்றவன் முன்னே போந்த கண்ணகியின் கோலத்தை

> "மெய்ம்பிற் பொடியும் விரித்த கருங்குழலும்
> கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்"

என்று சிலப்பதிகாரம் உருக்கமாக உரைக்கின்றது. கண்ணீர் உகுத்து நின்ற கண்ணகியைப் பாண்டியன் குழைந்து நோக்கி, 'மனம் வருந்தி வந்த மாதே! நீ யார்?' என்று வினவினான்.

ஊழ்வினைப் பயனால் உன் நகரிற் புகுந்து, என் சிலம்பை விற்கப் போந்த வீதியில் உன் ஆணையால் கொலையுண்டிறந்த கோவலன் மனைவியே யான்" என்று கொதித்து கூறினாள். அப்பொழுது அரசன் "மாதே! கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று அது நீதியின் நெறியே யாகும்" என்று நேர்மையாய் உரைத்தான்.

கோவலன் குற்றமற்றவனென்றும், அவனைக் குற்றவாளி என்று கொன்ற கொற்றவன் தவறிழைத்தான் என்றும் ஐயந்திரிபற விளக்க வந்த கண்ணகி அரசனை நோக்கி, அரசே என் கணவன் கள்வனல்லன்; அவனிடம் இருந்த சிலம்பு அரண்மனைச் சிலம்பன்று அதன் இணைச் சிலம்பு இதோ, என் கையில் உள்ளது! இதனுள்ளே அமைந்த பரல் மாணிக்கம்'' என்று திறம்பட உரைத்தான். அப்பொழுது, மன்னவன் மனம் பதைத்து தன் காவலாளர் கோவலனிடமிருந்து கொணர்ந்த சிலம்பினை எடுத்துவந்து, கண்ணகியின் முன்னே வைத்தான். அச்சில்லரிச் சிலம்பைக் கண்ணகி தன் செங்கையால் எடுத்து நோக்கிக் காவலன் கண்ணெதிரே உடைத்தாள். சிலம்பின் உள்ளே இருந்த மாணிக்கம் விரைந்தெழுந்து அரியணை மீதமர்ந்திருந்த அரசனிடம் தானே நேராகச் சான்று பகர்வதுபோல் அவன் முகத்தில் தெறித்து விழுந்த மாணிக்கத்தைக் கண்டான் மன்னன், அந்நிலையில் அவன் வெண்குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது. ''பொற்கொல்லன் இதுகாறும் என் வழிமுறையில் இத்தகைய பிழை செய்தார் எவருமிலர் இன்றே என்னுயிர் முடிவதாக' என்று அவன் மயங்கி மண்மீது விழுந்தான் விழுந்த மன்னன் எழுந்தானல்லன்

**''தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்**
**பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்!**
**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**
**என்முதற் பிழைத்தது; கெடுகஎன் னாயுள் என**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே''**

என்று சிலப்பதிகாரம் இரங்கிக் கூறுகின்றது.

அரசியல் பிழைத்தோரை அறமே ஒறுக்குமென்றும், கற்பமைந்த மாதரை மக்களும் தேவரும் போற்றுவரென்றும், வினையின் பயனை விலக்கலாகாதென்றும், இவ்வுலக மாந்தர் அறிந்து வாழுமாறே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார் என்பது இதனால் இனிது விளங்கும் இவ்வுண்மைக்கு முற்றும் மாறாக, அரசியல் பிழைத்த பாண்டியன் அறத்தால் ஆவி துறவாது. கண்ணகியின் மறத்தால் ஆவி துறப்பதை நாடக மேடையிலே காண்கின்றோம்! கணவனான கோவலனை யன்றி ஆடவர் எவரையும் சிந்தையாலும் தொடர செம்மை வாய்ந்த கண்ணகி, பாண்டியன் மெய்தீண்டி, அவன் மார்பைப் பிளந்து உயிரைப் பருகப் பார்க்கின்றோம். இவ்வாறு, தமிழ்நாட்டு மன்னர் அறமும், மாதர் கற்பும் நிலை குலையுமாறு நிகழ்த்தப் பெறும் கூத்தைக் கண்டு கல்லார் நெஞ்சம் களிக்குமெனினும் பழந்தமிழ் நாட்டின் பெருமை பாழ்படுவதைக் கண்டு பயனறிந்தோர் வருந்துவர்.

## 13. சிலம்பின் காலம்

தமிழ்நாட்டார் போற்றும் ஐம்பெருங்காவியங்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம். பழந்தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் சான்றாக நிற்பது அப்பெருங்காவியம். சோழ நாட்டின் செழுமையும் பாண்டிய அரசாட்சியின் சிறப்பும் சேர நாட்டரசனது வீரமும் அக்காவியத்திலே விளங்க காணலாம்.

சிலப்பதிகாரத்தைப் பொது நோக்காகப் பார்க்கும்பொழுது தமிழ்நாடு சிறந்த நிலையில் இருந்த காலமே சிலப்பதிகாரக் காலம் என்று தோன்றுகிறது. சேர சோழ பாண்டியர்கள் தமிழ்நாட்டையாண்ட காலம் அது. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டின் சிறந்த துறைமுக நகரமாகத் திகழ்ந்தது.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டவன் ஒரு சிறந்த மன்னன் செங்குட்டுவன் என்பது அவன் பெயர். கற்புத் தெய்வமாகிய கண்ணகி தன் நாட்டில் வந்து விண்ணுலகம் அடைந்தாள் என்று அறிந்த செங்குட்டுவன், அவளுக்குத் தன் தலைநகரத்தில் ஒரு கோயில் கட்டினான்; இமயமலையிலிருந்து சிலை எடுத்து வந்து, கண்ணகியின் திருவுருவம் செய்து, அக்கோயில் நிறுவினான்; அத்திருவிழாவைக் காண அயல்நாட்டு அரசர் சிலரை அழைத்திருந்தான்.

**‘‘அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்**
**பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்**
**குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும்**
**கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்’’**

அங்கு வந்திருந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இலங்கையரசர் வரலாற்றைக் கூறும் ‘மகாவம்சம்’ என்ற நூலில் கஜபாகு என்னும் பெயருடைய மன்னர் இருவர் குறிக்கப்படுகின்றனர். முதல் கஜபாகு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாண்டவன். அவன் காலத்துக்கு ஏறக்குறை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு மற்றொரு கஜபாகுவே செங்குட்டுவன் காலத்தவன் ஆதல் வேண்டும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கொள்கை. எனவே, செங்குட்டுவன் அரசாண்ட காலம் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெளிவாகின்றது. அதுவே சிலப்பதிகாரத்தின் காலமும் ஆகும்.

## 14. அமுத சுரபி

இளவேனிற்காலம்; இளங்காற்று, இனிமையாக வீசுகின்றது. நீல வானத்தில் நிறைமதி எழுந்துவருகின்றது. இன்பமயமான அவ்வேளையில் மணிபல்லவம் என்ற தீவகத்தில் காட்சி தருகின்றாள் ஒரு மங்கை.

மணிமேகலை என்னும் பெயருடைய அந்நல்லாள் வெண்மணற்குன்றுகளையும், விரிபூஞ்சோலைகளையும் கண்டு வியந்து உலாவுகின்றாள். நன்மணம் கமழும் பூஞ்சோலையின் அருகே,

> **"மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய**
> **கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி"**

அவள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது.

பூம்பொய்கையின் அலைகளிலே மிதந்து, கரையை நோக்கி வருகின்றது ஒரு திருவோடு தன்னை நோக்கி தவழ்ந்து வந்த திருவோட்டைத் தலைவணங்கி, மலர்க் கரத்தால் எடுக்கின்றாள் மணிமேகலை. அத்திருவோடுதான் அமுதசுரபி; எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு கொடுக்கும் உயரிய பாத்திரம்; அதுவே, அறம் வளர்க்கும் அருங்கலம்; பசிப்பிணியை வேரறுக்கும் படைக்கலாம்.

இத்தகைய அமுத சுரபியைக் கைக்கொண்டு அற்றார்க்கும் அலந்தார்க்கும் தொண்டு செய்ய ஆசைப்பட்டாள் மணிமேகலை; "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்னும் உண்மையை உள்ளத்திற்கொண்டு அருளறம் புரியத் தொடங்கினாள். வருந்த வந்தவர் அரும்பசி களைந்து, அவர் திருந்திய முகங்கண்டு திளைத்தாள் அவள் ஆற்றிய பணியால் தமிழகத்தில் பசிப்பிணி ஒழிந்தது.

தம் பெருமை தாமுணராதத் தன்மையராய்த் தமிழர் இன்று தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள் அவர்களைத் தட்டி எழுப்பி, தமிழ் அமுதை ஊட்டி,

> **"தமிழன் என்று சொல்லடா!**
> **தலைநிமிர்ந்து நில்லடா!"**

என்று ஊக்குதலே அமுதசுரபி செய்தற்குரிய அருஞ்சேவையாகும். 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' என்று மணிமேகலையின் கையில் அமைந்த அமுதசுரபியை அன்று வாழ்த்தினாள் ஆதிரை என்னும் நல்லாள். தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னையம்பதியிலே இன்று எழுகின்ற தமிழ் மயமான 'அமுதசுரபி' யைத் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவு வகை செய்க என்று வாழ்த்துகின்றோம்; வரவேற்கின்றோம்.

## 15. மாதரும் மலர்ப் பொய்கையும்

மலர் நிறைந்த பொய்கையும் மீன் நிறைந்த வானமும் எஞ்ஞான்றும் கவிஞர் மனத்தைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவனொளியால் களித்து விரியும் கமல மலையைக் காணும்பொழுது கவிஞரின்

உள்ளமும் மலர்வதாகும். இத்தகைய இயற்கை அழகினை மாந்தி இன்புற்ற கவிஞர் தரும் காட்சிகளைப் பார்ப்போம்.

நீலத்திரை விரித்த வானத்திலே, கதிரவன் ஒளி வீசிஎழுந்தான். கண்களை கவரும் அழகு வாய்ந்த கமல மலர்களில் கள்ளுண்டு களிக்கப் போந்த கருவண்டுகள் பொய்கையின்மீது சுற்றிச் சுழன்று இன்னிசை பாடின. பகலவன் ஒளியால் இதழ் விரிந்து இலங்கிய செங்கமல மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிதமர்ந்திருந்தது. காலைப்பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்து அன்னம் தெள்ளிய திரைகள் தாலாட்டக் கமலப் பள்ளியில் இனிது துயின்றது.

இத்தகைய பொய்கையில் நீலத் துகிலுடுத்த ஒரு மங்கை நீராடச் சென்றாள். அவ் அழகிய ஆடையில் குயிற்றிய செம்மை சான்ற மணிகளிலே கதிரவன் ஒளி வீசிய பொழுது அம்மணிகளினின்று எழுந்த நிழற்சுடர் பொய்கையின் மீது விழுந்து நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. அச்சுடர்களைச் சேய்மையிலிருந்து கண்ட மட அன்னம் ஒன்று விரைந்தோடிச் சென்று ஆர்வத்தால் கவ்விற்று மணிகளின் நிழலாகிய சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை நினைந்து நாணிய அன்னம், வந்த வழியே வெட்கமுற்று விரைந்து சென்றது இத்தகைய இனிய இயற்கைக் காட்சியை

**"நீலத் துகிலிற் கிடந்த**
**நிழலார் தழலம் மணிகள்**
**கோலச் சுடர்விட் டுமிழக்**
**குமரி அன்னம் குறுகிச்**
**சால நெருங்கிப் பூத்த**
**தடந்தா மரைப்பூ வென்ன**
**வாலிச் சுடர்கள் கவ்வி**
**அழுங்கும் வண்ணம் காண்மின்"**

என்று கவிஞர் நயம்படப் பாடினார்.

## IV. கற்பனை இன்பம்

### 16. முருகனும் முழுமதியும்

அந்தி மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையிலமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளித்து மலர்ந்தது மலையத்தெழுந்த இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த அந்திப் பொழுதில், தென்மலைச் சாரலில் மகிழ்ந்து விளையாடிய முருகனென்னும் குமரன், விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக் கண்டு

குறுகுறுநடந்து, சிறுகை நீட்டி, முகம் மலர்ந்து அளவிலா இன்பமுற்றான். குறுநடை பயிலும் முருகனைக் கூர்ந்து நோக்கி, வெண்ணிலாவும் நகை முகம் காட்டுவதாயிற்று தன்னை நோக்கி, முகம் மலர்ந்த தண்மதியை, அருகே போந்து விளையாட அழைத்தான் முருகன். மழலை மொழிகளால் நெடும்பொழுது வருந்தியழைத்தும் வான்மதி வாராதிருக்கக் கண்டு முருகன் கண்பிசைந்து அழுது கரைந்தான்.

இளநலம் வாய்ந்த முருகன் விம்மித் தேம்பி அழுவதைக் கண்டு ஆற்றாத முனிவர் ஒருவர் அவ்விடம் விரைந்து போந்து, வெள்ளை மதியில் ஊன்றிய பிள்ளையின் கருத்தை மாற்றப் பலவாறு முயன்றார். வெண்ணிலா வீசும் விண்மதியே! முருகனைப் போலவும் நீயும் அமுதமயமாய் விளங்குகின்றாய்; கண்டோர் கண்ணையும் மனத்தையும் குளிர்விக்கின்றாய்: உயிராகிய பயிர் தழைக்க உயரிய அருள் சுரக்கின்றாய். இவ்வாறு பல கூறுகளில் முருகனை நிகர்க்கும் நீ அவனோடு விளையாட வா'' என்று முனிவர் நயந்து அழைத்தார்.

இங்ஙனம் ஒப்புமை காட்டி உவந்தழைத்தும் இரங்காத மதியின் நிலைகண்டு வருந்தினான் குமரன். அது கண்ட முனிவர், மதியின் சிறுமை காட்டி இடித்துரைக்கத் தொடங்கினார்.

தாம் உரைத்த மொழிகளைச் சிறிதும் நெஞ்சில் கொள்ளாது செருக்குற்று விண்ணிலே தவழ்ந்து சென்ற விண்மதியையும், அம்மதியை மறந்து மற்றொன்றைக் கருத மனமற்றிருந்த முருகனையும் கண்ட முனிவர் செய்வதொன்றுமறியாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அந்நிலையில் முருகனை வீட்டில் காணாத அவன் தந்தை; 'முருகா முருகா' என அழைத்துக் குன்றின் சாரலை வந்தடைந்தார்; கரும்பாறையின் மீது முனிவரும் குமரனும் அமர்ந்திருக்கக் கண்டார்; முருகனை விரைந்தெடுத்து ஆர்வமுற அணைத்துக் கண்ணீர் துடைத்து அழகொழுகும் அவன் திருமுகத்தை அமர்ந்து நோக்கி 'என் கண்ணே! கண்மணியே! நீ ஏன் எழுதாய்? தேனும் தினையும் வேண்டுமா? பாலும் பழமும் வேண்டுமா? என்று விருப்புடன் வினவி முத்தமிட்டு நிமிர்ந்த அத்தனது சடையிலமைந்த பிறைமதியை முருகன் கண்டு கொண்டான்; தன் விருப்பத்திற்கிணங்கி வந்தடைந்த தண்மதியைக் கண்டு உள்ளம் தழைத்தான்; தந்தையின் தோளில் ஏறியமர்ந்து கற்றைச் சடையின்மீது இலங்கிய குழவித் திங்களைத் தன் இளங்கரத்தால் வளைத்திழுத்தான். தண்மதியைச் சார்ந்த முருகனது இளநலம் முன்னிலும் சிறந்து இலங்கிற்று. விண்மதியின் தண்மையையும் வெண்மையையும் கண்டு, முருகன் மனங்களித்தான்; மதியின் வட்ட வடிவத்தைத் தன் முகத்தோடு ஒட்டிப் பார்த்தான்; அதன் மேனியிலமைந்த மறுவைத் தன் மலர்க் கரத்தால் துடைத்தான். மதியுடன் விளையாடிய மைந்தனைக் கண்டு தந்தையார் மனங் குளிர்ந்தார். இறையனார் செயல்கண்டு இன்பக் கண்ணீர்

சொரிந்த முனிவர், 'யாவர்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?' என்று பாடிப் பரவினார்.

## 17. பயிர் வண்டும் படர் கொடியும்

திருக்குற்றால மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த வேங்கைமரம் விண்ணளாவி நின்றது. அதன் கிளைகளில் ஒரு மெல்லிய பூங்கொடி பின்னிப் படர்ந்திருந்தது. மஞ்சு தோய நின்ற வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச் சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவர்வதாயிற்று. பொன்மலர் பூத்த அவ்வேங்கையின் கொம்புகளில், குயில்கள் மணந்து மகிழ்ந்தன, வண்டினங்கள் இசைபாடி நறுமலர்களின் தேனை மாந்தித் திளைத்தன.

**"தீங்கு யில்ம ணந்துதேன் துஞ்ச வண்டு பாண்செய**
**வேங்கை நின்று பொன்உ குக்கும்"**

என்று சிந்தாமணிக் கவிஞர் வியந்துரைத்த இயற்கையழகு அங்கே காட்சியளித்தது.

அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒளி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தால் கருதுமுன்னமே கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப்பட்டது. வெறிகொண்ட சூறையில் அகப்பட்ட வேங்கை மரம் வேரோடு சாய்ந்து அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வேங்கை சாய்ந்து ஆற்றில் விழுந்த போது அதனைச் சுற்றி படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரோடு பெயர்ந்து அம்மரத்துடன் மயங்கி விழுந்தது. அவ்வேங்கையில் இனிய தேனுண்டு திளைத்த வண்டுகள் மரத்தொடு பூவும் மாளக் கண்டு ஆர்த்தெழுந்து அயல்நின்ற மற்றொரு மரத்தில் சென்று சேர்ந்தன. இதனை நோக்கியபோது மருவுண்டு மயங்கும் வண்டின் இழிகுணம் எம்மனத்தை வாட்டி வருத்தியது.

குலமாதா நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்புநோக்கிக் கம்பர் அமைந்துள்ள கற்பனை, அழகு வாய்ந்ததாகும்.

பொருளையே விரும்பும் போது மாதர் உள்ளத்தில், அன்பெனும் பகை அணுவளவும் இராது என்று அறிஞர் கண்டு உணர்த்தியுள்ளார்கள். அத்தன்மை வாய்ந்த பெண்டிரை,

**"நறுந்தா துண்டு நயனில் காலை**
**வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவர்"**

என்று மணிமேகலை ஆசிரியர் குறித்துப் போந்தார்.

## 18. நல்ல மரமும் நச்சு மரமும்

ஒரு நாள் ஓர் அரசிளங்குமரன் தன் தோழனைத் துணைக் கொண்டு கானகத்தில் வேட்டையாடச் சென்றான். அங்கு, அவன் விரும்பியவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால் எங்கும் அலைந்து திரிந்து அல்லலுற்றான். பசியால் மெலிந்து, வெயிலால் உலர்ந்து, இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள்; அப்போது, நெடுந்தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக் கண்டு, அவ்வூரை நோக்கி மெல்ல நடந்து செல்வாராயினர். அவ்வழியில், இளந்திரைகளோடு இலங்கிய நன்னீர்ப்பொய்கையொன்று அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் துயின்ற நல்லன்னத்தைக் கண்ட இளவரசன் துணைவனை நோக்கி,

“தோயும் திரைகள் அலைப்பத்
தொடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும்
வெள்ளை யன்னம் காணாய்”

என்று தான் பெற்ற இன்பத்தை இனிது எடுத்துரைத்தான். அவ்வாவியின் தன்மையும் செம்மையும் கண்ட இருவரும், தாய்முகம் கண்ட சேய் போல் மனம் களித்து அந்நன்னீரைப் பருகி மகிழ்ந்தார்கள். அவ்வாவியின் அருகே கொத்துக் கொத்தாகப் பொன்நிறக் கனிகளைத் தாங்கி, குளிர் நிழல் விரிந்து நின்ற மரமொன்றைக் கண்டார்கள். அதன் நிழலிலே தங்கி இளைப்பாற எண்ணி இருவரும் அங்குச் சென்றார்கள். மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கையில் அரசகுமாரனது தலை நோய் மிகுந்தது. அதனைத் தீர்க்கும் வகையறியாது தோழன் திகைத்து ‘எவரேனும் இவ்வழி வாராரோ’ என்று எதிர்நோக்கி இருந்தான்.

இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி ஒரு முதியவன் வந்து சேர்ந்தான். “தலைக் குத்துத் தீர்க்கும் மருந்து தங்களிடம் உண்டா?” என்று தோழன் அவனை வினவினான் அப்பொழுது முதியோன் புன்னகை பூத்து, “கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன். இம்மரத்தின் பட்டையில் சிறிது செதுக்கி, அதன் சாற்றைத் தலையில் பிழிந்தால் எவ்வகைத் தலைக்குத்தும் தீர்ந்துவிடுமே” என்று சொல்லி அப்பால் சென்றான். அதை அறிந்த தோழன் அளவிலா மகிழ்வடைந்து அம்மரப்பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையில் பிழிந்தான். சிறிது நேரத்தில் அரசிளங்குமரனது தலைக்குத்து அறவே ஒழிந்தது.

அப்பால், இருவரும் தமது ஊரை நோக்கிச் சென்றனர்; செல்லும் வழியில் ஒரு சிற்றூர் குறுக்கிட்டது. அதன் நடுவே போகும்போது இருவரும் முன் கண்டறியாத ஒரு

மரத்தினைக் கண்டு வியந்துநின்றார்கள். அம்மரம் சுவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம் போல் ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும், கிளைகளிலும் கூரிய முள் நிறைந்திருந்தது. இலைகளும், தழைகளும் இல்லாமல் பட்ட மரம் போல் நின்ற அதன் கிளைகளில் செவ்வையாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக் கொத்தாய் அமைந்து கண்களைக் கவர்ந்தன. அவ்வழியாக ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான்.

அவன், மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கி “ஐயா நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை அறிந்தேன். ஏனெனில் இவ்வூரார் எவரும் இப்பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். உண்டாரைக் கொன்றுவிடும் இம்மரத்தின் கொம்புகளை விறகாய் வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறாயிருக்கின்றது. “இம்மரம் விழுமோ, அன்றே இவ்வூரார்க்கு நன்றாகும்” என்று அதன் தன்மையை விரிவாகக் கூறி முடித்தான்.

அதைக்கேட்ட அரசிளங்குமரன் முன்னே தங்கி இளைப்பாறிய மரத்தின் நலத்தையும், பின்னே கண்ட மரத்தின் கொடுமையையும் ஒப்பு நோக்கி, நச்சு மரத்தில் அமைந்த தன்னிறக் கனிகள், பேதையர் கைப்பட்ட செல்வம் போல் பிறர்க்கு இடர் விளைப்பனவாகும் என்று எண்ணி வருந்தினான்.

**“நச்சுப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று”**

என்னும் பொய்யா மொழியின் பொருளைத் தெரிந்தான்.

## 19. சிவனடியார் முழக்கம்

காலைப்பொழுது தேர் ஓடும் திருவீதியில் பெருமுழக்கம்; “திருச்சித்தொண்டர் சங்கம் வாழ்க! வாழ்க!” “சிவனடியார் திருக்கூட்டம் - வெல்க! வெல்க! “பசியின் கொடுமை, வீழ்க! வீழ்க! என்று இரைந்துகொண்டு சென்றது ஒரு திருக்கூட்டம். இடையிடையே ‘பம் பம்’ என்று ஆயிரம் சங்குகள் சேர்ந்து ஒலித்தன.

அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் பல்லாயிரவர்; அவர்கள் கையிலே திருவோடு; மெய்யிலே திருநீறு; கழுத்திலே தாழ்வடம்; இடுப்பிலே கந்தைத்துணி: அப்பண்டாரப் படையைப் பார்ப்பதற்கு ஊரெல்லாம் திரண்டு எழுந்தது.

ஊருக்கு மேற்கே ஒரு பூந்தோட்டம்; அங்கே போய்ச் சேர்ந்தது திருக்கூட்டம். தலைவர் சுந்தரமூர்த்தி எழுந்து நின்றார் தொண்டர்கள் கைதட்டி ஆரவாரித்தனர் தலைவர் தலைவணங்கிப் பேசலுற்றார்.

“தோழர்களே! திருத்தொண்டர்களே! நெடுங்காலமாக நமது சங்கம் உறங்கிக் கிடந்தது. ஆயினும் இன்று விழித்துக் கொண்டோம்; ஒற்றுமைப் பட்டோம் திருத்தொண்டர் படை திரண்டு எழுந்துவிட்டது. இதைத் தடுக்க வல்லவர் இவ்வுலகில் உண்டோ?

திருவோடு எழுதிய கொடியைக் கையில் எடுத்து முன்னே சென்றார் சுந்தமூர்த்தி பரமசிவனுடைய இருப்பிடத்தை நோக்கிப் பண்டாரப் படை நடந்தது. ஒரு பழங்காட்டினுள்ளே இருந்தார் பரமசிவன் அக்காட்டைக் காத்து நின்றான் நந்தி என்ற சேவகன்.

நந்தியின் பேச்சால் சுந்தரத்தின் மன உறுதி உலையவில்லை. பரமசிவனைப் பார்த்தே தீரவேண்டும் என்று வற்புறுத்தினார். சுந்தரம் சென்றார்; பரமசிவனைக் கண்டார்; கைதொழுதார்; திருத்தொண்டர் படும்பாட்டை உருக்கமாக எடுத்துரைத்தார்.

சுந்தரத்தையும் அவருக்குப் பின்னே ஐந்தைந்து பேராக அணிவகுத்து நின்ற அடியாரையும் நோக்கி, தோழர்களே’ என்றார் அச்சொல்லைக் கேட்ட தொண்டர்களும் ஆனந்தவாரியில் மூழ்கிற்று ‘தொண்டர் நாதனே போற்றி அடியார்க்கு எளியனே போற்றி’! என்ற வாழ்த்துரை எழுந்தது. ஆரவாரம் அமர்ந்தவுடன் பரமசிவன் பேசலுற்றார்.

அடியார் முகம் மலர்ந்தது “ஆண்டவன் கருணை வாழ்க! வாழ்க!” என்று வாழ்த்தினர்.

> **“ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
> **சூழ்க; வையகமும் துயர் தீர்கவே”**

என்று பாடிக்கொண்டு திரும்பினர்.

## 20. சரம கவிராயர்

காவேரியாற்றின் கரையிலுள்ள தோணிபுரியிலே பிறந்தான் பொன்னப்பன். அவன் தந்தை தமிழறிந்தவர்; தாய் பழங்கதை சொல்வதில் பேர் பெற்றவள். பொன்னப்பனை ஒரு பெரிய கவிராயனாக்கி விடவேண்டும் என்பது தந்தையின் ஆவல் காலையில் நாலரை மணிக்கே தந்தை பையனை எழுப்பிவிடுவார்; சாலை வழியாக ஆற்றங்கரைக்கு அழைத்து செல்வார்; வழியெல்லாம் நிகண்டும் நன்னூலும் வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுப்பார். தலைகால் புரியாமல் பொன்னப்பன் கிளிப்பிள்ளைபோலத் தூக்க மயக்கத்திலே பாடம் சொல்லிக்கொண்டு போவான்.

பள்ளிக்கூடப் படிப்பில் பொன்னப்பன் தந்தைக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. பாட்டுப் பாடவேண்டும் என்னும் ஆசை அவனைப் பற்றிக் கொண்டது.

முதலில் எல்லார்க்கும் படியளக்கும் கடவுளின் மீது பாட்டுக் கட்டுவதே முறையென்று பொன்னப்பனுக்கு தோன்றியது. வளமாகச் சோறும் கறியும் தரும்படி அவன் சிவபெருமானைப் பாடினான்.

**“கற்பனை கடந்தவன், கறிசோறு தருபவன்**
**வெற்பினில் உறைபவன், வெஞ்சனம் அளிப்பவன்.**
**சற்பத்தை அணிபவன், சாப்பாடும் தருபவன்**
**நற்பதம் பணிவேன், நான்பசி தணிவேண்”**

என்று தொடங்கி, அறுசுவை உண்டிக்குப் பத்துப் பாட்டுப் பாடி முடித்தான். அப்பாட்டுக்கு அகட்டுத் திருப்பதிகம் என்று தலைப்பிட்டுத் தந்தையிடம் கொண்டு போனான் பொன்னப்பன் பாடிய முதற்பாட்டு அன்னப் பாட்டாயிருக்கக் கண்டு தந்தை ஆனந்தமடைந்தார்.

அன்னப் பாட்டுப் பாடிய புகழ்பெற்ற பொன்னப்பக் கவிராயர் அன்று முதல் ஆயிரம் ஆயிரமாகப் பாடித் தள்ளினார். அவரது கவியின் பெருக்கத்தை கண்டவர்கள், கம்பருக்கும் காளிதாசருக்கும் அருள் செய்த காளியே அவருடைய நாவிலும் குலத்தால் எழுதிவிட்டாள் என்று வெளிப்படையாகப் பேசினார்கள். காலம் செல்லச் செல்லக் கவிராயர் புகழ் ஏறிக்கொண்டே போயிற்று. கவிராயருக்கு ‘நாக பந்த நாயகம்,’ ‘சரமகவிச் சிங்கம்’ முதலிய பட்டங்கள் வலிய வந்து சேர்ந்தன. ஆயினும், பெரிய ஆசை ஒன்று அவர் மனத்திலே குடிகொண்டிருந்தது. பதினாயிரம் பாட்டுப் பாடிய கம்பர். கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்றால், அறுபதினாயிரம் கவி பாடிய பொன்னப்பர் ஏன் அப்பட்டம் பெறக்கூடாது என்பது அவர் கேள்வி.

“சிதம்பரத்தில் ஆனித்திருமஞ்சன விழாவிற்கு அடுத்த நாள், ஆயிரக்கால் மண்டபத்தில் தோணுபுரித் தோன்றல் ஸ்ரீ பொன்னப்பக் கவிராயருக்குக் கவிச் சக்கவர்த்திப் பட்டம் கொடுக்கப்படும்” என்று சபாரஞ்சித தீட்சிதர் ஆயிரம் பேருக்கு அறிக்கையும் அழைப்பும் அனுப்பினார்.

சந்தனப் பூச்சுடனும் கொட்டு முழக்குடனும் வித்வ சபை கலைந்தது. கவிச் சக்கரவர்த்திப் பட்டம் பெற்ற சாமகவிராயர் பட்டுச் சால்வையோடு நடராஜரைத் தரிசித்து விட்டுத் தம் இருப்பிடம் சென்றார்.

## V. அறிவும் திருவும்

### 21. காயும் கனியும்

மலை வளமுடைய தமிழ்நாட்டில் முற்காலத்தில் அருந்தவம் முயன்ற முனிவர்கள் காய்கனிகளையே அருந்தி வந்தார்கள். தமிழ் முனிவன் வாழும் பொதியமலையில்

பன்னீராண்டு முனிவர் ஒருவர் கடுந்தவம் புரிந்தார். நெடுந்தவம் முடிந்த நிலையில் பசியின் கொடுமையறிந்த முனிவர், அம்மலையிலிருந்து ஒரு நாவல் மரத்தின் நற்கனியைக் கொய்து அதைத் தேக்கிலையில் பொதிந்து, அருகேயிருந்த ஆற்றை நோக்கிச் சென்றார். பன்னீராண்டுக்கு ஒருமுறை பழுக்கும் பெருமை வாய்ந்த அக்கனியை ஆற்றங்கரையில் வைத்து விட்டு நீராடப் போந்தார் முனிவர் அப்பொழுது அவ்வழியாகத் தன் காதலுடன் களித்து விளையாடி வந்த ஒரு சிறுமி அக்கனியைக் காலால் மிதித்துச் சிதைத்தான். அரும்பசி தீர்க்கும் அமுதக்கனி சிதைந்தழியக் கண்ட தவமுனிவர் சீற்றமுற்றுப் 'பன்னிரண்டு நீ கடும்பசியால் நலிந்துழல்க' என்று பிழைசெய்த பேதையைச் சபித்தார். அச்சாபத்தின் வலிமையால் அன்று முதல் வயிறு காய்ந்து வருந்திய மங்கை பன்னீராண்டு பசியால் வருந்திய பின்பு அமுத சுரபியினின்று மணிமேகலை வழங்கிய அன்னத்தை உண்டு பசி தீர்ந்தாளென்று பழஞ்சரிதை கூறுகின்றது.

அமுதம் காக்கும் நெல்லிக்கனி தமிழகத்தில் உண்டு என்பதை அறிந்தான் அதியமான் என்ற சிற்றரசன். பல்லாண்டுகளுக்கு ஒருமுறை பழுக்கும் பான்மை வாய்ந்த அந்நெல்லிக்கனியின் வண்ணத்தை வள்ளல் அங்கையில் வைத்து நோக்கி அகமகிழ்ந்திருக்கையில், சொல்லின் செல்வியாகிய ஔவையார், செந்தமிழ்க் கவி பாடி அவன் முன்னே சென்றார். அப்பாட்டின் கலையைச் செவி வாயாகப் பருகிய அதியமான் மது உண்டவன்போல் மகிழ்வுற்றான். அதிமதுரக் கவி பாடிய ஔவையார்க்கு அமுதம் பொழியும் நெல்லிக் கனியே ஏற்ற பரிசென்று எண்ணி, அங்கையில் இருந்த கனியை அவரிடம் அகமலர்ந்தளித்தான்.

பலநாள் முயன்று வருந்திப் பெற்ற அருங்கனியைத் தானருந்தி இன்புறக் கருதாது, பாடிவந்த கிழவிக்கு அதனைப் பரிசாக அளித்த வள்ளலின் அருங்குணத்தை ஔவையார் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினார்.

**"நீல மணிமிடத்து ஒருவன்போல**
**மன்னுக பெரும நீயே தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத் தடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கீத் தனையே"**

என்று நிறைந்த மொழிகளால் ஔவையார் அருளிய வாழ்த்துரையில் கருநெல்லிக் கனியின் வரலாறும் அதனை அன்புடன் அளித்த அதிகமானது வள்ளன்மையும் ஒருங்கே விளங்கக் காணலாம். இத்தகைய கனியினைப் பெற்றும் அதனைத் தானருந்தி நெடுங்காலம் வாழவிரும்பாது, தக்கார்க்கீந்து இன்பமற்ற வள்ளலை ஈன்ற தமிழ்நாடு அறநெறியில் தலைசிறந்ததென்பதில் ஐயமுண்டோ?

## 22. சேரனும் கீரனும்

சேரநாட்டை ஆண்டுவந்த பெருஞ்சேரல் என்ற அரசன் ஆண்மையிலும் வண்மையிலும் சிறந்து விளங்கினான். இத்தகைய கீர்த்தி வாய்ந்த சேரமானது கொடைத் திறத்தினைக் கேள்வியுற்ற மோசிக்கீரனார் என்ற தமிழ்ப்புலவர். அம்மன்னனிடம் பரிசு பெற்றுப் பசிப்பிணி அகற்றக் கருதி, நெடுவழி நடந்து அரண்மனை வாயிலை நண்ணினார். அப்பொழுது சேரமான் ஓர் அணிவிழா காணுமாறு வெளியே சென்றிருந்தான். ஆயினும் அரண்மனை வாயில் அடையாதிருந்தமையால் கீரனார் இடையூறின்றி உள்ளே சென்றார்.

மன்னனுக்குரிய மாளிகையின் அழகையும் அமைப்பையும் கண்குளிர கண்டுகளித்தார். நெடும் பசியால் நலிந்து, வெயிலால் உலர்ந்து, வழிநடையால் வருந்தித் தளர்வுற்ற தமிழ்ப்புலவர், அரண்மனையில் இருந்து இளைப்பாற எண்ணினார். மாளிகையின் ஒருபால் அழகிய மஞ்சம் ஒன்று தோன்றிற்று. அதன் மென்மையை அறிய விரும்பி அணுகிய புலவர் மெய்மறந்து அதன்மீது சாய்ந்தார்.

தந்தை உடுத்த செந்தமிழ்ப் புலவர் இவ்வாறு கவலையற்று உறங்குகையில் சேரமான், தானைத் தலைவர் புடைசூழத் தன் மாளிகையை வந்தடைந்தான். அரண்மனை ஒடுக்கத்தில் போந்து இளைப்பாறக் கருதி வீர முரசகத்திற்குரிய மணி மஞ்சமாடத்தின் வழியே சென்றான்; அங்கே பழுத்த மேனியும் நரைத்த முடியும் வாய்ந்த பெரியார் ஒருவர் தளர்ந்து கண்வளரக் கண்டான். அவரது முகத்தின் விளக்கத்தால் அவர் வாக்கில் ஒளியுண்டெனத் துணிந்தான்; அவரணிந்திருந்த பழுதுற்ற உடையினைக் கண்டு பூமகளால் புறக்கணிக்கப்பட்டார் எனத் தெளிந்தான்.

> "இருவே றுலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்னும் பொருளுரையை நினைத்துப் பொருமினான். அருந்தமிழறிந்த புலவரது மேனி தோய்ந்ததால் வீரமணி மஞ்சம் புனிதமுற்றதெனக் கருதி மனமகிழ்ந்தான்; அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த பாவலர்க்குப் பணி செய்யக் கருதி, மஞ்சத்தின் அருகே கிடந்த பெருங்கவரியைத் தன் வலக்கையால் எடுத்து வீசிநின்றான்.

உறக்கம் தெளிந்த கீரனார் தளர்வு தீர்ந்து கண்விழித்தார். மெல்லிய மஞ்சத்திலே தாம் படுத்திருப்பதையும், காவலன் அதனருகே நின்று கவரி வீசுவதையுங்கண்டு உள்ளம் பதைத்தார். பாவலர் மனமும் மெய்யும் வருந்தக் கண்ட சேரமான், அன்புடன் அமர்ந்து நோக்கி, மென் மொழி பேசி, அவர் மனத்திலிருந்த அச்சத்தை மாற்றினான்.

செந்தமிழ் இன்பமே சிறந்த இன்பமெனக் கருதிய கீரனார் சேரமான் செவி குளிர புகழ்ந்து அவனடிகளில் விழுந்து வணங்கினார். தமிழ்ச் சொல்லின் சுவையறிந்த சேரமான்

அடிபணிந்த புலவரை ஆர்வமுற எடுத்தணைத்து, பல்லாண்டு அவர் பசி நோய் அகற்ற போதிய பரிசளித்து விடை கொடுத்தனுப்பினான்.

## 23. பாரியும் மாரியும்

பழந்தமிழ் நாட்டில் வரையாது பொருள் வழங்கும் வள்ளலார் பலர் வாழ்ந்து வந்தனர். அன்னவருள் தலைசிறந்தவன் பறம்புமலை கோமானாகிய பாரி இயற்கை வளஞ்சான்ற பறம்புமலை நாட்டில் நெல்லும் கனியும், தேனும் கிழங்கும் நிரம்பக் கிடைத்தமையால் குடிகள் கவலையற்று வாழ்வாராயினர்.

பசியும் பகையும் இன்றி, வசியும் வளனும் பெருகிய அம்மலையின் மீது அமைந்த அரண்மனையில் கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி.

அற்றார்க்குப் பொருள் வழங்க அவர் இன்முகம் கண்டு இன்புற்ற பாரியை,

**''பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே''**

என்று பொய்யறியாக் கபிலர் போற்றிப் புகழ்ந்தார். ''மண்ணுலகைப் பாதுகாத்ததற்கு மாரியும் உண்டென்பதை மறந்த, பாரி ஒருவனையே புலவர் அனைவரும் போற்றிப் புகழ்கின்றார்களே'' என்று கவிஞர் அவ்வள்ளலை இகழ்வார்போல் புகழ்ந்துள்ள நயம் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

இவ்வாறு பாரி ஒருவனைப் பலரும் புகழக்கண்ட பாண்டியனும் மற்றைய இருபெரு வேந்தரும், பெரிதும் அழுக்காறு கொண்டு அவனது பறம்பைத் தம் படையால் முற்றுகையிட்டார். பலநாள் முற்றியும் பாரியின் பறம்பைக் கவர இயலாது காவலர் மூவரும் கலக்கமுற்றனர்.

தண்ணளி வாய்ந்த வள்ளலை வஞ்சனையால் கொன்று மூவேந்தரும் அழியாப் பெரும்பழி யெய்தினர். பாரியைக் கொன்று பறம்பைக் கைப்பற்றிய பகைவேந்தர் செயல்கண்டு மனம் பதைக்க பாரி மகளிர்,

**''அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**
**எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தாளம்**
**குன்றும் கொண்டார்யாம் எந்தையு மிலமே''**

என்று இரங்கிக் கூறும் மொழிகள் உள்ளத்தை உருக்குவனாம்.

பாரியின் பொன்றாப் பெருமை பார் எங்கும் பரவுதற்குரியதாகும். வில்லுக்கு விசயன் என்றும் விறலுக்கு வீமன் என்றும் உலகம் விதந்துரைத்தல் போல, பசித்தோர்க்குப் பாரி என்று பாரெல்லாம் போற்றுதற்குரிய பெருமை அவ்வள்ளலிடம் அமைந்திருந்தது.

## 24. அழகும் முத்தும்

தமிழ்நாட்டிலே புலவர் பாடும் புகழுடையார் என்றும் உள்ளார். அனைவருள் ஒருவர் ஐம்பதாண்டுக்கு முன்னே நெல்லையம் பதியில் வாழ்ந்தார். அவர், முத்தமிழ்ச் சுவை நேர்ந்த வித்தகர்; முத்துச்சாமி என்னும் பெயரினர். அந்நாளில் ஆக கவியாய் விளங்கிய அழகிய சொக்கநாதர் அவ்வள்ளலின் ஆதரவைப் பெற்றார்.

ஒருநாள், அச்செல்வர், அழகிய சொக்கருடன் உலாவி வரும்பொழுது, கரும்புத் தோட்டத்தின் அருகே கான மயில் ஒன்று ஆடக்கண்டு களிப்புற்று நின்றார்.

அந்நிலையில் அழகிய சொக்கரை நோக்கிக் கரும்புக்கும் கான மயிலுக்கும் பொருந்தும் கவியொன்று பாடும்படி அவர் வேண்டினார். கவிஞரும் அக்காட்சியைக் கண்டு களிப்புற்று உடனே பாடலுற்றார்.

**''மேனியெல்லாம் கண்ணுறவால் வேள்விரும்பும் தன்மையினால்**
**ஆனபசுந் தோகையினால் ஆடலினால் - முனவன்நேர்**
**மானபரா! நெல்லைநகர் வாழமுத்துச் சாமிமன்னா!**
**கானமயில் ஒப்பாம் கரும்பு''**

என்ற சொக்கர் பாட்டின் சுவையறிந்து இன்புற்றார் வள்ளல்.

முத்தமிழ் அறிந்த முத்துசாமி வள்ளல் மகிழ்ந்து அளித்த பரிசுகளைத் சொக்கர் நன்றியுடன் பெற்றுக் கொண்டாரேனும் பொருள் ஒன்றையே அவர் கருதியவரல்லர்; வருவாய் மாசம் பத்து வந்தாலும் அதனையே மா சம்பத்தாகக் கொள்ளும் மனப் பண்பு உடையவர்.

வாக்கு வளம் உடைய அழகிய சொக்கர், நெல்லையம் பதியிலே கோயில் கொண்டுள்ள காந்திமதியம்மையின்மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார்.

காந்தியம்மை முன்னிலையில் பிள்ளைத் தமிழ் அரங்கேறியவுடன் வள்ளல் தாம் அணிந்திருந்த வயிரக் கடுக்கனைக் கழற்றிக் கவிஞர் காதிலே மாட்டி மகிழ்ந்தார். ''செவிக் செல்வமே செல்வத்துட் செல்வம்'' என்று அக்கடுக்கனைப் புகழ்ந்து பரிசளித்த வள்ளலை வாயார வாழ்த்தினார் சொக்கர்.

## 25. வண்மையும் வறுமையும்

பழந்தமிழ்நாட்டு வள்ளல்களாய் விளங்கிய பாரியும் ஓரியும், ஆயும் அதியனும் மலையனும் பேகனும் மாண்ட பின்னர், முதிர்ந்த வளமுடைய முதிர மலைத் தலைவனாகிய குமணன் அருஞ் சுரத்தினிடையே அமைந்த செழுஞ் அனைபோல் இலங்கினான். பழுமரம் தேரும் பாவை போன்று வறுமையால் வருந்திய மக்கள் இவ்வள்ளலை வந்தடைந்தார்கள். புலவர் ஒருவர் குமணனிடம் போந்து தம் குறையை முறையிட்டார்.

'ஐயனே! ஆண்டு பல கண்ட என்னுடைய அன்னை முதுமையால் வருந்துகின்றாள். உத்தமியாகிய என் மனையாள், குப்பைக் கீரையின் கண்ணிலே முளைத்த முதிரா இளந்தளிரைப் பறித்து, அதனை உப்பின்றி அவித்து உண்டு, உலர்ந்த மேனியோடு உயிர் வாழ்கின்றான். பால் மணம் மாறாத பாலன், உடல் வற்றிய தாயிடம் பால் காணாது வருந்தி அடுப்பருகேயிருந்த சோற்றுப் பானையிடம் தவழ்ந்து, அதன் வெறுமை கண்டு வெதும்பி அழுகின்றான் "என்று குமணனிடம் தன் குறையை உருக்கமாக எடுத்துரைத்தார். கவி நலம் சான்ற அறிஞரைப் பற்றிய வறுமையை அறிந்த குமணன்; மனம் வருந்தி அவரது குறையை அகற்றப் போதிய பரிசளித்தான்.

புலவர் பெருமிதமுற்று மலர்ந்த முகத்தோடு தம் மனையகம் போந்து மனையாளை நோக்கி "மாதே! இதோ குமணன் கொடுத்த கொடையைப் பார்! இப்பொருள்களெல்லாம்,

**"பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்**
**திருந்துவேற் குமணன் நல்கிய வளனே"**

இவற்றை வறுமையால் வருந்தும் உற்றார்க்கும் உறவினர்களுக்கும் எடுத்து வழங்கி இன்புறுவாயாக" என்று புலவர் கூறும் மொழிகளில் குமணனது கொடைத்திறம் இனிது விளங்கக் காணலாம்.

இவ்வாறு பாடி வந்த பாவலர்க்குப் பகடு பரிசளித்தும், ஆற்றாரது அரும்பசி களைந்தும், வற்றாத பெருஞ்செல்வமுற்று விளங்கிய குமணனைக் கண்டு அழுக்காறு கொண்டான் அவன் தம்பியாய இளங்குமணன் தமையன் ஆண்டு மலையையும் நாட்டையும் கவர்ந்து கொண்டு அவனைக் காட்டிற்கு ஓட்டினான்.

இவ்வாறிருக்கையில் ஒரு புலவர்

**"ஆணினம் கலித்த அதர்பல் கடந்து,**
**மானினம் கலித்த மலையின் ஒழிய**
**மீனினம் கலித்த துறைபல நீந்தி"**

குமணன் கரந்துரைத்த கானகம் போந்தார். "அருந் தமிழ் புலவரே! நான் செல்வத்தால் செழித்து வாழ்ந்திருந்த காலத்தில் நீர் வரலாகாதா? என்னு மனம் குழைந்தான் தன் உடைவாளை உருவிக் கொடுத்து "ஐயனே! இத்

**"தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்து**
**விலைதனை மீட்டுநின் வறுமைநோய் களையே"**

என்று முகமலர்ந்து மொழிந்தான். அவ்வாளை எடுத்துக் கொண்டு, அமணனிடம் ஓடிச்சென்று, "ஐயனே! தலையையும் கொடுத்துத் தமிழறிந்த தமியேனது வறுமையைக் களையப்போந்த வள்ளலாய் உன் தமையனது பெருமையை என் என்பேன்?"

அமணனது உள்ளம் நெகிழ்ந்தது; கண்கள் பாசத்தால் நேசத் தாரைகள் சொரிய நின்றான்; தலையாய வள்ளலைக் கானகத்தில் வருந்த வைத்த தன் சிறுமையை எண்ணி ஏங்கினான்; அப்பொழுது நால்வகைச் சேனையோடும் நகர மக்களோடும் தமையன் வசித்த கானகம் போந்து, அப்பெருந்தகையின் அடிபணிந்து, மீண்டும் நாட்டிற்கு அழைத்து வந்தான். குமணனும் முன்போலவே அறிஞர்க்கும் வறிஞர்க்கும் ஆதரவாய் அமைந்து என்றும் அழியாத பெரும்புகழ் எய்தினான்.

# VI. மொழியும் நெறியும்

## 26. தமிழும் சைவமும்

பாரத நாடு, என்றும் தெய்வமணம் கமழும் திருநாடு. தெய்வம் உண்டு என்ற கொள்கை நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாக இந்நாட்டில் நிலவி வந்துள்ளது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் உண்மையை அறிந்து போற்றும் நாடு இந்நாடு. இத்தகைய தெய்வத்தைத் தமிழ்நாட்டார் பலவாறு போற்றினார்கள். இப்பெயர்கள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பெருகி விட்டதாக மாணிக்கவாசகர், திருவாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

**"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்**
**திருநாமம் பாடிநாம் தள்ளேணம் கொட்டாமோ?"**

என்பது அவர் திருவாக்கு இவ்வண்ணம் பாடிய திருநாமங்களில் சிவம் என்பது ஒன்று அ∴து ஒரு சிறந்த பெயர் சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்னும் பொருள் கண்டார் பண்டைப் புலவர். எனவே, சிவன் என்னும் மங்கலப் பொருளை வழிபட்டுச் சிவகதியை அடைவதற்கு வழிகாட்டும் சமயமே சைவ சமயமாகும். "அன்பே சிவம்" என்ற அருமையான வாசகமும் சைவ சமய நூல்களில் சிறப்பாக விளக்குகின்றது.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''**

என்பது அவர் அருளிய திருமந்திரம் இதனால் அன்புநெறியே சிவநெறி என்பது நன்கு விளங்கும்.

சைவ சமயத்தின் முடிவுகளைச் சைவ சித்தாந்தம் என்பர். அச்சித்தாந்தத்தின்படி அநாதியாகவுள்ள பொருள் ஒன்று அவற்றைத் திரி பதார்த்தம் என்பர் பதிபசுபாசம் என்ற மூன்றும் திரி பதார்த்தம் எனப்படும். பதி என்பது கடவுள்; பசு என்பது உயிர்; பாசம் என்பது கட்டு. பசுவாகிய உயிர், பாசமென்னும் கட்டறுத்தப் பதியுடன் இரண்டறக் கலந்துவிடுதலே வீடுபேறு ஆகும்.

இங்ஙனம், உயிர் வர்க்கங்களை ஈடேற்றும் பொருட்டுக் கடவுள் ஐந்து தொழில்கள் செய்கின்றார் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தும் ஈசன் செயல்களாகும்.

சைவ சமயத்தில் ஆலய வழிபாடு இன்றியமையாததாகக் கொள்ளப்படுகிறது. ‘ஆலயத்தானும் அரன் எனத் தொழுமே’ என்று சிவஞான போதம் என்னும் சித்தாந்த நூல் கூறும் கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது என்பது சைவர் கொள்கை.

இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களில், சாதி வேற்றுமை காணப்படுகின்றது. ஆனால், சைவ சித்தாந்த முறையில் சமயத்துக்கும் சாதிக்கும் சம்பந்தமில்லை.

**''சாத்தி ரம்பல பேசும்ச ழக்கர்காள்**
**கோத் ரமும்குல மும்கொண்டு என்செய்வீர்''**

என்று வினவினார் ஒரு சைவப் பெரியார்.

## 27. தமிழும் சாக்கியமும்

பாரத நாட்டுப் பழைய மதங்களுள் ஒன்று பௌத்த மதம். ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே, இந்திய நாட்டின் வடபாகத்திலுள்ள ஒரு சிறு தேசத்தில் புத்தர் பெருமான் பிறந்தார். இளமையிலேயே, இவ்வுலக வாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்தார்; தமக்குரிய பெருஞ்செல்வத்தையும், பெற்றோரையும், அழகிய மனைவியையும், அருமை குழந்தைகளையும் விட்டு துறவியானார்; ஓர் ஆற்றங்கரையில் நின்ற அரச மரத்தின் கீழ் அமர்ந்து, நெடுங்காலம் தவம்புரிந்து மெய்ஞானம் பெற்றார். அவர் காட்டிய நெறி புத்தமதம் என்று பெயர் பெற்றது. புத்தர் சாக்கிய குலத்தில் பிறந்தவராதலால் அம்மதத்தைச் சாக்கியம் என்றும் சொல்வதுண்டு.

சாக்கியமதம் சிறந்திருந்த காலத்தில், சிதம்பரத்தில் வாழும் தில்லை மூவாயிரவரோடு சமய வாதம் செய்வதற்காகப் பௌத்த முனிவர்கள் போந்தார்கள் என்றும், அப்பொழுது, அங்கிருந்த மாணிக்கவாசகர் அம்முனிவர்களுடன் வாது செய்து அன்னாரைச் சைவமதத்தில் சேர்த்துவிட்டார் என்றும் சரித்திரம் கூறுகின்றது.

புத்தமதம் ஆதிக்க மழிந்து போய்விட்டாலும், அதன் சின்னங்கள் அடியோடு இந்நாட்டில்

அழிந்து போகவில்லை. பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலை, அதன் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றது. வீரசோழியம் என்னும் இலக்கண நூல் அம்மத்தைச் சார்ந்தவரது புலமை திறத்தை விளக்கி நிற்கின்றது. போதியின் கீழ் மாதவம் புரிந்த புத்தரின் ஞாபகச் சின்னமாக அரசமரம் சிறப்புற்று விளங்குகின்றது.

## 28. இறையவரும் இன்னுயிரும்

மன்னுயிர் அனைத்தையும் ஆதரித்துக் காக்கும் அருள் நெறியே நன்னெறியெனத் தமிழ்நாடு பழங்காலத்தே அறிந்து கொண்டது. அறிவால் குறைந்த உயிர்கள் பல பிறவிகளெடுத்து மேம்பட்டு முற்றிய அறிவுடைய உயிர்களாகுமென்று பழந்தமிழ் மக்கள் கருதினார்கள்.

காட்டில் வாழும் வேழமும் வேங்கையும், அரியும் பரியும், மானும் மற்றைய உயிர்களும் இறையவர்க்கு உகந்த பொருள்களாகும், வேழத்தின் உரியும், வேங்கையின் தோலும், ஈசன் உவந்து அணியும் உடைகள். ஈசனுடைய தலைமகனாகிய பிள்ளையார் திருமுகம் வேழத்தின் முகமாக விளங்குகின்றது. ஆகவே, உருவத்தால் உயர்ந்த வேழம் ஈசனார்க்கும் இந்திரற்கும், பிள்ளையார்க்கும் இனிய உயிராக இலங்குகின்றது. ஈசன் தோள்களில் ஆரமாக இலங்கும் நாகம் திருமாலின் பாயலாகவும் அமைந்துள்ளது. ஆகவே, நஞ்சமைந்த நாகமும் இறையவர் இருவரைச் சார்ந்து, இனிது வாழ்கின்றது விலங்கரசு எனப்படும். அரிமான், பைரவற்கு உகந்ததாயிற்று கலைமான் ஈசனார் கையில் இனிதமர்ந்தது. காட்டு விலங்குகளை விடுத்து நாட்டு விலங்குகளைக் கருதுவோமாயின் எருது ஈசனது வாகனமாம்; எருமை எமனது ஏற்றமாம், பசுவின் வயிற்றில் பிறந்தான், சந்திரகுப்தன் என்னும் வானவன். திருமாலும் பன்றியாய் தோன்றினான். நன்றி மறவாத நாய் சாத்தனது நல்வாகனமாம். ஆடு அங்கியங் கடவுளுக்கு அமைந்த ஊர்தியாம். அன்னமும் கிளியும், சேவலும் மயிலும், குயிலும் கொக்கும், காக்கையும் கலுழனும் ஒவ்வோர் இறைவனை ஒன்றி வாழக்காணலாம். அயன் அன்னத்தின் மீது அமர்ந்தான், மாரவேள் கிளியின் மீது ஊர்கின்றான். குமரவேள் சேவலைக் கொடியாகவும், மயிலைப் பொறியாகவும் உடையான் குயிலைமாரன் தூதனாக்கினான் காக்கையைச் சனியன் பிடித்து கொண்டான். கலுழனைத் திருமால் கவர்ந்து கொண்டான்.

சிறிய உயிர்களாய அணிலும், ஆகுவும், குரங்கும், கழுதையும் பெரியோர் அருளால் பெருமையுற்று விளங்கக் காணலாம். இனிய நிழல்தரும் மரங்களின் அடியில் இறையவரை அமைத்துப் பழந்தமிழ் நாடு வழிபட்டது. குற்றால நாதர் குறும்பலாவின்கீழ் அமர்ந்தார் நெல்லியப்பர் வேணுவின் அடியில் வீற்றிருந்தார். மதுரேசர் கடம்ப வனத்தில் கனித்தமர்ந்தார் தில்லைவனத்தில் அழகிய கூத்தர் திளைத்தார்.

மரங்களைப் போலவே செடி கொடிகளும் புற்பூண்டுகளும் இறையவரோடு இணைந்து வாழும் தன்மை அறியத்தக்கதாகும். எப்பயனும் தாரா எருக்கும் குருக்கும் ஈசனுக்கினிய வென்றால் தும்பையும், துளசியும், அறுகும் புல்லும் இறையவர்க்கு ஏற்றனவாம். ஆகவே, அறநெறியை அகிலமெல்லாம் பரப்பக் கருதிய தமிழ்மக்கள் உயிர்ப்பொருள் அனைத்தையும் இறையவரோடு இணைத்துக் காக்கக் கருதிய முறை நினைக்குந் தோறும் உள்ளத்தை நெகிழ்விப்பதாகும்.

## 29. சோலைமலைக் கள்ளன்

தமிழ்நாட்டில் எத்தனையோ மலைகள் உண்டு. ஆயினும் சோலை மலையைக் கண்டால் கண்குளிரும்; கருதினால் மனம்மகிழும்; அம்மலையிலுள்ள பெருஞ்சோலையைப் பசுஞ்சோலை என்பார்; பழமுதிர்சோலை என்பார்.

செந்தமிழ்ப் பாமாலை பெற்ற சோலை மலையிலே மஞ்சு தவழும்; மழைபொழியும்; அருவி சொரியும். ஆறாக ஓடும் ஆற்று நீர் கல்லின் இடையே பாய்ந்து செல்லும் போது 'கலீர், கலீர்' என ஒலிக்கும் அந்த ஓசையின் இனிமையால் சிலம்பாறு வலஞ் செய்யும்; சோலைமலையில் கல்லும் மரமும் கதை சொல்லும்.

முன்னொரு காலத்தில் அருகரும் புத்தரும் அம்மலையிலே தங்கியிருந்து தவம் புரிந்தார்கள். முருகபெருமான் சோலை மலையை ஒரு படை வீடாகக் கொண்டுள்ளார் என்று அறிந்தோர் கூறுவார். பழமுதிர்சோலை மலையில் அமர்ந்து அரும் குறிஞ்சிக் கிழவனாகிய குமரனை,

> **"சூரர் குலம்வென்று வாகை யொடுசென்று**
> **சோலை மலைநின்ற - பெருமாளே"**

என்று திருப்புகழ் பாடிற்று.

சோலை மலை பழங்காலத்தில் பாண்டியர்க்கு உரிய கோட்டையாகவும் விளங்கிற்று. இத்தகைய படைவீட்டையும் கோட்டையையும் காத்து நின்றான் ஒரு வீரன், முறுக்கிய மீசையும், தருக்கிய விழியும் உடைய அவ்வீரன் இப்பொழுது காவல் தெய்வமாய், பதினெட்டாம்படிக் கறுப்பன் என்ற பெயரோடு சோலைமலையிலே காட்சியளிக்கின்றான்.

முருகனுக்கு படைவீட்டிலே கறுப்பையன் காக்கும் கோட்டை மலையிலே ஒரு கள்ளனும் நெடுங்காலமாக உள்ளான். அம்மாயக் கள்வனைக் கண்டு கொண்டார் நம்மாள்வார்.

**"வஞ்சக் கள்வன் மாமாயன்**
**மாயக் கவியாய் வந்துளன்**
**நெஞ்சும் உயிரும் அவையுண்டு**
**நானே யாகி நிறைந்தானே"** என்று பாடினார்.

இங்ஙனம் ஆழ்வாரது நெஞ்சிலே புகுந்து திருவாய்மொழி பாடுவித்த வஞ்சக் கள்வனே சோலை மலையில் நின்று அருளும் திருமால். அவர் பெருமையால் சோலைமலை, திருமால் இருஞ்சோலை என்னும் பெயர் பெற்றது.

## 30. தெய்வம் படும் பாடு

தெய்வம் படும் பாடு தெய்வத்துக்குத்தான் தெரியும் அடியார் கையில் அகப்பட்டு எத்தனை அடியும் அவதியும் பட்டிருக்கிறது தெய்வம்!.

கும்பகோணத்திற்கு அருகே சக்தி முற்றம் என்ற சிற்றூர் உள்ளது. நாளடைவில் சக்தி முற்றம் பெயர் 'சத்திமுத்தம்' ஆயிற்று அதிலிருந்து உருவெடுத்தது ஒரு காதற்கதை! சக்தியாகிய உமாதேவி ஈசனைக் காதலித்து முத்தமிட்ட இடம் அதுவே என்று முடிவு கட்டினர் சிவனடியார். அதற்கு அடையாளமாகச் சக்தி சிவனை முத்தமிடும் கோலத்தில் அமைந்த திருவுருவமும் அவ்வாலயத்தில் நிறுவப்பெற்றது. அடியார்மீது வைத்த கருணையால் சக்தியின் முத்தத்தையும் சகித்துக்கொண்டு அந்த ஆலயத்துள் அமர்ந்திருக்கின்றார் ஈசன்.

சோழ நாட்டிலுள்ள திருநாகேசுரத்தில் சிறந்த திருமால் கோவில் ஒன்றுண்டு. 'ஒப்பிலியப்பன்' என்ற திருநாமம் அப்பெருமாளுக்கு அமைந்தது. காலப்போக்கில் ஒப்பிலியப்பன் என்பது 'உப்பிலியப்பன்' என மருவிற்று. உப்பிலியப்பனுக்கு உப்பில்லாத நிவேதனமே உகந்தது என்ற கருத்துப் பரவலாயிற்று.

கருணை ஜெபம் செய்தால் பருவமழை பெய்யும் என்பது வைதிகக் கொள்கை ஆயினும், மழை பெய்விப்பதற்குக் குறுக்கு வழியொன்று சில ஊர்களிலே கையாளப்படுகின்றது. ஆற்றங்கரையில் அரசமரத்தடியில் அமர்ந்துள்ள பிள்ளையாருடைய மூச்சைப் பிடித்துவிட்டால் மழை கொட்டும் என்பது கொச்சையன்பர்களின் நம்பிக்கை அதற்காகப் பிள்ளையாரைக் கொண்டுபோய் மூச்சுப்பிடி விழா நடத்துவர். பிள்ளையார் கண் அளவிற்குத் தண்ணீர் நிறைந்தவுடன் மழைக்குறி ஏதேனும் தோன்றுகிறதா என்று விண்ணை நோக்குவர், கார்மேகம் ஒன்றையும் காணாவிட்டால் அவரைச் சுற்றியுள்ள

தண்ணீரில் காரமான மிளகாய்ப் பொடியைக் கரைப்பர். இவ்வாறு பாமரமக்கள் எடுக்கும் 'மூச்சுப்பிடி' விழாவில் சிலவேளை மழை பெய்வதும் உண்டு. இது பிள்ளையார் படும்பாடாகும்.

# VII. இருமையில் ஒருமை

## 31. ஆண்மையும் அருளும்

அருளும் ஆண்மையும் இனிதமைந்த பண்டை அரசர், மாற்றாரொடு போர் தொடங்கு முன்னே, மதிநலம் வாய்ந்த தூதுவரை அவர்பால் அனுப்பி நீதி பெற முயன்றார்கள். இவ்வாறு வெல்வோர் விலக்கும் விழுமிய கருத்துடன் வேற்றரசிடம் தூது செல்லும் அறிஞரை அவமதிப்பதும் துன்புறுத்துவதும் ஆகாவென்று அரசநீதி முறையிடுகின்றது. அயோத்தி மன்னனுடைய தூதனாய் இலங்கை மாநகருக்குச் சென்ற அனுமன்மீது சீற்முற்ற, அவனைச் சிதைக்கக் கருதிய அரக்க மன்னனை நோக்கி, அறிவு வாய்ந்த வீடணன்,

> **''மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய**
> **ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்**
> **தூதரைக் கோறலும் தூய்தன் றாம்என**
> **ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினான்''**

என்று கவியரசராகிய கம்பர் கூறுமாற்றால், தூதரைக் கொல்லும் பாவம், மாதரைக் கொல்லும் மாபெரும் பாவத்தை ஒப்பதாகும் என்பது நன்கு விளங்குகின்றது.

இராமனுடைய காதல் மனையாளை, இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்து அசோகவனத்தில் வைத்தான். தனக்கு தவறிழைத்த இலங்கை வேந்தன் மீது போர் தொடங்கு முன்னே, அம்மன்னன், சீதையை விடுவானா என்று அறியுமாறு அங்கதனை அவனிடம் தூதனுப்பக் கருதினான்.

தண்டேந்திய வீமனையும் மனுவேந்திய விசயனையும் துணையாகக் கொண்ட தருமன், நூற்றுவராய் விளங்கிய மாற்றார் படைவலி கண்டுகலங்கிக் கண்ணனைத் தூதனுப்பினான் அல்லன் கடும்போரால் விளையும் கொடுமையையும் கொலையையும் விலக்கக் கருதிய விழுமிய அருளாலேயே இருவரும் மானமும் கருதாது தூதுபோக்கினார் என்பது இனிது விளங்கும்.

வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன், போர்க்களத்தில் படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ணனது நிலைகண்டு தளர்ந்து, அவன்மீது அம்பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்பதாகும்.

அறநெறி மறநெறியோடு மாறுபடும்பொழுது இறுதியில் அறமே வெல்லும் என்பது ஒருதலை "பொறுத்தார் பூமியாழ்வார்" என்னும் பொய்யாமொழிக்குக் கோசல நாட்டு வீரனும் குருகுலக் குரிசிலும் இணையற்ற சான்றாவர்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்" திருவள்ளுவர்.

## 32. கர்ணனும் கும்பகர்ணனும்

தொன்றுதொட்டுச் செய்ந்நன்றியறிந்து ஒழுகுதலைச் சிறந்த அறமெனக் கடைப்பிடித்த நாடுகளில் தலைசிறந்தது தமிழ்நாடு.

செய்நன்றி அறிதலென்னும் செம்மை சான்ற தொல்லறம் அங்கநாட்டு அரசனாய் கர்ணிடமும், இலங்கை நாட்டு வீரனான கும்பகர்ணனிடமும் தலைசிறந்து விளங்கிற்று. கர்ணன், கன்னியாயிருந்த குந்திதேவியின் மைந்தனாய்த் தோன்றினான். கன்னிப்பருவத்திலே பிறந்த மைந்தனையும் அவனை உயிர்த்த அன்னையான தன்னையும் உலகோர் பழிப்பர் என்று எண்ணி, அழகிய மைந்தனை ஒரு பேழையில் அடைத்து ஆற்றில் விட்டாள் அம்மங்கை. ஆதரவற்று ஆற்றில் மிதந்து வந்த மைந்தன், ஒரு தேர்ப்பாகனின் கையிற்சேர்ந்து அவன் மனையில் வளர்பிறை போல் வளர்ந்து வந்தான் இளமையிலேயே வீரமும் அழகும் வாய்ந்து விளங்கிய கர்ணனை கண்ட துரியோதனன்.

அவ்வீரனை ஆதரித்து வளர்ந்து அங்கநாட்டுக்கு அரசனாக்கி, அவனுடன் தோழமை கொண்டான். பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் கடும்போர் நிகழும் என்றறிந்த கர்ணன், அறநெறி துறந்த துரியோதனன் படையில் ஒப்புயர்வற்ற வீரனாக விளங்கிய கர்ணனை எளிதில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்தான். அதன் பொருட்டுக் குந்திதேவியைக் கர்ணனது மாளிகைக்கு அனுப்பினான்.

எனக்கு நன்றி செய்த துரியோதன மன்னனுக்காக அமர்க்களத்திற் சென்று போர் புரிவதே அறமும் புகழும் ஆகும். அவன் உணவையுண்டு வாழுந்த யான், செஞ்சோற்றுக்கடன் கழியாது என் தம்பியாருடன் சேரேன்" என்று கர்ணன் எடுத்துரைத்த வீரமொழிகளில் அவனது நன்றி மறவாத நலத்தினை நன்கு காணலாம்.

இவ்வாறே இலங்கை வேந்தனுடைய தம்பியாய் தோன்றிய கும்பகர்ணன், வீரத்திலும் வலிமையிலும் சிறந்து விளங்கினான். அயோத்தி மன்னனுடைய மனையாளாய சீதையை இலங்கை நாதன் கவர்ந்து சிறைவைத்தது அடாத செயல் என்று அவனிடம் எடுத்துரைத்தான். ஆயினும் தீராத மோகம் கொண்ட தமையனைத் திருத்துதல் இயலாதென்றறிந்த போது, அவனுக்குத் துணையாக அமர்புரிந்து ஆவி துறப்பதே ஏற்றதாகும் என்றெண்ணிப் போர்க்களம் புகுந்தான். ஆகவே, கர்ணனும்

கும்பகர்ணனும் செய்ந்நன்றியறிதலாகிய அறத்தை ஆவியினும் அருமையாக ஆதரித்த வீரர்கள் என்பது இனிதுணரப்படும்.

## 33. காளத்தி வேடனும் கங்கை வேடனும்

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான் ஒரு வேடன் வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தான் மற்றொரு வேடன். அவ்விருவராலும் வேடர் குலம் பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து அழியாப் புகழ் பெற்றனர்.

காளத்திநாதன்பால் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் பெருமை தமிழ்நாடெங்கும் பரவி நின்றது. எல்லையற்ற அன்பிற்கு அவ்வேடர் பெருமானே எடுத்துக்காட்டாயினார்.

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணப்ப ணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"**

என்று வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை மாணிக்கவாசகர் நன்கு விளக்கியுள்ளார்.

காளத்திநாதன்பால் அன்பு பூண்ட கண்ணப்பனைப் போலவே குகனும் இராமனைப் பிரிந்திருக்கலாற்றாத மனப்பான்மை பெற்றான். அந்திமாலை வந்தடைந்த பொழுது இராமன் குகனை நோக்கி, "அப்பா! இன்றிரவுஉன் ஊருக்குச் சென்று, நாளைக்காலையில் கங்கையாற்றைக் கடப்பதற்கு படகுகள் கொண்டு வருக" என்று சொல்லிய பொழுது, குகனுடைய மனம் அனலிடைப் பட்ட மெழுகு போல் உருகுவதாயிற்று. 'என் ஐயன், என் ஆண்டவன், என்னைப் போ என்றானே! அவனை விட்டு நான் எவ்வாறு போவேன்? அவனுடனிருத்தலே எனக்குப் பேரின்பம் அவனைப் பிரிந்திருத்தல் பெருந்துன்பம்' என்று எண்ணி, இராமனை நோக்கி, "ஐயனே! நான் போகலாற்றேன்; ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன்" என்றான்.

காளத்தி வேடனது அன்பிற்கும் கங்கை வேடனது அன்பிற்கும் ஒரு சிறந்த ஒற்றுமையுண்டு இருவரும் இறைவனிடம் பயன் கருதாப் பக்திபூண்டவர்கள்; 'கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன்' என்று கொண்டவர்கள்.

## 34. பாரத பண்பாடு

பழம்பெருமை வாய்ந்தது பாரதநாடு. வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரி முனை வரையுள்ள இப்பரந்த நாட்டிலே மொழிகள் பல உண்டு. மதங்கள் பல உண்டு; இனங்கள் பல உண்டு ஆயினும் பாரதப் பண்பாடு ஒன்றே.

இத்தகைய பண்பாட்டின் ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றது தமிழிலக்கியம். வடநாட்டிலும் தென்னாட்டிலும் மதுரை என்னும் பெயருடைய திருநகரம் உண்டு வடமதுரையில் அவதரித்தார் கண்ணபிரான்; தென்மதுரையையில் புகழ்பெற்றார் வள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும், வள்ளுவர் இயற்றிய குறளும், உலகம் போற்றும் உயரிய ஞானநூல்கள். முன்னாளில் பாடலிபுத்திரம் என்னும் பெயருடைய இருநகரங்கள் பாரதநாட்டில் சிறந்து விளங்கின; அவற்றுள் ஒன்று வடக்கே கங்கைக் கரையில் இருந்தது; மற்றொன்று தெற்கே கெடில நதிக்கரையில் இருந்தது. அசோக மன்னன் காலத்திலே சிறந்து விளங்கிற்று வடநாட்டுப் பாடலிபுத்திரம் பல்லவ மன்னர் காலத்தில் புகழ்பெற்றுக் திகழ்ந்தது. தென்னாட்டுப் பாடலிபுத்திரம் இப்பாடலி நகரங்கள் இரண்டு கலைக்களஞ்சியங்களாக காட்சியளித்தன.

பாரதநாட்டு புண்ணியத் தலங்களுள் காசி என்னும் வாரணாசியும், இராமேச்சுரமும் தலைசிறந்தன. இந்திய நாட்டுத் தென்கோடியில் உள்ள இராமேச்சுவரத்தை நாடி வருவர் வடநாட்டார். காசியிலுள்ள விசுவநாதரை வழிபட்டுச் செல்வர் தென்னாட்டார் வடகாசியின் வாசியறிந்த தமிழ்மக்கள் தம் நாட்டிலும் ஒரு காசியை உண்டாக்கினார். தென்காசி என்பது அதன் பெயர்.

நதிகள் ஒன்று கூடும் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதப்போற்றுதல் பாரத நாட்டுப்பண்பு. கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கூடும் இடம் திரிவேணி சங்கமம் என்று வடநாட்டில் அழைக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் புண்ணிய நதிகள் கூடுமிடங்கள் பல உள்ளன. அத்தகைய இடங்களை முக்கூடல் என்று வழங்குவர் தமிழ்மக்கள்.

எல்லாம் வல்ல இறைவனை வைத்தியநாதன் என்னும் பெயரால் வழிபடும் வழக்கம் வடநாட்டிலும் உண்டு; தென்னாட்டிலும் உண்டும் சிதம்பரத்திற்கு அருகே வைத்தீஸ்வரன் கோயில் என்ற சிவஸ்தலம் இருக்கின்றது. அங்குள்ள ஈசன் ‘‘மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்’’ என்று பாடினார் திருநாவுக்கரசர்.

இங்ஙனம் பல்லாற்றாலும் ஒருமையுற்று விளங்கும் பாரதப்பண்பாட்டை ஒல்லும் வகையால் பேணிவளர்த்தல் நல்லறிஞர் கடனாகும்.

## 35. இரு மலையும் தமிழ் மலையே

தெற்குமலைச் சாரலில் வசந்த காலத் தென்றல் இனிமையாகத் தவழ்ந்தது. அவ்வின்பத்தை நுகர்ந்த குன்றக்குரவர் வேட்டையாட எழுந்தனர். குற்றாலத்திலும் பொதிய மலையிலும் வாழ்ந்த குறவஞ்சியார் இருவர் குறிசொல்லிப் பிழைப்பதற்காக மதுரையை நோக்கி நடந்தனர். இளங்காற்று வீசிய திருநெல்வேலிச் சாலையில் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்தனர் அவ்வஞ்சியர்.

'விண்ணாணக் குறத்தி' என்ற பெயர் பெற்றிருந்த குற்றாலக் குறவஞ்சி தன் மலையின் பெருமையை விளம்பத் தொடங்கினாள். 'ஏ' பொதிய மலையம்மே! என் மலையின் பெருமையைக் கொஞ்சம் கேள்! அழகான அருவி உடையது என் மலையே! சஞ்சீவி முதலான மூலிகை வளரும் மலை என் மலையே! சித்தரும் முனிவரும் எப்பொழுதும் வாழும் மலை என் மலையே! இதனாலேதான் 'கயிலைக்கு ஒப்பானது குற்றாலம்' என்று கவிகள் பாடியுள்ளார் என்று சொல்லி பாடத்தொடங்கினாள்;

**"தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்**
**தவமுனிவர் கூட்டுறவும் அவர்இருக்கும் குகையும்**
**சஞ்சீவி முதலான விஞ்சைமூ லிகையும்**
**கவனசித்தர் ஆதியரும் மவுனயோ கியரும்**
**காத்திருக்கும் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே"**

என்று பெருமிதமாகப் பாடி முடித்தாள். அப்போது பொதியலைக் குறவஞ்சியின் மனத்தில் புதியதொரு கிளர்ச்சி பிறந்தது. திருக்குற்றாலக் குறமாதை நோக்கி "வஞ்சியே! என் மலையின் பெருமையை மறைத்து, உன் மலையின் பெருமையை உயர்த்தி ஓர வஞ்சகமாய்ப் பேசுகின்றாயே! பொதியமலையைப் பாடாத புலவர் உண்டா? அம்மலையின் முடியிலே வெண்மதி தவழும் மலை யெங்கும் மந்தி மாருதம் மகிழ்ந்து விளையாடும்: தமிழை வளர்க்கும் தவமுனிவன் அங்கே தங்கி வாழ்கின்றான். அங்கயற்கண் அம்மையின் அருள்போல் அருவி நீர் பொழியும் இதனினும் சிறந்த மலை இவ்வுலகில் உண்டோ?"

**"திங்கள்முடி சூடுமலை**
**தென்றல்விளை யாடும்மலை**
**தங்கும்முகில் சூழுமலை**
**தமிழ்முனிவன் வாழுமலை**
**அங்கயற்கண் அம்மைதிரு**
**அருள்சுரந்து பொழிவதென**
**பொங்கருவி தூங்கும்மலை**
**பொதியமலை என்மலையே"**

என்று பாடினாள். தமிழ் முனிவன் வாழும் மலை என்ற சிறப்பைக் கேட்ட குற்றாலக் குறவஞ்சி சிறிது மனம் மடங்கினாள்.

நாட்டின் பெருமை கூறிப் பொதியமலைக் குறத்தியை வெல்ல இயலாதென்றறிந்த குற்றாலக்குறமாது ஆற்றின் பெருமையால் அம்மாதை வெல்லக் கருதினாள். ஞானிகளும் அறியாத சித்திர நதியின் பிறப்பையும் சிறப்பையும் குறவஞ்சி கூறத் தொடங்கினாள்.

இதைக்கேட்ட பொதியமலைக் குறமாது தனது மலையில் தோன்றும் பெரியாறென்னும் பொருதை யாற்றின் பெருமையை அழகுற எடுத்துரைத்தாள்.

பொருதையாற்றின் பெருமையை வியந்து கூறக்கேட்ட குற்றால குறவஞ்சி பொதியமலையின் பெருமையை அறிந்து இருமலையும் நிகரென்னும் இதற்கு ஐயம் உண்டோ என்னும் சமரச அறிவொடு சாந்தமாய்ப் பிரிந்து சென்றாள்.

## VIII. பாரதியார் பாட்டின்பம்

### 36. செந்தமிழ்நாடு

தமிழ்மொழியின் நயமறிந்த கவிஞரும் அறிஞரும் அம்மொழி பயிலும் தமிழகத்தை அன்பு ததும்பும் இன்ப மொழிகளால் போற்றும் அழகு எல்லையற்ற இன்பம் தருவதாகும். தமிழ் மணங்கமழும் திருநாட்டில் அமைந்து மலையும் ஆறும் தமிழ்க் கவிகள் மனத்தில் தமிழ்மயமாகவே விளங்கித் தோன்றுகின்றன. திருமுனிவன் வாழும் பொதியமலை தமிழ் மலையாகவே திகழ்கின்றது.

செந்தமிழின் சுவை தேர்ந்து செஞ்சொற்கவி செய்த பாரதியார், தமிழ்மொழி வழங்கும் திருநாட்டைப் போற்றிப் புகழும் மொழிகள், புதியதோர் ஊக்கம் அளிப்பனவாம்.

**“செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே”**

என்று கவிஞர் அழகாக எடுத்துரைத்தார்.

முதலில் தாயன்பை அமைத்து, பின்பு தந்தையின் வீரத்தைப் பேசும் முறை, அறிந்து போற்றுதற்குரியதாகும். இறைவனைத் தாய் வடிவாகவும் தந்தை வடிவாகவும் கொண்டு அம்மையப்பர் என்று வணங்கும் முறைமையும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது.

## 37. முப்பெரும் கவிஞர்

நல்லறிஞரது உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்தில் பிறப்பது இயற்கவிதையாகும். இத்தகையகவிபாடும் கவிஞருள் ஒருவராகிய பாரதியார், தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பொருதை நாட்டில் பிறந்தார்; அருந்தமிழ் மொழியுடன் ஆரியமும் ஆங்கிலமும் அளவோடு பயின்று தம் உள்ளத்திலெழுந்த தள்ளரிய ஆர்வத்தால் இனிய தமிழ்ப்பாட்டு இசைத்தார்.

நல்லறிவே நாடடின் உயிரெனக் கருதிய அக்கவிஞர் தமிழ் நாட்டிற்கு என்றும் அழியாப் பெருமையளித்த நல்லியல் கவிஞரை நாவார வாழ்த்துகின்றார்.

**“கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு”**

என்ற பாரதியார் பாட்டின் நயம் அறியத்தக்கதாகும் கல்வி நலம் படைத்த தமிழ்நாட்டிலே கம்பர் பிறந்தார்; இறவாத பெரும் பனுவல் இயற்றினார்; தமிழ்நாட்டிற்கு அழியாத பெருமையை அளித்தார். “கல்வியில் பெரியவர் கம்பர்’ என்ற அழியாத புகழ்மாலை பெற்றும் வாழும் மாந்தர்க்கென்று ஒளிநெறி காட்டும் உயரிய கவிஞரைப் பிறப்பித்து நல்கிய பெருமையும் செந்தமிழ்நாட்டுக்கே உரியதாகும்.

**“வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

என்றெழுந்த பாரதியார்வாய்மொழி தமிழ் நயமறிந்தோர்க்குத் தேனினும் இனிப்பாகும்.

சிலப்பதிகாரமென்னும் செம்மை சான்ற காவிய அமுதை அள்ளி உண்டு அளப்பரிய இன்பமுற்ற பாரதியார்

**“நெஞ்சை**
**அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி**
**ஆரம் படைத்த தமிழ்நாடு”**

என்று நம் தாய்நாட்டைப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த பைந்தமிழ் நாட்டில் பிறந்தும், தமிழ்மொழியின் பெருமையையும் இனிமையையும் உணராது, வறிதே காலம் கழிக்கும் இக்காலத் தமிழ் மக்கள் நிலை கண்டு பாரதியார் இரங்குகின்றார்.

## 38. கலையின் விளக்கம்

அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும்கொண்டு முன்னோர் போற்றினார்கள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளைப் பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும்.

இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவின்கலையென்றும், பயன்கலை என்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும் செவியையும் கவர்ந்து, அவற்றின் வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின் கலைகளாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல திறப்பட்ட பொருள்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன் கலைகள் எனப்படும். இவ்விருவகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் நன்கு அருளிப் போந்தார்.

செஞ்சொல் கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும், உலகினர்க்கு ஒளிநெறி காட்டும் உயரிய மறையிலும், கலைமகள் மகிழ்ந்துறைக்கின்றாள்.

இவ்வுலகில் வாழும் மக்களுக்குப் பயன்படும் பொருள்களை ஆக்கி அளிக்கும் தொழிலாளர் பலராவர். இரும்பையுருக்கி வெம்படை வடிக்கும் கருங்கைக் கொல்லரும், திண்ணிய மரத்தை வைத்து பணிசெய்யும் தச்சரும், குழைந்த மண்ணால் பாண்டங்களை வனையும் குயவரும், பட்டாலும் பருத்தி நூலாலும் ஆடைகளை நெய்யும் சாலியரும் உலக வாழ்க்கைக்குப் பயன்படும் கலைகளைப் பயின்று பணிசெய்கின்றார்கள். அன்னார் பணிகளிலும் கலைமாது பண்புற்று இலங்குகின்றான்.

## 39. பண்டாரப் பாட்டு

ஆன்மவீரம், படை வீரத்திலும் பெரிதென்னும் உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தமிழ்நாடு அறிந்துகொண்டது. புயவலியினும், படைவலியினும்பெரிய ஆன்மத் திறம்படைத்த வீரராகத் திருநாவுக்கரசர் விளங்கினார். சமண சமயத்தைக் கைவிட்டு அப்பெரியார், சைவ நெறியைச் சார்ந்தபொழுது, சமண மன்னன் சீற்றமுற்றான்; மதம் மாறி தவறிழைத்த நாவுக்கரசரைக் கொணருமாறு வெம்படை தாங்கிய வீரரைப் போக்கினான். அவ்வீரர், அப்பர் இருந்த இடம்போந்து வீரமொழி பேசி ஆரவாரித்தனர். எனினும், அவரது உண்டு திரண்ட மேனியைக் கண்டு அப்பர் சிறிதும் அஞ்சினாரல்ல; அவர் கையிலமைந்த படைக்கலங்களைக் கண்டு இறையளவும் கலங்கினாரல்லர். ‘‘நாமார்க்குங் குடியல்லோம், நமனையஞ்சோம்’’ என்று தொடங்கும் வீரப்பாட்டு இசைத்தார்.

பாரதியார் பாடிய வீரப்பாடல்களுள் தலையாக நிற்கும் தகுதி வாய்ந்தது. ‘அச்சமில்லை’ என்று தொடங்கும் பண்டாரப் பாட்டேயாகும் அப்பாட்டிலே,

**“பச்சைஊன் இயைந்தவேற் படைகள்வந்த போதினும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே”**

என்றெழுந்த அடிகள், நாவுக்கரசரை எதிர்த்து நின்ற மன்னன் படையைப் போன்ற மறப்படையைக் குறிப்பன என்று கருதுவது பொருத்தமுடையதாகும்.

## 40. தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்மொழி வழங்கும் தென்னாடு தெய்வத் திருநாடென்று அறிந்து வணங்கத் தக்கதாகும்.

இத்தகைய திருநாட்டில் பிறந்து வளர்ந்த கவிஞர், தமிழ்த்தாய் முறையிடும் பான்மையில் உருக்கமாக ஒரு பாட்டுப் பாடியுள்ளார்.

தமிழன்னை, தலையிலணிந்த சூளாமணி சரிய, இடையிலணிந்த மணிமேகலை தளர, இணையடிச் சிலம்புகள் புலம்ப, கண்கலங்கி நின்று, தன் தகைசான்ற பிள்ளைகளை நோக்கி. ‘என் ஆருயிர்மக்காள்! ஆதி சிவனருளால் இந்நானிலத்தில் தோன்றினேன்; முத்தமிழறிந்த முனிவரருளால் திருந்தினேன். நற்றமிழ் மன்னரது செல்லச் சிறுமியாய் செழித்து வளர்ந்தேன்; அறிவறிந்த மக்கள் ஆக்கியளித்த காவியக் கலனணிந்து விளங்கினேன்; இடைக்காலத்தில் பல நல்லணிகளைப் பறிகொடுத்தேன். இன்று பசையற்ற மாக்கள் பதறாமல் பேசும் வசை மொழி என் செவியினைச் சுடுகின்றது. உள்ளத்தை அறுக்கின்றது. புத்தம் புதிய கலைகள் மேலைநாடுகளில் மெத்த வளர்கின்றனவாம். அக்கலைகள் ஐம்பெரும் பூதங்களின் திறத்தினை அருமையாக உணர்த்துகின்றனவாம். அம்மேன்மைக் கலைகள் என்பால் இல்லையாம். மேலைநாட்டு மொழிகளே இனி மேலோங்கி வாழுமாம் யான் மெல்லத் தளர்ந்து மேன்மையிழந்து அழிந்து ஒழிவேனாம். இவ்வாறு மதியனார் உரைக்கும் மாற்றம் அறியீரோ? பேதையர் கூறும் புன்மொழி கேளீரோ? இவ்வகை மொழி என்பாலமைய நீர் வாளா விருத்தலாகுமோ? எட்டுத் திசையும் சென்று கிட்டிய கலைகள் யாவும் கொணர்வீர் புத்தணி புனைந்து என் தலத்தினைப் புதுக்குவீர் நல்ல கலைப்பொருள் அனைத்தையும் வாரிக்கொணர்ந்து நல்குவீர். என்று தமிழன்னை தன் ஆற்றாமையை அறிவித்துத் தமிழ் மக்களைத் தட்டித்தேற்றி எழுப்புகின்றான்.

இங்ஙனம் தமிழ்த்தாயின் வாய்மொழியாகப் பாரதியார் எழுதியுள்ள பாட்டின் கருத்து அறிந்து போற்றுதற் குரியதாகும்.

“வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழா
வாழிய பாரத மணித்திரு நாடு”

இவ்வாறு தமிழ் இன்பம் என்ற கட்டுரையில்

1. மேடைப்பேச்சு
2. இயற்கை இன்பம்
3. காவிய இன்பம்
4. கற்பனை இன்பம்
5. அறிவும் திருவும்
6. மொழியும் நெறியும்
7. இருமையில் ஒருமை
8. பாரதியார் பாட்டின்பம்

என்னும் எட்டு தலைப்புகளின் கீழ் தலைப்பிற்கு ஐந்து கட்டுரைகள் வைத்து மொத்தம் 40 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. செந்தமிழுக்கு சேதுப்பிள்ளை என்னும் அளவில் தமிழுக்கும், பொருளாராய்ச்சிக்கும் பயன்படும் அரிய சொல்லணி தமிழ் இன்பமாகும். மேடைப்பேச்சு எப்படி இருக்க வேண்டும், கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும் என நன்கு விளக்குவது தமிழின்பமாகும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ரா.பி சேதுப்பிள்ளைமேடைப்பேச்சில் வல்லவர் என்பதைவிளக்குக. | K4 | CO1 | PO4 |
| 2 | இயற்கை இன்பம் தரும் சிறப்புகள் யாவை? | K5 | CO2 | PO5 |
| 3 | காவிய இன்பம் தரும் செய்திகளைவிளக்குக. | K3 | CO4 | PO1 |
| 4 | கற்பனை இன்பம் குறித்துவிளக்குக. | K5 | CO2 | PO2 |
| 5 | அறிவும் திருவும் வழி அறியலாகும் செய்திகளைகுறிப்பிடுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழின்பம் என்னும் கட்டுரைதரும் செய்திகளைவிவரி. | K2 | CO5 | PO4 |
| 2 | ரா.பி. சேதுப்பிள்ளைசொல்லின் செல்வர் என்பதைநிரூபி. | K3 | CO3 | PO6 |
| 3 | மொழியும் நெறியும் கட்டுரையில் இடம்பெற்றுள்ளசெய்திகளைதொகுத்துரைக்க. | K2 | CO5 | PO5 |
| 4 | இருமையில் ஒருமைஎன்னும் தலைப்பில் அறியலாகும் செய்திகளைஎடுத்துரைக்க | K5 | CO3 | PO6 |
| 5 | பாரதியார் பாட்டின்பம் குறித்துகட்டுரைவரைக. | K3 | CO3 | PO3 |

# அலகு 2

# உலகம் சுற்றும் தமிழன்

**ஆசிரியர் அ.க.செட்டியார்**

தமிழ் இலக்கியத் துறையில் தனக்கென ஒரு பாதையை அமைத்தவர் ஏ.கே. செட்டியார் என்று அழைக்கப்பட்ட அ.கருப்பன் செட்டியார் ஆவார். இவர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கோட்டையூரில் 03-11-1911-இல் பிறந்தார். இவரது தந்தையார் அண்ணாமலை செட்டியார் ஆவார்.

**இதழ் ஆசிரியர்**

திருவண்ணாமலையில் படித்துக் கொண்டிருக்கும் போதே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மகாத்மா காந்தியைத் தமது தலைவராக ஏற்றார். தமது இருபதாம் வயதில் மியான்மரின் (பர்மா) தலைநகரான ரங்கூனில் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் வெளியிடப்பட்ட "தன வணிகன்" என்ற இதழுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

**முதல் நூல்**

புகைப்பட கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு 1930-ஆம் ஆண்டு ஜப்பான் சென்று "இம்பீரியல் ஆர்ட்ஸ் கலாச்சாலையில்" சேர்ந்து புகைப்பட கலையில் தேர்ச்சி பெற்றார். இவர் ஜப்பான் நாட்டில் தான் கண்ட காட்சிகளையும் பெற்ற அனுபவங்களையும் கட்டுரைகளாக்கி "தனவணிகன்" இதழுக்கு அனுப்பினார்.இதழில் வெளியிடப்பட்ட அவரது பயணக் கட்டுரைகள் படிப்போரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அக்கட்டுரைகள் தொகுக்கப்பெற்று "ஜப்பானில் சில நாட்கள்" என்னும் நூலாக வெளியிடப்பட்டது. இதுவே இவரது முதல் நூலாகும்.

**உலகம் சுற்றும் தமிழன் நூல்**

ஜப்பானில் புகைப்பட கலையைப் படித்த செட்டியார் மேல் பயிற்சிக்காக, அமெரிக்கா சென்று நியூயார்க்கில் உள்ள போட்டோகிராபிக்ஸ் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்து பட்டய படிப்பில் தேர்ச்சி அடைந்தார் படிப்பு முடிந்து இந்தியா திரும்புகையில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கு சென்று வந்தார். இந்த பயண அனுபவங்களைக் கட்டுரைகளாக வெளியிட்டார். அக்கட்டுரைகள் பின்னர் உலகம் சுற்றும் தமிழன் என்னும் பெயரில் 1940- இல் நூலாக வெளியிடப்பட்டது.

**பயண நூல் அனுபவங்கள்**

படிப்போருக்கு பயண அனுபவத்தை தரும் வகையில், கடல் மார்க்கமாக உலகத்தை சுற்றி வந்த பயண அனுபவங்களைத் திறம்படவும், சுவைபடவும் எழுதியுள்ளரர். கப்பலில் பயணிப்பது தொடங்கி பல்வேறு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், கட்டடங்கள், இலக்கியம், அரசியல் என பலவும் அழகுற பதிவு செய்யப்பட்டுள்ளது.காந்தியை பற்றி திரைப்படம் தயாரித்த முதல் தமிழரான இந்நூல் ஆசிரியர், காந்தி குறித்த அயல் தேசத்துப் புரிதலை விரித்துரைப்பதும், இந்தியர்கள் குறித்த சர்வதேச அபிப்பிராயங்களை ஒழிவு மறைவின்றி பதிவு செய்திருப்பதும்,இந்நூலுக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.இந்நூலில் 18 கட்டுரைகள் உள்ளன.

**நூலின் தொடக்கம்**

**1. உலகமெங்கும் ஒலிக்கும் பெயர்**

ஜப்பானில் ஒவ்னா என்னும் சிறிய ரயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்காக காத்துக் கொண்டு நின்றேன். முன்பின் அறியாத இரண்டு ஜப்பானிய வாலிபர்கள் வேகமாக வந்தனர். அவர்களில் ஒருவன் என் கையை குளித்துக் கிளி பிடித்துக் குலுக்கி நீங்கள் காந்தியின் நாட்டில் இருந்து வந்தவர் தானே என்றான். ஆம் என தலையசைத்தேன். உலகத்தில் காந்தியடிகளை போன்ற மனிதர் யாரும் கிடையாது. ஜப்பானில் எத்தனையோ வீரர்கள் பிறந்திருக்கிறார்கள் சக்கரவர்த்திகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் போன்ற சிறந்த மனிதர்கள் பிறந்ததே இல்லை என்றான் சக்கரவர்த்தியையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடும் ஜப்பானியர்கள் காந்தியடிகளைப் பாராட்டுவதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

**ஜப்பான்**

தாக்கா வோக்கா என்பவா் ஜப்பான் பார்லிமென்ட் அங்கத்தினர். சில வருஷ காலம் இவர் கல்கத்தாவில் இருந்தாராம். இந்தியாவைப் பற்றியும் காந்தியடிகளைப் பற்றியும் இவர் இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார் ஜப்பானில் உள்ள காங்கிரஸ் தலைவர் திரு ஆனந்த மோகன்ஷகாய் மூலம் அவருடைய அறிமுகம் எனக்கு கிடைத்தது. ஒரு நாள் அவர் இல்லம் சென்றேன். இந்திய முறைப்படி நமஸ்காரம் செய்து வரவேற்றாா். இவர் வீட்டில் காந்தியடிகளின் உருவச் சிலை, சர்க்கா முதலியன காட்சி அளித்தன.

## டோக்கியோ

டோக்கியோவில் ஒரு திரைப்படக் காட்சி சாலைக்குச் சென்ற பொழுது அங்கு உட்கார இடம் இல்லாது நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வெளியில் செல்ல எண்ணிய ஒரு சீனப் பெண், “ஹலோ! இங்கே உட்காருங்கள். காந்திஜி சௌக்கியமா?” என்றாள்.

## ஹாங்காய்

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் ஷாங்காய் நகருக்கு சென்றிருந்தேன். ஒரு நாள் சீனர்கள் வசிக்கும் இடத்திற்கு சென்றேன். அங்கே காந்தியடிகளின் பெரிய உருவப்படம் தென்பட்டது. உலகின் உள்ளம் கவர் உருவம்! சீனச் சித்திரகாரன் திறமை! “விலை என்ன?” என்று கேட்டேன். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்குச் சீனம் தெரியாது. மனித மொழி சைகைதான். கடைசியாக 11 ரூபாய்க்கு அந்தப் படத்தை விலைக்கு வாங்கினேன்.

## கொரியா

கொரியா மாணவர்கள் கூட்டத்தில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த பொழுது, “காந்தியடிகள் அமெரிக்கா செல்ல நேர்ந்தால், ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வரக்கூடும்” என்றேன். நீங்கள் நம்பினாலும் சரி,நம்பாவிட்டாலும் சரி’ அங்கிருந்த கொரியா மாணவன் ஒருவன் கூட்டத்தில் என்னை கட்டிப்பிடித்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினான்.

## ஹவாய்த் தீவு

பஸிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள அழகிய ஹவாய்த் தீவில் ஹில்லோ என்னும் நகரத்துக்குச் சென்றேன். உண்மை இந்தியனைப் பார்க்க எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அன்றைய தினம் ஹில்லோ டிரிபியூன் பத்திரிகையின் முதற்பக்கத்தில் “காந்தியடிகள் நாட்டில் இருந்து ஒரு பத்திரிகையாளர் ஹில்லோவுக்கு வந்திருக்கிறார்” என்று பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## நியூயார்க்

அமெரிக்காவில், நியூயார்க் நகரத்தில் வானொலியில் பேசும் வாய்ப்பு கிடைத்தது.கரண்ட் ஹிஸ்டரி பத்திரிகை ஆசிரியர் கேள்விகள் கேட்டார்.முக்கியமான கேள்வி, “காந்தியடிகள் ஹரிஜனங்களுக்கு செய்த நன்மைகள் என்ன?” என்பதே.

ஒன்பது கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நியூயார்க் புத்தக சாலையில் காந்திஜியைப் பற்றிய புத்தகங்களைப் பார்க்க சென்றேன். அங்குள்ளவர் கூறினார்:

“காந்தியைப் பற்றி ஆங்கிலத்தில் மட்டும் இருநூறு புத்தகங்கள் இருக்கின்றன. இன்னும் 26 மொழிகளிலும் புத்தகங்கள் உள்ளன. இதைத் தவிர காந்தி எழுதிய புத்தகங்கள் வேறு இருக்கின்றன”.

**அமெரிக்கா**

வருடந்தோறும் அமெரிக்காவில் காந்தியடிகளின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று பல அமெரிக்கர்கள் காந்தி குல்லா அணிகின்றனர். பிராங்ஸ்வில் என்பது அமெரிக்காவில் பெரிய பணக்காரர் வசிக்குமிடம். அங்குப் பெண்கள் பள்ளிக்கூடமொன்றில் இந்தியாவைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்வதாகக் கூறிச் சென்றேன். 14 முதல் 20 வயது வரை உள்ள சுமார் 15 பெண்கள். அத்தனை பேரும் சேலை அணிந்து ஜமுக்காளத்தில் உட்கார்ந்திருந்தனர். காந்தியடிகளின் பெரிய உருவப்படமும், தேசியக்கொடியும், சர்க்காவும் அங்குக் காணப்பட்டன. அன்றையக் கேள்விகள் முழுவதும் காந்தியடிகளைப் பற்றித்தான். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வருகையில் ஒரு ஆங்கிலக் கப்பலில் காந்தியடிகள் பிறந்த தினத்தைக் கொண்டாடினோம். பல அமெரிக்கர்கள் கலந்து கொண்டனர். அன்று எங்களுக்கு கப்பலில் இந்திய உணவு அளிக்கப்பட்டது.

**ஆஸ்திரேலியா**

ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரேலியா செல்லும் கப்பலில் போலந்து தேசப் பெண் ஒருத்தியைச் சந்தித்தேன். ஒரு பாட்டுப் பாடினாள். அதில் இருமுறை “மகாத்மா காந்தி” என்றாள். கேட்ட பொழுது போலந்தில் உலகப் பெரியார் மீது பாடுவதுண்டென்றும், அவர்களுள் காந்தியடிகள் முக்கியமானவரென்றும் கூறினாள்.

உலகிற் பெரும்பான்மையோரால் புகழப்படும் தனிப் பெருமையுடையவர் காந்தியடிகள் ஒருவர்தான். வாழ்க காந்தியடிகளின் நாமம். அவரது புகழ் நீடூழி வாழ்க!

இவ்வாறு நூலின் முதல் அங்கத்தில் இருந்து காந்தியின் கீர்த்தி தான் சென்ற நாடுகளில் எவ்வாறு திகழ்கிறது என்பதைச் சுவையாக படம் படித்துக் காட்டியுள்ளார் ஏ.கே.செட்டியார்.

**2. கவிஞர் நோகுச்சி**

உலகப் புகழ்பெற்ற ஜப்பானிய கவிஞர்களில் யானே நோகுச்சி ஒருவர். ஜப்பானிய மொழியிலும் ஆங்கில மொழியிலும் கவிப்புனையும் ஆற்றல் பெற்றவர் இக்கவிஞர். இவர் இந்தியாவிற்கு விஜயம் செய்து பல சர்வகலாசாலைகளில் பிரசங்கம் செய்தார். காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினார். காந்தியடிகளின் வசீகர சக்தியால்

கவரப்பெற்ற இக்கவிஞர் இந்தியாவைப் பற்றி ஐரோப்பிய மொழியில் ஒரு புத்தகம் எழுதி உள்ளார்.

ஜப்பானில் இருந்தபோது இக்கவிஞரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இந்திய முறையில் நமஸ்காரம் செய்து வரவேற்றார். இவரிடம் விடைபெற்றபோது, "இந்தியாவைப் பற்றிய என் எண்ணங்களை நான் என்றும் மறக்க முடியாது. இவ்வரிய நாட்டுக்கு மீண்டும் செல்லும் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறேன். நான் இந்தியாவிற்கு சென்றபொழுது பண்டித நேரு ஐரோப்பாவில் இருந்தார். அவரை சந்திக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. என் எண்ணங்களை கவிகளாகப் புனைய எண்ணியுள்ளேன்" என்றார் கவிஞர்.

### 3. ஹவாய்த் தீவுகள்

பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இவ்வழகிய தீவுகளை காப்டன் குக் என்பவர் 1788- ஆம் வருடத்தில் கண்டுபிடித்தார். பல நூற்றாண்டுகளாக இத்தீவுகள் உலகத்தின் மற்ற பகுதிகளுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தன. ஆனால் இன்றைய நாகரிக உலகத்திலே ஹவாய் தீவுகள் ஒரு ஸ்தானம் வகிக்கின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் செல்லும் பெரும்பாலான கப்பல்கள் ஹொனலுலு துறைமுகத்தில் தங்காமல் செல்வதில்லை.

அமெரிக்காவின் பசுபிக் கரையோரத்தில் இருந்து சுமார் 2100 மைல் தூரத்திலும், ஜப்பானிலிருந்து சுமார் 3.500 மைல் தூரத்திலும் இத்தீவுகள் அமைந்திருக்கின்றன. ஹவாய் என்பது பிரதம தீவு. மா ஊய், ஓ ஹா ஊ, கா ஊ ஆய், கலாவா ஓ முதலிய நான்கு தீவுகளும், இன்னும் மிகச் சிறிய தீவுகள் பலவும் சேர்ந்து ஹவாய் என்று அழைக்கப்படுகின்றன. இத்தீவு கூட்டங்களின் விஸ்தீரணம் 6.450 சதுர மைல்களாகும். காப்டன் குக் இத்தீவுகளைக் கண்டுபிடித்த பொழுது அவை தனித்தனி அரசர்களின் ஆட்சியில் இருந்தன.

### 4. அமெரிக்கா

நியூயார்க் வாழ்க்கை கொஞ்ச நாள் வரை எனக்குப் பிரமிப்பைக் கொடுத்தது. மனிதர்கள் இயந்திரங்களின் அடிமைகளாகி விட்டார்கள் போல தோன்றியது. அமெரிக்க குடும்பம் ஒன்றுக்கு சென்றிருந்த போது, அந்த அம்மையார் வீடு முழுவதையும் காட்டினார். வழக்கம் போல அமெரிக்கர் வீடு, முழுவதும் சுத்தமாக இருந்தது. துணிமணிகளை துவைப்பது இயந்திரம், எச்சில் தட்டுகளைச் சுத்தம் செய்வது இயந்திரம். வீடு பெருக்கும் கருவிக்குத் துணை செய்வது மின்சாரம். சமையல் செய்வதும் மின்சார அடுப்பில் தான்.

வீடுகளில் மட்டுமல்ல, அமெரிக்கர்களின் வாழ்க்கையே மின்சாரமயமாகத் தான் இருக்கிறது. பூட்ஸ் துடைப்பது இயந்திரம். காசை போட்டவுடன் ஜன்னல் வழி உணவளிப்பது இயந்திரம். ஜன நெருக்கம் உள்ள வீதியைக் கடப்பதற்கு, மக்களை தூக்கி செல்வது இயந்திரம். கொஞ்ச நாளில் நியூயார்க் நகர வாழ்க்கை புளித்து விட்டது.

ஒரு நார்பியன், ஒரு ஜெர்மானியன், ஒரு ஹாலந்துகாரன் ஆகிய மூன்று மாணவர்களுடன் சேர்ந்து அமெரிக்காவில் சுமார் 15,000 மைல் மோட்டாரில் பிரயாணம் செய்தேன். ரயில் பிரயாணத்தை விட, மோட்டார் பிரயாணத்தில் எங்களுக்கு செலவு குறைவு. மோட்டாரின் நான்கு ஜன்னல்களுக்கும் எங்களுடைய நான்கு தேசியக்கொடிகளையும், மத்தியில் அமெரிக்கா கொடியையும் அமைத்து ஐந்து கொடிகள் அலங்கரிக்க, அமெரிக்க நாட்டின் உன்னத சாலைகளிலே, வானொலி சங்கீதம் அளிக்கும் புதிய மோட்டாரிலே ஒன்பது வாரங்கள் பிரயாணம் செய்தோம். திறந்த வெளிகளில் கூடாரம் அடித்து உறங்கினோம். ஒரு சமயத்தில் ஒரே நாளில் 651 மைல் பிரயாணம் செய்தோம்.

### 5.சிவப்பு இந்தியர்

அமெரிக்காவின் பூர்வ குடிகளுக்கு சிவப்பு இந்தியர் என்று பெயர்.இவர்கள் நிறம் சிவப்பல்ல. இவர்கள் இந்தியர்களும் அல்லர். ஆனால், பெயர் மட்டும் சிவப்பு இந்தியர். கொலம்பஸ் 1492-ஆம் வருடத்தில் இந்தியாவை கண்டுபிடிக்க யாத்திரை தொடங்கினார். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டார். அந்நாட்டு பூர்வகுடிகள் அவருக்கு தொந்தரவு கொடுத்தனர். கொலம்பஸ், அவர்களின் சிலரைக் கைது செய்து ஸ்பானியர்களின் நியாயஸ்தலத்தின் முன் நிறுத்துகையில் அவர்களைச் “சிவப்பு இந்தியர்” என்று குறிப்பிட்டார். அது முதல் அப்பெயர் வழங்கலாயிற்று.

கொலம்பஸ் தான் அமெரிக்காவை முதன்முதலில் கண்டார் என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிவு. ஆனால், தம்முடைய பெயரை அந்த நாட்டுக்கு சூட்டும் பாக்கியம் கொலம்பஸுக்கு கிடைக்கவில்லை. 1501- ஆம் வருடத்தில் அமெரிக்கோ வெஸ்புக்கி என்ற இத்தாலியர், தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் என்ற நாட்டை கண்டுபிடித்தார். ஐரோப்பா திரும்பியதும் தம்முடைய செயல்களை குறித்து புத்தகம் வெளியிட்டார். அது முதல் இந்நாட்டுக்கு “அமெரிக்கா” என்று பெயரிடப்பட்டது. “சிவப்பு இந்தியர்”, “அமெரிக்க இந்தியர்” ஆனார்கள்.

6. அயர்லாந்து

அயர்லாந்தின் தலைநகரான டப்லின் சுமார் 5 லட்சம் மக்களை கொண்ட அழகிய சிறுநகரம். அயர்லாந்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 30 லட்சம்.இதில் வட அயர்லாந்தைச் சேர்ந்த சிறு பகுதி பிரிட்டிஷ் நிர்வாகத்தில் உள்ளது.மற்ற பகுதிகள் சுதந்திர ஐரிஷ் மாகாணங்கள், ஐரிஸ் ∴ப்ரீ ஸ்டேட்டஸ் என்று அழைக்கப்படுகின்றன. இதின் தலைநகர் தான் சரித்திர பெருமை வாய்ந்த டப்ளின் நகரம்

டப்ளின் நகருக்கு நடுவே செல்லும் ஆறு, போக்குவரத்து வசதிக்கு மிகவும் சௌகரியமானது. ஆற்றின் குறுக்கே உள்ள பாலங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளன. இரு கரைகளில் உள்ள வீடுகளின் தோற்றம் ஆற்று தண்ணீரில் தலைகீழாகத் தோன்றுவது மிகவும் அழகாக காட்சி. நகரின் பிரதான வீதியில் பல சித்திர வேலைபாடு அமைந்த சிலைகளும், வெற்றிச் சின்னங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

தற்பொழுது அயர்லாந்து பாங்க் உள்ள கட்டிடம். பழமையும் வனப்பும் வாய்ந்த ஒன்று. இது முன்னாள் பார்லிமெண்டுக் கட்டிடமாக இருந்தது.டப்ளின் சர்வகலாசாலை, டிரினிடி கலாசாலை முதலியவை ஊருக்கு நடுவே உள்ளன. அங்கு அப்பொழுது சுமார் பத்து இந்திய மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்.

பீனிக்ஸ் பூங்கா என்பது அயர்லாந்தில் மட்டுமல்ல ஐரோப்பாவிலேயே மிகவும் பெரிய பூங்கா. ஐரிஸ் மக்களின் நேர்மையை விளக்குவது போன்று இந்த பூங்கா மத்திய சாலை எவ்வித வளைவுகளும் இன்றி பல மைல் மூலம் நேராக அமைந்திருக்கிறது.

7. உலகில் அழகிய பாரிஸ்

உலகத்திலுள்ள மிக அழகான நகரம் பாரீஸ்.உலக அற்புதங்களில் ஒன்றான ஈபல் கோபுரத்தை உடைய நகரம் பாரிஸ். சகல கலைகளிலும் சிறப்பற்று விளங்கும் நகரம் பாரீஸ். நிற வேற்றுமையே இல்லாத நாகரிகமான நகரம் பாரிஸ். அந்நிய நாட்டு யாத்திரிகர்களின் மெக்காவாக திகழும் நகரம் பாரிஸ். எத்தனை முறை சென்றாலும் தெவிட்டாத நகரம் பாரிஸ். மேல் நாட்டு பெண்களின் உடையிலே தினந்தோறும் புதிய புதிய பாணிகளை உண்டாக்கும் நகரம் பாரீஸ். கேளிக்கைகளுக்கும் களியாட்டங்களுக்கும் உலக பிரசித்தி பெற்ற நகரம் பாரிஸ்.

8. ரோமா ரோலான்

ரோமா ரோலான் சிறந்த பிரெஞ்சு அறிஞர்.உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். நோபல் பரிசு பெற்றவர். மகாத்மாவின் வாழ்க்கை சுயசரிதையை எழுதி, முதன்

முதலில் வெளிநாடுகளில் பரப்பியவர்.எனவே மகாத்மாவை பற்றி அவ்வறிஞரின் கருத்தை “டாகுமெண்டரி” படத்தில் எடுத்து சேர்க்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

வருடத்தில் ஆறு மாதம் ஜினிவாவுக்கு அருகில் உள்ள வில்லிநாவ் என்னும் இடத்திலும், ஆறு மாதம் பிரான்ஸ் தேசத்தில் வெஸிலே என்னும் கிராமத்திலும், ரோமா ரோலான் வசித்து வந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. அவருடைய மனைவியும், சகோதரியும் ஆங்கிலம் பேசினார்கள்.

**9.பின்லாந்து**

ஸ்காண்டிநேவியா என்று சொல்லப்படுகிற நான்கு நாடுகளில் பின்லாந்தும் ஒன்று. ஆனால், மற்ற மூன்று நாட்டினர்களான நார்வீஜியர்கள், ஸ்வீடிஸ்காரர்கள், டேனிஷ்காரர்கள் ஆகியோர் பின்லாந்தை பூகோள முறைப்படி தான் ஸ்காண்டிநேவியா நாடாக கொண்டனர். பின்லாந்தைத் தவிர மற்ற மூன்று தேசத்தினர்களும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள்.

பின்னீஷ்காரர்களின் உருவம், மொழி, பழக்கவழக்கம் எல்லாமே மற்றவர்களிடம் இருந்து வித்தியாசப்பட்டன. பின்னீஸ்காரர்கள் வெள்ளைக்காரர்கள் அல்லரென்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. பின்னிஷ்காரர்கள், ஸ்லோவாக் என்ற வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. பின்னிஷ்காரர்கள் நல்ல வெள்ளை நிறமுடையவர்கள். எல்லாரும் உருண்டை முகத்தினர், செம்பட்டை மயிரினர்.

பின்னிஷ் தேசத்தின் நாணயம் பின்னிஷ் மார்க் என்பது பவுனுக்கு 227 மார்க். ஒரு ரூபாய்க்கு சுமார் 17 மார்க்.சாமான்களின் விலை என்றால் மலிவு.யாத்திரிகர்கள் குறைவான செலவிலே பிரயாணம் செய்யக் கூடிய நாடுகளில் பின்லாந்தும் ஒன்று.

கோடை காலத்தில் பின்லாந்தில் சூரியன் காலையில் 1 மணிக்கே உதயம் ஆகிவிடும்.இரவு 11 மணிக்கு தான் அஸ்தமிக்கும். பின்லாந்தில் வீதிகளுக்கு காட்டு என்று பெயர். பின்னீஸ்காரர்கள் நன்றாக சாப்பிடுவார்கள். தயிர் சாப்பிடுவதில் அவர்களுக்கு பிரியம் அதிகம். தயிருக்கு பின்னிஷ் மொழியில் “வீலி” என்று பெயர். தயிரே ஒரு ஆகாரம் தான்.தயிருடன் இஞ்சி சர்க்கரை முதலியவற்றை சாப்பிடுவார்கள்.

**10. கோப்பன்ஹேகன் மகாநாடு**

டென்மார்க் தேசத்தில் 1939- ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச வியாபார மகாநாட்டுக்கு, பர்மா செட்டியார்கள் சங்க பிரதிநிதியாக சென்றிருந்தேன். பாரிஸ் நகரில் இருந்த சர்வதேச வியாபார சங்கத்தின் தலைமை காரியாலயத்தில், பிரதிநிதி கட்டணம் 500 பிராங்கை செலுத்திவிட்டு, பெர்லினுக்கு சென்றேன். பெர்லினிலிருந்து ஒரு ஸ்வீடிஸ் விமானத்தில், டென்மார்க்கின் தலைநகரான கோப்பன்ஹேகனுக்கு பிரயாணமானேன். சுமார்

ஒன்றரை மணி நேரத்தில் விமானம் கோப்பன் ஹேகன் விமான நிலையத்தை அடைந்தது. நியூயார்க் நகரில் டேனிஷ் இளைஞரான ஜான் ஜார்னாவும், அவர் மனைவியும், எனது பழைய நண்பருமான கென் என்ற அமெரிக்க மாணவரும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

41 தேசங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் டென்மார்க்கில் கூடினர். அங்கு அரசு குடும்பத்தினரும் வந்திருந்தனர். பிரதம மந்திரி, பலருக்கும் புரியாத டேனிஷ் மொழியில் பேசினார். அவர் பேசி முடிந்ததும், எங்களை அவர் அன்போடு வரவேற்றதாக வரவேற்றதாக எங்களுக்கு ஆங்கிலத்தில் அறிவிக்கப்பெற்றது.

பிற்பகல் பார்லிமென்ட் கட்டிடத்தில் மகாநாடு ஆரம்பம் ஆயிற்று. “இந்த மகாநாட்டில் ஓட்டு போடுவதைக் குறித்து நீங்கள் எனது யோசனைகளுக்காகக் காத்திருக்க வேண்டாம். எந்த தீர்மானம் வந்தாலும் விரோதமாக ஓட்டு போடுங்கள். ஏனென்றால் மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்று கூட நமக்கு சாதகமாயிராது” என்று வால்சந்த் கூறினார்.

## 11. ஜெர்மனியில் ஒரு தமிழ் புலவர்

ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் நகரில் பைதான் சாஸ்திரியார் என்ற ஒரு புலவர் இருந்தார். இந்திய மாணவர் சங்க கூட்டம் ஒன்றில் நண்பர் ஒருவர் பைதான் சாஸ்திரியாரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

பைதான் சாஸ்திரியார் ஒரு கிறிஸ்தவ மத பிரச்சாரகராக 8 வருடங்கள் தமிழ்நாட்டில் தங்கி இருந்த பொழுது, இவர் முறையாக தமிழ் பயின்றார். தமிழ்க்கலையில் உண்டாகும் இன்பத்தை ரசிக்கும் தன்மை அவருக்கு உண்டு. தமிழ்நாட்டு படங்கள், கூஜா, செம்பு, மணி முதலிய பொருட்கள்,ஏராளமான தமிழ் புத்தகங்கள், சில தமிழ் பத்திரிகைகள் ஆகியவற்றை அவர் இல்லத்தில் காண முடிந்தது.

பைதான் சாஸ்திரியார் தில்லை நகர சபையின் அங்கத்தினராக இருந்தவர். இந்தியாவில் இருந்து அவர் ஜெர்மனிக்கு வந்ததும் சர்வகலா சாலையில் அந்நிய நாட்டு மாணவர்கள் சம்பந்தமானவற்றை கவனிக்கும் அதிகாரியிடம் சென்று, “இந்தியாவில் இருந்து யாராவது தமிழ் மாணவர்கள் வந்தால் தயவு செய்து தெரிவியுங்கள்” என்று கூறினார். பல ஆண்டுகள் வரை ஒரு தமிழரையும் இவர் சந்திக்கவில்லை.

12 ஆண்டுகளுக்கு பின்னர் அவ்வதிகாரி “தமிழென்று ஒரு மொழி இருப்பதாக நான் நம்பவில்லை” என்று கூறினாராம். சாஸ்திரியாருக்கு என்னிடம் பேச தமிழ்நாட்டு

நினைவுகள் அதிகமிருந்தன. இட்டலி, சாம்பார், அப்பம்,அப்பளம் முதலியவற்றைப் பற்றி அவர் கூறிய போது எனது நாக்கில் ஜலம் ஊறிற்று.

12.பிராஹா

இரண்டாவது மகா யுத்தத்தில் சிறகிழந்தப் பறவை போல துடித்தது செக்கோஸ்லோவாக்கியா. முதல் மகா யுத்தத்திற்குப் பின் உருவான அந்த தேசத்தில் தாமஸ் மஸாரிக் தலைவராக இருந்தார். இந்த செக்கோஸ்லோவாக்கியாவின் தலைநகர் பிராஹா என்பதாகும்.

ஆங்கிலத்தில் பிரேக் என்று பெயர். பழமையும் பெருமையும் நிறைந்தது இந்த அழகிய நகர் பிராஹா. இந்த நாட்டின் நாணயம் குரோனர். ஒரு பவுனுக்கு அப்போது சுமார் 145 குரோனார்கள். 5 ,10, 50 ,100 குரோனர்களுக்கு நோட்டுகள் உண்டு.

ஐரோப்பாவில் உள்ள சிறந்த திரைப்பட காட்சி சாலைகளோடு பிரகாவில் உள்ளவற்றையும் ஒப்பிடலாம். படங்களிலிருந்து செக்கோஸ்லோவாக்கியர்களின் வாழ்க்கை நமக்கு ஓரளவு தெரியும். ஜனநாயக உணர்ச்சியும், உடலமைப்பும், கட்டுப்பாடும், நல்ல உழைப்பும் உள்ள மக்கள் செக்கோஸ்லோவாக்கியர்கள்.

பிரபலமான ஸ்கோடா தொழிற்சாலையும்,பாட்டா தொழிற்சாலையும் இந்நாட்டில் உள்ளவையே. செக்கோஸ்லோவாக்கியர்களுக்குள் சகோதர உணர்ச்சியையும், தேசப்பற்றையும் வளர்ப்பது “செக்கோல்” எனும் உடற்பயிற்சி சங்கமாகும்.

13.இத்தாலியில்

இத்தாலியின் தலைநகராக இருந்தது ரோமாபுரி. சர்வாதிகாரி முசோலினியின் காரியாலயம் ஊருக்கு நடுவே உள்ள பழைய அரண்மனை ஒன்றில் இருந்தது. மார்க்கோனியும், மக்ரோனியும் பிறந்தது இந்த நாட்டில் தான். மாக்ரோனி என்பவர் விஞ்ஞான நிபுணர். மக்ரோனி என்பது ஒரு உணவு பொருள். ஏழை முதல் பணக்காரர் வரை தினந்தோறும் விரும்பி உண்ணும் உணவு மக்ரோனியாகும். அதில் பல வகைகள் உண்டு.

பொதுவாக இத்தாலியர்களின் உணவு சாதாரணமானது ஏழ்மையானது. நேப்பிள்ஸ், பிரிண்டிஸி போன்ற துறைமுகங்களில், பகட்டான உடை அணிந்த போலீஸ்காரர்களையும், பசியால் இரங்கி நிற்கும் ஏழை குழந்தைகளையும் பார்க்கலாம்.

இத்தாலியில் பெரும்பாலோர் பழுப்பு நிறத்தவர். கரையோரங்களில் ஏறக்குறைய கருப்பு நிறமுள்ள இத்தாலியர்களையும் காணலாம். முசோலியின் அரசாங்கம் தேகப் பயிற்சியில் அதிக கவனம் செலுத்தியது. அந்த தேகப் பயிற்சி வெறும் உடற்பயிற்சி

அல்ல. யுத்தப் பயிற்சி. அவர்கள் பயிற்சி பெறும் இடத்திற்கு முசோலினி ஸ்டேடியம் என்ற பெயர். அபூர்வமான அந்த பெரிய ஸ்டேடியம் முழுவதும் பளிங்குக் கற்களால் அமைக்க பெற்றிருந்தது. சினி சிட்டா என்பது இத்தாலியில் உள்ள மிகச்சிறந்த ஸ்டுடியோ. இதனை ஹாலிவுட்டில் உள்ள நல்ல ஸ்டுடியோ ஒன்றுக்கு ஒப்பிடலாம்.

### 14. பொருட்காட்சிக்குத் தக்க மாளிகை

ஜினிவாவில் சர்வதேச சங்கத்துக்கு முன்னால் அமைந்த கட்டிடம் சர்வதேச பொருட்காட்சிசாலையோ என்ற சந்தேகம் உண்டாகும் அளவில் அமைந்துள்ளது. அந்த மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு மேசையிலும், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஏழு "ஸ்விட்சு"கள் இருந்தன. கூட்டம் நடைபெறும் பொழுது அங்கத்தினர் தமது "ஹெட்போனை" வைத்துக் கொண்டு, தமக்கு எந்த மொழி தெரியுமோ, அந்த மொழிக்குரிய விசையை அழுத்தினால், அந்த மொழியில் மொழிபெயர்த்து சொல்லப்படும் பிரசங்கத்தை கேட்கலாம். சர்வதேச அங்கத்தினர் உட்காரும் மண்டபத்தின் மேலே ஸ்பானியர்கள் செய்த, தங்கம் எல்லாம் பூசப் பெற்ற, பல அரிய சித்திர வேலைபாடுகளைப் பார்க்கலாம்.

### 15.தென்னாப்பிரிக்கா

தென்னாப்பிரிக்கா பொதுவாக ஒரு நல்ல நாடு. டிரான்ஸ்வால், பொன் விளையும் பூமி. ஜோகன்னஸ்பர்க் நகரம் மிகவும் நாகரிகமானது. நியூயார்க் நகரத்தின் ஒரு பகுதி போல தோன்றியது. பிரிட்டோரியாவும் ஒரு அழகான நகரம். டர்பன் மிகவும் சுத்தமான நகரங்களில் ஒன்று. அந்நாட்டின் நீக்ரோக்கள் மிகவும் பிற்போக்கானவர்கள். இந்தியர்கள் வீட்டிலும் வெள்ளையர்கள் வீட்டிலும் வேலை செய்து வந்தார்கள். இவர்கள் வாங்கிய சம்பளம் மிகக் குறைவு. நீக்ரோக்களை முன்னுக்கு வரவிடாமல் செய்ததில், இந்தியர்களும், வெள்ளையர்களும் ஒரே மாதிரி தான்.

நிறைவேற்றுமையினால் இந்தியர்கள் பட்ட கஷ்டங்கள் அதிகம். அங்குள்ள இந்தியருக்கு அவையெல்லாம் பழக்கமாக்கிவிட்டன. டர்பனின் சில விதிகளில் இந்தியர்கள் நடந்து செல்ல முடியாது. திரைப்படக் காட்சி, நாடகம் முதலிய இடங்களில் இந்தியர்களை அனுமதிக்க மாட்டார்கள். டிராம், பஸ் முதலியவைகளில் இந்தியர்களுக்கு, மேல்தட்டில் கடைசி மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

### 16.கப்பல் பிரயாணம்

கப்பல் பிரயாணம் என்றதும் பலருக்கு மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு அளவுகடந்த வெறுப்பு உண்டாகும். கடல் நோய் ஒன்று மட்டும் இல்லாவிட்டால், கப்பல்

பிரயாணத்தைப் போல சௌகரியமானது வேறு ஒன்றுமே இல்லை. பிரயாணம் செய்வதற்கு புதிய புதிய சாதனங்களை எல்லாம் கண்டுபிடித்து வருகிறார்கள்.

வேகத்தை மட்டும் முக்கியமாக கருதினால், ஆகாய விமானமும், ரயிலும் சிறந்தவை. ஆனால் சௌகரியத்தை மட்டும் முக்கியமாக கருதினால், கப்பல் பிரயாணத்திற்கு இணையானது வேறு எதுவும் இல்லை. ரயிலில் பிரயாணம் செய்யும் போதும், வேகமாக ஓடும் ரயில்களையே நாம் விரும்புகிறோம். கைகாட்டிகளை காணும் இடங்களில் எல்லாம் நிற்கும் ரயில்களைக் கண்டால் நமக்கு வெறுப்பு உண்டாகிறது. ஆனால் ரயிலை போல கப்பல் வேகமாக செல்லாது. மணிக்கு 10 மைல் முதல் 30 மைல் மயில் வரை தான் செல்லும்.

கப்பலைப் பொறுத்தவரையில் அதன் வேகத்தை விட, அதன் அளவும்,எடையும் தான் முக்கியமானவை. கப்பல் எவ்வளவுக்கு எவ்வளவு நமக்கு சிறியதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நமது பிரயாணமும் கஷ்டமாக இருக்கும்.கப்பல் பெரிதாக இருந்தால், அதிகமாக ஆடாமல் அசையாமல் சந்தோஷமாகப் பிரயாணம் செய்யலாம்.

## 17.கப்பல் ஞாபகங்கள்

சிங்கப்பூரில் இருந்து ஒரு கப்பலில் ஹாங்காங்குக்கு பிரயாணம் ஆனேன். ஆறாவது நாள் காலையில் கப்பல் துறைமுகத்தை அடைய வேண்டும். ஆனால் ஐந்தாவது நாள் இரவில் பெரும் புயல் காற்று அடிக்கத் தொடங்கியது. கப்பல் தொட்டிலைப் போல ஆடியது.எங்கும் ஒரே கூச்சல், அழுகை.

கப்பலின் தலைமை அதிகாரி பிரயாணிகளைப் பார்த்து, “இனி நீங்கள் உங்கள் இஷ்ட தேவதைகளைப் பிரார்த்தனைச் செய்து கொள்ளலாம்” என்று கூறினார். கப்பலில் பல மதத்தினர் பயணம் செய்ததால், “ஒரு மதத்து தேவதை இல்லாவிட்டாலும் மற்றொரு மதத்து தேவதையாவது கப்பலை காப்பாற்றலாம்” என்று கப்பல் அதிகாரி எண்ணியிருக்கக்கூடும். கப்பலில் உள்ள அத்தனை பேரும், ஒரே முகமாக,கரைசேர வேண்டும் என்று பிராத்தித்தனர். ஆண்டவன் வேறு விதமாக எங்களை கரை சேர்த்து விடாமல் மறுநாள் காலையில் ஹாங்காங் துறைமுகத்தில் கரை சேர்த்து விட்டார்.

கப்பல் துறைமுகத்துக்கு வந்தால் ஒவ்வொரு துறைமுகத்திலும் குறைந்தது சில மணி நேரமாவது தங்கும். இந்த இடைக்காலத்தில் ஏராளமான வியாபாரிகள், கப்பலுக்குள் வந்து கடையை விரித்து விடுவார்கள். பேரம் செய்வதில் இவர்களுக்கு அதிகமான லாபம் உண்டு. ஹாங்காங் துறைமுகத்தில் ஒருமுறை ஒரு சீனன் கப்பலில் கடைவிரித்திருந்தான். ஒரு அமெரிக்க பெண் அந்த கடையில் உள்ள ஒரு அழகிய பொம்மையைப் பார்த்து “இதன் விலை என்ன?” என்றாள். “8 டாலர் “என்று சீனன் பதில் கூறினான். அமெரிக்க

பெண், "சாமான் வேண்டாம்" என்று கூறிவிட்டாள். ஆனால் சீனன் விடவில்லை. "உங்களுக்கு இஷ்டமான விலைக்கு கேளுங்கள்" என்று கூறினான். ஒரு தடவை சாமான விலைக்குக் கேட்டுவிட்டால் பின்னர எளிதாக விடமாட்டார்கள். அந்த அமெரிக்க பெண் சீனனின் தொந்தரவு பொறுக்க முடியாமல், "சாமான் வேண்டாம்" என்று கருத்துடன், "ஒரு டாலருக்கு கேட்டாள்". சீனன் சிறிதும் யோசிக்காமல், "சரி, எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டான்.

சில மணி நேரத்துக்குப் பிறகு கப்பல் துறைமுகத்தை விட்டு நகர்ந்தது. அமெரிக்க பெண் தான் வாங்கிய சாமானை மற்ற பிரயாணிகளிடம் காண்பித்து, தான் அதை ஒரு டாலருக்கு, அதாவது மிகவும் குறைந்த விலைக்கு வாங்கிவிட்டதாக பெருமை அடித்து கொண்டாள். வயதும் அனுபவமும் நிறைந்த பிரயாணி ஒருவர் அந்த பெண்ணை பார்த்து, "அம்மா இந்த சாமானின் விலை அரை டாலர்தான், உங்களை கடைக்காரர் ஏமாற்றி விட்டான்" என்றார்.

### 18.பிரயாண நினைவுகள்

ஆயிரக்கணக்கான புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கும் அழகை பார்த்துக் கொண்டிருப்பதில் எனக்கு ஆசை உண்டு. பொழுது போகாத நேரங்களிலே புத்தகக் கடைக்குச் செல்வேன். ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் பழைய புத்தகம் விற்கும் 200 கடைகள் ஒரே வரிசையாக அமைந்திருந்தன. அங்கு லட்சக்கணக்கான புத்தகங்கள் வைத்திருந்தார்கள். அவற்றில் "ஆங்கில ஆசான்" புத்தகமும் ஒன்று. அங்குள்ளவர்களுக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் தெரியாது. புத்தகங்களை எடை போட்டு விற்கும் புதுமையை அந்த நாட்டில் கண்டேன்.

பெர்னாட்ஷா எழுதிய சிறந்த சிறிய புத்தகம் ஒன்று நான்கணாவுக்கு கிடைத்துவிடும். ஆனால் கிழிந்து போன பழைய சேமபர்ஸ் டிக்ஷனரிக்கு ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டும். "கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று" என்பார்கள். இப்பழமொழி நாணயம் மாற்றுதலுக்கு மிகவும் பொருந்தும். ஒரு ரூபாய் நாணயத்தைப் பத்து, பதினைந்து நாடுகளில் மாற்றினால் அது அரை ரூபாய் ஆகிவிடும். இப்படி மாற்றிக் கொண்டே போனால் கடைசியில் ருபாயே மறைந்துவிடும். நாணயத்தை மாற்றும் பொழுது வியாபாரிகளின் நாணயமே மாறிவிடுகிறது.

ஷாங்காயில் ஒரு காலத்தில் சிறிய பணம்,பெரிய பணம் என்று இரண்டு இருந்தன. ஒரு ஷாங்காய் டாலருக்கு 300 காப்பர்கள். ஒரு காப்பர் என்பது காலணா நாணயம் அளவில் இருக்கும். ஒரு டாலருக்கு சில்லறை மாற்றிய பொழுது 240 காப்பர்களை ஒரு கடைக்காரன் என்னிடம் கொடுத்தான். ஒரு டாலருக்கு எவ்வளவு சில்லறையா என்று ஆச்சரியப்பட்டு கொண்டே கப்பலுக்குச் சென்றேன். கப்பலில் உள்ள ஒரு நண்பரிடம்

எனக்கு அதிர்ஷ்டத்தைக் குறித்து பெருமையோடு கூறினேன். அதற்கு அவர், "அட பாவமே, உங்களை 60 காப்பர்கள் ஏமாற்றி விட்டானா?" என்றார்.

**முடிவுரை**

உலகம் சுற்றும் தமிழன் என்னும் நூல் மூலமாக கடல் மார்க்கமாக உலகத்தை சுற்றி வந்த பயண அனுபவங்களைத் திறம்படவும், சுவைபடவும் எழுதியுள்ளார். இந்நூலை வாசிப்பதாலேயே உலக நாடுகளை ஒவ்வொன்றாய் சுற்றிப் பார்த்த அனுபவமும், ஆனந்தமும் கிடைத்துவிடும். கப்பலில் பயணிப்பது தொடங்கி வெவ்வேறு நாட்டு மக்களின் பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் அழகுற பதிவு செய்துள்ளார் ஆசிரியர் அ.க.செட்டியார்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | காந்திகுறித்த அயல் தேசத்துபுரிதல்கள் குறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | கோப்பன் ஹேகன் மகாநாடு - விளக்குக. | K4 | CO3 | PO5 |
| 3 | கப்பல் ஞாபகங்கள் குறித்துவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | ஜெர்மனியில் ஒருதமிழ் புலவர் செய்திகளைவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | சிவப்பு இந்தியர் குறித்தசெய்திகளைகுறிப்பிடுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | உலகம் சுற்றும் தமிழன் என்னும் நூல் உணர்த்தும் பயணஅனுபவங்கள் யாவை? | K3 | CO4 | PO4 |
| 2 | அ.க.செட்டியார் உலகநாடுகள் பற்றிகுறிப்பிடும் செய்திகளைத் தொகுத்துஎழுதுக. | K4 | CO2 | PO6 |
| 3 | அ.க.செட்டியாரின் பிரயாணநினைவுகள் கட்டுரையைஎடுத்துரைக்க. | K1 | CO1 | PO5 |
| 4 | வெவ்வேறுநாடுகளின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் குறித்துஅ.க.செட்டியாரின் பதிவுகளைதொகுத்துரைக்க. | K5 | CO5 | PO6 |
| 5 | அ.க.செட்டியாரின் இலக்கியபங்களிப்பைகுறித்துவிவரிக்க. | K6 | CO3 | PO3 |

# அலகு 3

## வனவாசம்

**ஆசிரியர்-கண்ணதாசன்**

கண்ணதாசன் புகழ்பெற்ற தமிழ் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்பட பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், உரைநடைகள், தன் வரலாற்று நூல்கள் பலவற்றை எழுதியவர். சண்ட மாருதம்,திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல் திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் செயல்பட்டவர். 1968-இல் “குழந்தைகளுக்காக” என்ற படத்தில் “தேவன் வந்தான்”என்ற பாடலை இயற்றியதற்காக தேசிய விருது பெற்றவர். தென்னிந்தியாவிலேயே பாடல் ஆசிரியருக்கான முதல் தேசிய விருதை பெற்றவர் கண்ணதாசன் ஆவார். 1980-இல் “சேரமான் காதலி” என்ற படைப்பிற்கான சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

**வாழ்க்கைக் குறிப்பு**

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் தமிழ்நாட்டிலுள்ள காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்ற ஊரில், நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில், சாத்தப்ப செட்டியார் விசாலாட்சி ஆச்சி தம்பதியருக்கு 24-06-1927-இல் எட்டாவது மகனாக பிறந்தார். சிறுவயதில் இவரை சிகப்பு ஆச்சி என்பவர் 7000 ரூபாய்க்கு தத்து எடுத்துக் கொண்டார். இவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். ஆரம்பக் கல்வியை சிறுகூடல்பட்டினத்திலும், பின்னர் எட்டாம் வகுப்பு வரை அமராவதி புதூர் உயர்நிலைப் பள்ளியிலும் கற்றார். ஒரு பத்திரிகை ஆசிரியர் பணிக்கு சென்றபோது முதலில் அவர் வைத்துக்கொண்ட புனைப்பெயர் கண்ணதாசன் என்பதாகும்.

**குடும்பம்**

முதலில் பொன்னழகி என்னும் பொன்னம்மாளை 1950- இல் திருமணம் செய்தார். இவர்களுக்கு கண்மணி சுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய நான்கு மகன்களும், அலமேலு, தேனம்மை, விசாலாட்சி ஆகிய மூன்று மகள்களும் பிறந்தனர். கண்ணதாசன் 1951-இல் பார்வதி என்பவரை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு காந்தி, கமல், அண்ணாதுரை, கோபாலகிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய ஐந்து மகன்களும், ரேவதி, கலைச்செல்வி ஆகிய இரண்டு மகள்களும் உள்ளனர். ஐம்பதாவது வயதில் புலவர் வள்ளியம்மை என்பவரை மூன்றாவதாக திருமணம் செய்தார்.

இவர்களுக்கு விசாலி என்னும் மகள் ஒருவருமாக மொத்தம் பதினைந்து குழந்தைகள் பிறந்தனர்.

### அரசியல் ஈடுபாடு

அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த கண்ணதாசன் 1961-இல் கருத்து வேறுபாட்டால் கட்சியிலிருந்து வெளியேறினார்.சம்பத்துடன் இணைந்து தமிழ் தேசிய கட்சியைத் தொடங்கினார். பின்னர் தமிழ் தேசிய கட்சி காங்கிரஸ் கட்சியுடன் இணைந்தது. காங்கிரஸ் கட்சி பிளவுபட்ட போது இந்திரா காந்தி பக்கம் நின்றார். தான் இருந்த கட்சிகளின் தலைவர்களது உண்மை நிலை தெரிந்ததும், அக்கட்சியில் இருந்து விலகி விடுவார். அரசியல் ரீதியாக எம். ஜி. ஆர்-ஐ கண்ணதாசன் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார். தன்னைப் பற்றி கண்ணதாசன் விமர்சித்த போதிலும் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக கண்ணதாசனை 1978-இல் எம். ஜி. ஆர். நியமித்தார்.

### மறைவு

உடல் நல குறைவு காரணமாக 17-10-1981-இல் அமெரிக்காவின் சிகாகோ நகர் மருத்துவமனையில் கண்ணதாசன் மரணம் அடைந்தார். அவரது உடல் அக்டோபர் 20-இல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு இலட்சக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலிக்குப் பிறகு அரசு மரியாதையுடன் அக்டோபர் 22-இல் எரியூட்டப்பட்டது.

### மணிமண்டபம்

தமிழ்நாடு அரசு, கண்ணதாசன் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், புதிய பேருந்து நிலையம் அருகில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் அமைத்துள்ளது.

### வனவாசம் நூலின் முன்னுரை

சுய சரிதம் எழுதுகிறவனுக்கு இரண்டு பெருமைகள் வேண்டும். ஒன்று அதை எழுதும் போது அவன் புகழ் ஓங்கி நிற்க வேண்டும். இரண்டு அவன் வாழ்வில் வியக்கத்தக்க சாதனைகள் நிகழ்த்தியிருக்க வேண்டும். இந்த இரண்டும் இருந்தால்தான் அவனது சரித்திரத்தைப் படிப்பதற்கு சில பேர் கிடைப்பார்கள். என்னை பொருத்தவரை என் புகழ் குன்றிலிட்ட விளக்காக ஒளி வீசுகின்றது என்று நான் பெருமைப்பட முடியாது.

என் வாழ்வில் வியக்கத்தக்க சாதனை என்று எதுவும் இல்லை. ஆயினும் எந்த துணிச்சலில் நான் சுயசரிதம் எழுதத் துவங்கினேன். இது கேள்வி? நான் நடந்து வந்த பாதை தனி வாழ்வில் நான் பட்ட துயரங்கள் இவை எல்லாம் ஒரு கதை போல் இருப்பதாக நான் கருதினேன்.ஆகவே வேறு கதாபாத்திரங்களை உற்பத்தி செய்து கதை

எழுதுவதைவிட என்னைப் பாத்திரமாக்கி உண்மையைக் கதை வடிவில் சொல்ல நான் விரும்பினேன். அந்த முயற்சியே இந்த நூலாக இருந்தது.

நான் என்று எழுதுவதற்கு தகுதி போதாது என்ற தன்னடக்கத்துடனே அவன் என்று என்னை குறிப்பிட்டேன்.இதில் நான் பிறந்த கதை சொல்லவில்லை. அப்படி ஒன்றும் நான் அதிசய பிறவி அல்ல என்பதனால் ஒரு பெரிய அரசியல் தலைவனின் வரலாறு அல்ல. இது ஒரு மாபெரும் கவிஞனின் காவிய வாழ்க்கை அல்ல.இது வாழ்க்கை வழிப்போக்கன் ஒருவனின் உயர்வு தாழ்வுகள். இதனை படிக்கிறவர்கள் என்னை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

என் காலத்திற்குப் பிறகு இது ஒரு அதிசயமாக இருக்கும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. இதில் நான் வனவாசம் என்று குறிப்பிடுவது ஒரு அரசியல் கட்சியில் நான் வாழ்ந்த வாழ்க்கையாகும். அந்தக் கட்சியிலிருந்து வெளியேறியதோடு வனவாசம் முடிந்து விடுகிறது. இந்த வனவாசத்தின் ஒரு பகுதி முதலில் தென்றலிலும் பிறகு இனம் முழக்கத்திலும் வெளிவந்தது.

**எனது பிள்ளை பருவம்**

1927-ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் தேதிக்கு சரியான பிரபவ வருஷம் ஆனி மாதம் பத்தாம் நாள் அஸ்வினி நட்சத்திரமும் சிம்ம லக்கனமும் கூடிய சுப தினத்தில் பாண்டிய நாட்டில் சிறுகூடல்பட்டி என்ற கிராமத்தில் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த குழந்தையின் பெற்றோர்களுக்கு அது எட்டாவது குழந்தை. ஐந்து சகோதரிகளும், இரண்டு சகோதரர்களும் பிறந்த பிறகு அது அவதரித்திருந்தது.

‘எட்டாவது பிள்ளை வெட்டும் சேவகன்” என்பது பாண்டி நாட்டு பழமொழி. அந்தப் பிள்ளைக்கு முத்து என்று பெயரிட்டார்கள். அது பிறந்த போது நாட்டிலே பல கலகங்களுக்கு அது காரணமாக போகிறது என்று யாருக்கு தெரியும்? இல்லை அது விமர்சனத்திற்குரிய வாழ்க்கை வாழ போகிறது என்று யாருக்கு தெரியும்? அதுவும் ஒரு சிறிய சரித்திரம் படைக்கப் போகிறது என்று யாருக்கு தெரியும்?

குழந்தைக்கு வைரவன்பட்டி ஐயர் ஜாதகம் கணித்தார். எதிர்காலத்தில் பிரமாதமாக விளங்குவான் என்று பெற்றோர்களின் ஆத்மாவுக்கு சாந்தி அளித்தார். பையனுக்கு மேஷ ராசி மேஷத்தில் சனி புகும்போது பணத்தை வாரி வாரி கொடுக்கும் என்று வேறு சொல்லி வைத்தார்.

பையன் மூக்கு முழியுமாக இருக்கிறான் என்று திருஷ்டி வைத்தவர்களும் உண்டு. பிறக்கும்போதே இவ்வளவு கனமாக இருக்கிறானே என்று திகைத்தவர்களும் உண்டு. பையன் வளர்ந்த போது ஆண் பிள்ளை போல் தலையை வெட்டி விட்டு அழகு பார்க்க

பெற்றோர் விரும்பவில்லை. ஐந்து பெண்கள் பிறந்து இருக்கும் அவனுக்கு ஜடை போட்டு பூ வைத்து பெண்ணாக பார்க்கவே ஆசைப்பட்டார்கள். இரண்டு வயதுக்குள்ளேயே அவன் பெற்ற பெயர் சுட்டிப்பையன் என்பதாகும்

அந்த கிராமத்தில் ஒரு சந்திலே ஏட்டுப்பள்ளிகூடம் உண்டு. நான்கு வயது முதல் அங்கே தான் அவனுக்கு கல்வி தொடங்கியது. சம்மணம் போட்டு மண்ணிலே உட்கார்ந்து ஆள்காட்டும் விரலினால் மண்ணிலே எழுதத் தொடங்கினான். வீட்டு வாத்தியார் பொல்லாதவர். காதை பிடித்து திருகுவார். தொடையிலே கிள்ளுவார். அவனும் விட மாட்டான் மண்ணை வாரி அவர் மீது இறைப்பான்.ஓராண்டு நடந்தது அந்த படிப்பு.

அடுத்த ஆண்டு கிராமத்து ஆங்கில பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான். முதல் வகுப்புக்கு வரதராஜ ஐயங்கார் என்பவர் ஆசிரியர்.உயர்ந்த உருவம், நல்ல உள்ளம். ஒரு ஆசிரியருக்கு வேண்டிய அமைதிக்கு அவர் இலக்கணம். கூரை பள்ளிக்கூடத்தில் படித்த சிறுவன் எண்ணிலும் எழுத்திலும் ஆசை கொண்டு உற்சாகமாகப் படிக்கத் தொடங்கினான். ஐந்தாம் வகுப்பிலிருந்து தான் ஆங்கிலமும் முதல் அகர முதல எழுத்தும் அவன் கற்க தொடங்கினான்.

படிப்பிலே அவன் மக்காக இருந்திருந்தால் ஒரு வகையில் நன்மையாக இருந்திருக்கக் கூடும். எங்கோ ஒரு வட்டிக் கடைக்கு போயிருப்பான். தமிழ் உலகில் எந்த தகராறும் இருந்திருக்காது. ஆனால் அவனோ படிப்பிலே சூரன் என்று பெயர் வாங்கினான். மூன்றாம் வகுப்பு படிக்கும் போது எதையும் மனப்பாடம் செய்யும் பக்குவத்தைப் பெற்றான். அவன் பாடத்தில் மட்டும் ஊறி வளரவில்லை. பாசத்திலும் ஊறித்தான் வளர்ந்தான்.

அவன் தாய் அந்த கிராமத்தில் மரியாதைக்குரிய ஒரு தெய்வம். அவன் தந்தைக்கோ சீட்டாட்டத்தில் வீட்டையே மறந்து விடும் சுபாவம். தாயின் அருகிலேயே அவன் இருந்ததால் தந்தையின் போக்கில் தாய் பட்ட வேதனைகளை அவன் உணர முடிந்தது. தந்தை சீட்டாடி விட்டு நள்ளிரவிலே திரும்புவார்.தூங்கிக் கொண்டிருக்கும் அவன் திடீரென்று விழித்தெழுவான்.தாயிடம் பணம் கேட்டு சந்தை சத்தம் போடுவார். கடைசியில் ஏதாவது ஒரு நகையை எடுத்துக் கொண்டு வெளியே போய்விடுவார். அவனும் அழுவான்.

காலையில் உறவினர்கள் வந்து ஆறுதல் சொல்வார்கள். அவனுக்கு 12 வயதாகும் வரையில் அவனது குடும்பம் நன்றாகவே வாழ்ந்து கொண்டிருந்தது. அவன் தந்தை கார் வைத்திருந்தார். குதிரை வைத்திருந்தார். பூரணி மாடுடன் வில் வண்டியும் வைத்திருந்தார். காலையில் காபி சாப்பிடுவதற்கு 12 மைல் தூரத்தில் உள்ள காரைக்குடிக்கு காரை எடுத்துக் கொண்டு போவார்.

ஒரு தடவை பர்மாவுக்கு போய் சம்பாதித்து கொண்டு வந்தால் அது தீரும் வரை வான வேடிக்கை நடத்தி விடுவார். ஆனால் இத்தனைக்கும் நடுவே அவர் உள்ளம் முழுவதும் இரக்கம்... இரக்கம்... இரக்கம்... எந்த பிச்சைக்காரனையும் போ என்று துரத்தி அவன் பார்த்ததில்லை. கண்கலங்கி நிற்பவர்களுக்கு கையுதவி செய்யாமல் அனுப்பியதில்லை.

சந்தைக்கு போகும்போது யாருக்காவது இரண்டு ரூபாய் கொடுத்து விடுவார். திரும்ப வந்து தாயாரிடம் கணக்குச் சொல்லும்போது காய்கறி விலைகளில் அதைக் கூட்டி சொல்லி விடுவார். மீன் வேண்டும் என்றால் கடைக்கு போய் வாங்க மாட்டார். குளத்திலே எவன் மீன்பிடித்து கொண்டு இருக்கிறானோ அவன் பக்கத்திலே இருந்து உயிரோடு வாங்கிக் கொண்டு வந்து விடுவார். அவரது சகோதரியின் திருமண விருந்துக்காக ஒரு குளத்தையே குத்தகைக்கு எடுத்தார்.

கசாப்பு கடைக்கு அதிகாலையில் போனால் ஆடு வெட்டியதும் முக்கியமான பகுதிகளை எல்லாம் வாங்கிக்கொண்டு வந்துவிடுவார். கொஞ்சம் தாமதமாக போகிறவர்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றால் கடைக்காரனை அவர்கள் கேட்கும் முதல் கேள்வி "சாத்தப்பன் வந்தானா?" என்பதுதான். தான் அதிகம் உண்ண மாட்டார்.பக்கம் இருந்து மக்களுக்கு ஊட்டுவார்.

பிறமாதரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அவன் தாய் முகம் தவிர வேறு முகம் பார்த்ததில்லை என்பதில் அவருக்கு பெருமை உண்டு.போதை வஸ்துகளை அருந்திவிட்டு யார் அவர் எதிரே வந்தாலும் கொடைக்கம்பால் அடிப்பார். பர்மாவில் அவரிடம் கையாளாக இருந்த ஒருவர் கிராமத்தில் கிராம முனிசிபாக இருந்தார். அவர் ஒரு முறை குடித்துவிட்டு வந்து, அடிப்பட்டது அவனுக்கு இன்னும் நினைவிருக்கிறது. இவ்வளவு அற்புத குணங்கள் படைத்த அந்த மனிதரை சீட்டாட்டப் பேய் பிடித்து ஆட்ட தொடங்கியது. எங்கே சீட்டாட்டம் நடக்கிறது என்ற கேள்வி பட்டாலும் வீட்டையே மறந்து விடுவார். இருக்கும் இடம் சொல்லாமல் பல நாள் இருப்பார்.

கண்ணீரும் கம்பலையுமாக அவன் தாய் இருப்பார். திடீரென்று ஒரு நாள் வருவார். சீட்டாட்டத்தில் லாபம் கிடைத்ததென கொஞ்சம் பணத்தை கொண்டு வந்து தாயிடம் கொடுப்பார். அதன் மூலம் மெதுவாக சீட்டாட்டத்திற்கு அனுமதி வாங்கி விடுவார், ஒரு நாள் ஆத்திரமாக நடந்து கொண்டால் மறுநாள் அன்போடு நடந்து தாஜா செய்வார். இவர்கள் சந்தோஷமாக பேசுவதை பார்க்கும் போது தான் அவனுக்கு நிம்மதி ஏற்படும். சீட்டாட்டம் குடும்பத்தின் செல்வத்தை தேய்த்து அளித்தது. தான் சீட்டாட போகவில்லை என்று சொல்லி ஏதோ ஒரு விசேஷத்துக்குப் போவதாக போக்கு காட்டி அதற்கு சாட்சியாக அவனையும் கூட்டிக்கொண்டு போவதுமுண்டு.

செட்டிநாட்டில் வீடுகள் எப்படிப்பட்டவை என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாளைக்கு ஒரு வீட்டிலே ஆட்டம் அடக்கம்.அந்நாளில் போலீஸ் கெடுபிடி அதிகம். ஆதலால் வீட்டையும் ஊரையும் மாற்றிக் கொண்டே இருப்பார்கள். இரவும் பகலும் ஆட்டம் நடக்கும். 24 மணி நேரமும் இரண்டு மூன்று சமையல்காரர்கள் பலகாரங்கள் செய்து கொண்டே இருப்பார்கள். சூதாடுகிறவர்களுக்கு தான் லாபமும் நட்டமும்… சுற்றி இருப்பவர்கள் சாப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள்.

சூதாடுகிறவன் கெட்டான்… சுத்தி இருப்பவன் வாழ்ந்தான்.. என்பது அந்த நாட்டு பழமொழி. ஒவ்வொரு ஆட்டத்திற்கும் மேசை கட்டணம் என்று ஒரு ரூபாய் வீட்டுக்காரர் எடுத்துக் கொள்வார். கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 500 ரூபாய் அவருக்கு கிடைக்கும். அது சீட்டு கட்டு வாங்கிய செலவு பலகார செலவு ரூபாய் 100 போனாலும் நானூறு ரூபாய் மிஞ்சும். அந்த நாளில் 400 ரூபாய் என்பது இந்த நாளில் 4000 ரூபாய் ஆகும்.

ஒருமுறை காரைக்குடிக்கு சீட்டாட போயிருந்தார் அவன் தந்தை. சீட்டாடும் வீட்டிலேயே மூன்று நாள் தங்கி விட்டார். அவரை காணாமல் கலங்கிய அவன் தாய் அவனையும் அழைத்துக்கொண்டு காரைக்குடிக்குச் சென்றார். எந்த வீட்டில் ஆட்டம் நடக்கிறது என்று தெரியாமல் ஒரு உறவினர் வீட்டிற்கு போய் அங்கிருந்து கொண்டு அவர்கள் மூலம் இடத்தை கண்டுபிடித்த தாயும் அவனும் அங்கே போனார்கள். தாய் வெளியே நின்று கொண்டு அவனை உள்ளே அனுப்பினான். அவன் உள்ளே போய் அப்பச்சி ஆத்தா வந்திருக்கா என்று சொன்னதுதான் தாமதம் அவர் எரிந்து விழுந்தார். அவன் அழுதுவிட்டான். உடனே பக்கத்தில் இருந்த செட்டிமார்களெல்லாம் சாத்தப்பா நீ ஆடினால் தான் நாங்கள் ஆடுவோம்…இல்லையென்றால் ஆடமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். எல்லோரையும் திட்டி விட்டு துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு எழுந்தார். கையிலே சுமார் நூறு ரூபாய் இருந்தது.வெளிய வந்ததும் தாயாரை திட்டினார்.

மூன்று பேருமாக பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தார்கள். நடக்க நடக்க அவர் மனம் மாறியது. ஏதோ என் புத்தி கெட்டுப் போச்சு இனிமே சீட்டாடுகிறது இல்லை என்று சத்தியம் செய்தார். வழியில் இருந்த மார்க்கெட்டுக்குள் நுழைந்து தாயார் சொன்னபடி பழங்கள் காய்கறிகள் எல்லாம் வாங்கிக் கொண்டார். இவையெல்லாம் அவன் மனதிலே ஒரு பாசத்தை உருவாக்கியது. என்றாலும் அடிக்கடி அவர் மனம் மாறி சீட்டாட்டத்திற்கு போவதை அவனாலோ மற்றவர்களாலோ நிறுத்த முடியவில்லை. குடும்பம் கொஞ்சம் கொஞ்சமாக வறுமை நோக்கி நகரத் தொடங்கியது.

பள்ளிக்கூடத்துக்கு மூன்று ரூபாய் சம்பளம் கட்ட முடியாத நிலையில் பலமுறை வெளியே அனுப்பப்பட்டு எப்படியோ ஏழாம் வகுப்பு படித்தான். அப்பொழுது காரைக்குடியை அடுத்த அமராவதி புதூரில் சுப்பிரமணியம் செட்டியார் குருகுலம் என்பதை செட்டிநாட்டில் பிரபலமான பள்ளிக்கூடம் ஆகும். பழைய காலத்து குருகுலங்களின் பாணியில் நவீன

கல்வி வசதிகள் கொண்டது அது. அவனுடைய கிராமத்திலிருந்து சில மாணவர்கள் அதில் சேர்க்கப்பட்டார்கள்.

படிப்பு வசதி துணிமணிகள் உணவு வசதியோடு அமைந்த அந்த பள்ளியில் எல்லாவற்றிக்குமாக சேர்த்து மாத சம்பளம் 12 ரூபாய் தான் எப்படியோ சிரமப்பட்டு அந்த பள்ளியில் அவன் சேர்ந்தான். கிராமத்தில் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த அவனை அந்த பள்ளிக்கூடம் ஐந்தாம் வகுப்பில் தான் ஏற்றுக் கொண்டது. காரணம் கிராமத்தில் ஐந்தாம் வகுப்பில் தான் ஆங்கிலம் ஆரம்பமாகிறது என்பதுதான். ஐந்தாம் வகுப்பில் சேர்க்கப்பட்டதால் ஆங்கிலத்தில் தவ மற்ற பாடங்களில் அவன் சுட்டியாக இருந்தான். அந்தப் பள்ளியில் தான் பன்மொழிப் புலவர் அப்பாதுரை தலைமை ஆசிரியராக இருந்தார். அவனுடைய தமிழ் அறிவு வளர்வதற்கு அவர் இருந்தது பெருந்துணையாக இருந்தது சுந்தரராஜன் என்பவர் ஆங்கில ஆசிரியர். வித்வான் வீராசாமி பிள்ளை தமிழ் ஆசிரியர். அவன் ஆறாம் வகுப்புக்கு வந்த போது வித்வான் வீராசாமி பிள்ளை தமிழாசிரியர் அவன் ஆறாம் வகுப்புக்கு வந்த போது வித்துவான் பரீட்சைக்கு விசேஷ வகுப்புகள் தோன்றின. புதுமுக வகுப்பில் அவன் தேர்வு பெற்றான்.

இரண்டாம் ஆண்டு படிக்க தொடங்கி பாதியோடு நிறுத்தி விட்டான். குருகுலத்தில் அவனுக்கு இருந்த கெட்ட பெயரை போல் எந்த மாணவனுக்கும் இல்லை. இரவிலே பலாப்பழம் திருடுவான். சீட்டு ஆடுவான். வாத்தியாருக்கு பட்ட பெயர் வைத்து பேப்பரில் எழுதி ஒட்டுவான்.குருகுலத்திற்குப் பின்புறம் பெரும் காடு.

மருது பாண்டியர் கட்டிய சங்கரபதிக் கோட்டை அங்கேதான் இருந்தது. காலையில் அந்த காட்டுக்குள்ளே தான் க்யூ வரிசையில் சென்று பிறகு கலைந்து காலைக்கடன்களை கழிக்க வேண்டும். அந்த காட்டு வழியில் பல மாணவர்கள் சொந்த ஊருக்கு ஓடி விடுவார்கள். பிறகு பெற்றோர் கொண்டு வந்து விடுவார்கள் அப்படி ஓடிப்போன மாணவர்களுக்கு அங்கே கம்பி என்று பெயர். மாமிச பிரியமானவனுக்கு குருகுலத்து சைவ சாப்பாடு பிடிக்காததால் அவனும் ஒரு முறை ஓடிப்போய்விட்டான்.

16 மைல் தூரத்தில் உள்ள சொந்த கிராமத்துக்கு கால்நடையாகவே போய் சேர்ந்தான். அவன் தாயார் அழுதார்கள். பிறகு இரண்டு மூன்று நாட்கள் சௌக்கியமாக சாப்பிட்டுவிட்டு, தாயாரின் அன்பு கட்டளைக்கிணங்க தகப்பனாரோடு குருகுலம் போய் சேர்ந்தான். “இனி ஓட மாட்டேன்” என்ற நிபந்தனையின் பேரில் அவனை சேர்த்து விட்டு தந்தை திரும்பினார்.

ஒருமுறை சில மாணவர்களோடு சுவரேறிக் குதித்து நாலு மைல் தொலைவில் உள்ள காரைக்குடிக்குச் சென்று கண்ணகி படம் பார்க்க போனான். டிக்கெட் எடுத்து கொட்டகைக்கும் நுழைய போகும்போது அவன் தோளிலே ஒரு கை விழுந்தது. ஹாஸ்டல்

நிர்வாகி மகாராஜன் அங்கே வந்திருந்தார். டிக்கெட்டை கிழித்துப் போட்டுவிட்டு அவனும் சக மாணவர்களும் திரும்ப வேண்டியதாயிற்று. மறுநாள் காலையில் குருகுல நிர்வாகி சுப்பிரமணிய நயினார் அவனையும் அவனோடு சேர்ந்த மாணவர்களையும் பெட்டி படுக்கைகளை தூக்கி வெளியே வைத்து ஊருக்கு போகச் சொல்லிவிட்டார்.

நேரம் போகப் போக அவரே மனம் மாறி மன்னிப்பு கொடுத்தார்.

கடைசியாக மிச்சமிருந்த ஓராண்டு காலத்திலும் ஒழுங்காகப் படித்து எட்டாம் வகுப்பை முடித்துக்கொண்டு குருகுலத்தை விட்டு வெளியேறும் போது சுப்பிரமணி நயினார் அவனுக்கு கொடுத்த வாழ்த்து “நீ எங்கு போனாலும் உருப்பட மாட்டே” என்பதாகும்

1.மறக்க முடியாத சிரிப்பு

“நான் ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்”-கையில் இருந்த 80 பக்க நோட்டுப் புத்தகத்தை நீட்டி மிகவும் பணிவான குரலில் அவன் சொன்னான்.

ஏதோ எழுதிக் கொண்டிருந்த ஆசிரியர் தன் கண்ணாடிக் கண்களை மெதுவாக தூக்கி அவனைப் பார்த்தார்.

“என்ன எழுதியிருக்கிறாய்…?” என்று இழுத்தார். மிகவும் பயத்தோடு ‘கதை’ என்றான் அவன். “கதையா…?” ஆசிரியர் ஓங்கி சிரித்தார்.

“நீயெல்லாம் ஏனப்பா கதை எழுதுகிறாய்! போய் வேறு ஏதாவது நல்ல வேலையை பார். கதை எழுதுவதொன்றும் சாமானியமான வேலை அல்ல…: என்றார்.

ஆமை தலையை ஓட்டுக்குள்ளே இழுப்பது போல் நீட்டிய நோட்டுப் புத்தகத்தைப பின்னுக்கு இழுத்துக் கொண்டு, தலைகுனிந்து வெளியேறினார் அவன். ஆசிரியரின் அந்தச் சிரிப்பு அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

2. சிந்தனை அலைகள்

அறிவு என்பது என்ன? இதுதான்! படிக்கின்ற பொழுது உள்ளே போய், ஒரு புதுப் பொருளை வெளியே கொண்டு வந்து தள்ளுகிறது. அவ்வளவுதான்!

ஆழம் அதிகம் இருந்தால் அலை அதிகம் சுருளாது.ஆமாம், நிறையப் படித்தவனுக்கும், படிக்காதவனுக்கும் உள்ள பேதம் தான்.

ஒரு அலை மூலம் மிகப் பெரிய நண்டு ஒன்று, கரையில் வந்து விழுந்தது. பயந்து அவன் எழுந்து நின்று விட்டான். தண்டு கரையிலேயே ஓடும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அது மீண்டும் கடலுக்குள்ளேயே ஓடிற்று. கடல் அதை ஏற்றுக் கொண்டது.

அவனுக்கு ஒரு நம்பிக்கை தோன்றியது. சமுதாயம் சமுதாயம் நம்மை வெளியில் தூக்கி எறந்தாலும் நாம் மீண்டும் சமுதாயத்துக்கு உள்ளேயே ஓடித்தான் இடம் பிடிக்க வேண்டும்.வெறுப்பினால் அல்ல, அலை நண்டை வெளியே தள்ளியது. நண்டு சரியாக ஊன்றி கொள்ளாததனாலே தான் வெளியில் வந்து விழுந்தது.சமுதாயத்தில் ஒரு உயர்ந்த இடத்தில் காலூன்றி நின்று விடுவது என அவன் முடிவு கட்டிக் கொண்டான்.

### 3. வேலை கிடைத்தது

"ஏய்! யார் நீ ?"போலீஸ்காரர் அதட்டும் குரலில் கேட்டார். அவன் மௌனமாக இருந்தான். மீண்டும் கடுமையான குறைகளில் அதே கேள்வியைக் கேட்டார் போலீஸ்காரர்.

"யார் அவன்?"

ஓர் எதிர்கால எழுத்தாளன். உலகக் கடலிலே நீந்தி உச்ச இடத்தில் கால் ஊன்ற விளையும் ஒருவன். அவனைப் பற்றி அவனுக்கே அதிகமாக எண்ணம்.ஆனால் அவற்றை போலீஸ்காரரிடம் சொல்லிக் கொண்டிருக்கவா முடியும்? தன் பெயரை மட்டும் சொன்னான்.

"எழுந்திரி! எழுந்திரி! பையில் எவ்வளவு பணம் வச்சிருக்கே?"

"காலணாக் கூட இல்லை" போலீஸ்காரன் அவன் மடியைத் தொட்டுப் பார்த்தான். பெட்டியை திறந்து பார்த்தார்.ஒரு தம்பிடிகூட இல்லை. அவரது கோபம் அதிகரித்தது. பெட்டியை தூக்கி அவன் கையில் கொடுத்து," புறப்படு! புறப்படு!" என்றார். ஒரு நாலணாவாவது அவன் கையில் இருந்திருந்தால் அன்றைய கடற்கரைத் தூக்கத்திற்கு இடைஞ்சல் நேர்ந்திருக்காது.இல்லாதவன்' ஆகவே துரத்தப்பட்டான்.

பதவி உயர,உயர வாங்குகிற சம்பளம் பெருக, பெருக லஞ்சத்தொகையும் உயர்ந்து கொண்டே போகும். இது இயற்கையாக நடைபெற்று வரும் வேடிக்கை! குறைந்த சம்பளக்காரன் அதிக லஞ்சம் வாங்கினால் அர்த்தம் உண்டு. ஆனால் பாவம்! அவன் நாலணாத் தான் கேட்கிறான். உயர்ந்த இடத்தில் இருப்பவன், பணத்தை தராசில் போட்டு நிறுத்து வாங்குகிறான். அந்த போலீஸ்காரர் நாலணாக் கேட்டதை அவன் குற்றமாக நினைக்கவில்லை. அவனாவது தனிக்கட்டை. இருந்தால் சாப்பிடுவான். இல்லாவிட்டால் தூங்குவான். அவருக்கு எத்தனை குழந்தைகளோ!

வேலை இல்லாதவன் வயிற்றைக் காட்டிலும்,வேலை பார்ப்பவன் வயிறு அதிகம் விரிந்து விடுகிறது. தேவைகள் புதிய வழிகளைத் திறந்து கொடுக்கின்றன.

எழுத்தாளன் வேலை தானே கிடைக்காது! வேறு ஏதாவது வேலை பார்த்தால் என்ன? உலகத்தில் எத்தனை வகையான வேலைகள் இருக்கின்றன!

ஒரு ஆசை திடீரென்று எழுந்தது. 'திரைப்படங்களின் நடித்தால் என்ன?' என்று ஒரு கேள்வியை தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். தன் பெயரை சந்திரமோகன் என்று மாற்றிக்கொண்டான். அப்போது அடையாறிலிருந்து, இப்போது "பரகதி"யாகி விட்ட ஒரு படப்பிடிப்பு நிலையத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டான். அவர்கள் பதில் எழுதுவதில் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். "வேலை இல்லை" என்று உடனேயே பதில் எழுதி விட்டார்கள்.

பதில் கிடைத்த போது அவன் வருத்தினான். என்றாலும், தான் ஒரு நடிகனாகி விடமுடியும் என்கிற நம்பிக்கையை மட்டும் இழந்து விடவில்லை.

## 4. நினைக்காத உறவு

இந்த நேரத்தில் தான் 16 வயது நிரம்பியாத அவனுக்கு, ஒரு புதுமையான அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவத்தை உண்டாக்கித் தந்தது, அன்றிருந்த டிராம் வண்டி. ராயப்பேட்டையில் அந்த டிராம் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். அவன் எதிரிலே ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள்.

இன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துவிட்ட அந்த பெண்ணின் பெயர் எமிலி. கிறிஸ்தவ வகுப்பைச் சார்ந்தவள். அவள் கையில் 'குவண்டிண்டர்வார்டு' என்ற ஆங்கில புத்தகம் வைத்திருந்தாள். கழுத்து சங்கிலியில் சிலுவை மின்னிக் கொண்டிருந்தது.சிறிது கூட கள்ளம் கபடம் கலவாத தெளிந்த முகம். நீல நிற சேலையும், வெண்ணிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். இடதுகை விரலில் ஒரு சிலுவை மோதிரம் அணிந்திருந்தாள். அந்த பரிதாபத்திற்குரிய வாலிபனை அவள் மிகவும் அனுதாபத்தோடு பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். அவன் அவளிடம் கேட்க வேண்டியது எதுவும் இல்லை. ஆனால் அவனிடம் ஏதோ கேட்க விரும்பியள் போல, அவள் காணப்பட்டாள். அவளது பார்வையில் அந்த பொருள் தெரிந்தது. ஏதோ பேச போகிறாள் என்று எதிர்பார்த்து, அவன் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது நடந்தது அவள் கேட்டாள்.

"உங்களுக்கு எந்த ஊர்?"

அவன் சொன்னான்.

“இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கிராமம்”

“உங்கள் பெயர்?”

அவள் தன் பெயரைச் சொன்னாள்.

“இங்கே எங்கே இருக்கிறீர்கள்?” அவள் தான் இருக்கும் இடத்தைச் சொன்னாள்.

புதிய அறிமுகம். இதற்கு மேல் அவள் கேட்க வேண்டியது என்ன இருக்கிறது? ஆனாலும் அவள் மேலும் பேச விளைந்தாள்.அதை அவன் துவக்கி வைத்தான். அவளது பெயர் எமிலி என்பதையும், ராணி மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும், சொந்த ஊர் காரைக்கால் என்பதையும் பேச்சு கொடுத்து தெரிந்து கொண்டான்.

அவனிடத்தில் பேச வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு ஏன் ஏற்பட்டது? காரணத்தை அவள் விளக்கினாள்.

உடன்பிறந்த தமையன் ஒருவன் இருந்தானாம் அவளுக்கு. இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இறந்து விட்டானாம். அவனைப் போலவே இந்த எழுத்தாளன் இருந்ததால் அவனுடன் பேச்சுக் கொடுக்க விரும்பினாளாம். தன் கதையை முழுக்க அவள் அவனிடம் சொன்னாள்.

**5. இன்ப உலகம்**

காலை 6:00 மணிக்கு எழுந்து பரபரப்பாக தொலைபேசியின் அருகில் அமரும் பெரிய மனிதர்களை பார்த்திருக்கிறான். முதல் தேதி கல்கத்தா, இரண்டாம் தேதி பம்பாய், மூன்றாம் தேதி சென்னை என்று பறந்து கொண்டே இருப்பவரையும் கண்டிருக்கிறான்.காரியம் இருக்கிறதோ இல்லையோ மனிதர்கள் அவசர அவசரமாக நடக்கிறார்கள். அலுவலகங்களில் கூட்டம், ஏராளமாக இருக்கிறது. இவ்வளவு விறுவிறுப்பான உலகத்தில் எந்த விதமான கடமையும் இல்லாமல், நாளைக்கு என்ன வழி என்பதும் அறியாமல் அவனது வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. மீண்டும் பசி பட்டினி துவங்கிற்று.

வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு திறமை இருந்தால் மட்டும் போதாது. சந்தர்ப்பம் அமைவது மிகவும் முக்கியம். மேலப்புலவன் சாலையில் அவன் வந்து கொண்டிருக்கும்போது ஒரு வட்டி கடை அவன் கண்களுக்குத் தட்டு பட்டது. அதை அவனது ஊரைச் சேர்ந்த சில பேர் நடத்திக் கொண்டிருந்தார்கள். சிறிது கூட தயக்கம்

இன்றி அவன் அந்த கடையில் உள்ளே நுழைந்தான். அங்கு கிடைத்த வரவேற்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது வரும்போது எல்லாம் சேர்ந்து வரும் என்பார்களே அது மெய் ஆயிற்று. அவன் கேட்ட உடனே அங்கே பணம் கிடைத்தது. பெற்றுக் கொண்டு புறப்பட்டான் இப்போது உலகம் அவனுக்கு தொல்லை நிறைந்ததாக தெரியவில்லை. சே! சே! இதல்லவா உலகம்!

**6.முதல் கவிதை**

இராமச்சந்திரபுரம் ஓர் அழகிய நகரம். உயர்தரக் கிராமங்களில் அது சேர்க்கப்பட்டாலும், நகரத்துக்குரிய சிறப்பில்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த நகரத்திலும் காண முடியாத அளவுக்கு அகன்ற பெரிய நடுச்சாலை அதன் தனிச்சிறப்பு. ஏறக்குறைய அந்தச் சாலையின் அகலம் 200 அடி இருக்கும். சாலையின் இருமருங்கிலும் சிறிய சிறிய கடைகள் உள்ளன. ஊருக்குள் சென்றுவிட்டால், எல்லாச் சாலைகளுமே ஒழுங்காக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

செட்டி நாட்டின் மற்றைய நகரங்களைப் போலவே, இங்கும் வானளாவி நிற்கும் மாடமாளிகைகள் ஏராளமாக உண்டு. நகரத்தின் நான்கு எல்லைகளிலும் முறையாகக் கட்டப்பெற்ற நான்கு ஊருணிகள் உண்டு. அடர்த்தியாக வளர்ந்த அரச மரங்களும், புளிய மரங்களும் நகரத்தின் எழிலுக்கு மகுடம் வைப்பன. ஒரு சிறிய பள்ளியும் அங்கே உண்டு.

பஸ்ஸை விட்டு இராமச்சந்திரபுரத்தின் நடுச்சாலையில் கீழே இறங்கிய அவன், அங்கே நின்றவாறே சுற்றும் முற்றும் பார்த்தான். சில இடங்கள் மனிதனுக்குப் பார்த்த உடனேயே பிடித்துவிடும். சில இடங்கள் பழகிய பின்னும் வெறுப்புத் தரும். மனதுக்கு இது ஒரு வியாதி. கண்களைப் பகைத்துக்கொண்டு அது, தானே, தனியாகச் செயல்படுகிறது.

அந்த இளைஞுனுக்கு, இராமசந்திரபுரத்தைப் பார்த்தவுடனே பிடித்துவிட்டது. அதனால்தான் அவன் அதை 'நகரம், நகரம்' என்றே வர்ணிக்கிறான்.

மெதுவாக, அவன் பத்திரிகை அலுவலகத்தை விசாரித்துக் கொண்டு அங்கே சென்றான். ஒரு சிறிய கட்டிடம், பார்த்தால் பிள்ளையார் கோயில் மாதிரி இருக்கும். முன்பக்கத்துச் சுவரில், முட்டை கலந்த வெண்சாந்து பூசப்பட்டிருந்தது. செட்டிநாட்டு முறைப்படி, முன்வாசலும், படிக்கற்களும், தலைக்குடையும் அமைக்கப்பட்டிருந்தன. அதன் மேற்பகுதியில் வழக்கம்போல் ஒரு சிலை இருந்தது. அந்தத் தெருவிலேயே அதுதான் கடைசிக் கட்டிடம்.

அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். பத்திரிகைக்கு அலுவலகமாக அமைந்திருந்த அந்த வீடு அமைதி தவழும் இடமாகக் காட்சியளித்தது. காலில் பழைய பூட்சும், கையில் தகரப்பெட்டியுமாக நின்ற அவன், "சார், சார்!" என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை! இன்னும் உள்ளே நுழைந்தான் அந்த எழுத்தாளன்.

இரண்டு திண்ணைகள் நடுவே ஓர் ஊஞ்சல். வலப்புறத்துத் திண்ணையின் மேல் உடம்பில் சட்டை போடாமல், வெறும் துண்டை மட்டும் போர்த்திக்கொண்டு, ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் கையில் ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. கீழே ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் கையிலும் ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. அவருக்கு முன்னால் ஒரு கைப்பெட்டியின் மீது மற்றொரு கணக்குப் புத்தகம் விரித்து வைக்கப்பட்டிருந்தது. இருவரும் ஏதோ ஒரு கணக்கைப் பெயர்த்து எழுதிக் கொண்டிருந்தார்கள் என்பது, அவர்கள் இருந்த நிலையிலிருந்து தெரிந்தது. தலைகுனிந்து, கணக்கிலே ஆழ்ந்திருந்த அவர்கள், அந்த எழுத்தாளனை நிமிர்ந்து பார்த்தார்கள்.

"யார் நீங்கள்?"

"திருச்சியிலிருந்து வருகிறேன்"

"யாரைப் பார்க்க வேண்டும்?"

"பத்திரிகையின் அதிபரைப் பார்க்க வேண்டும்"

"என்ன விஷயம்?"

"அவரது சகலை ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார்.

"நான்தான்" என்று கூறிய அவர், கடிதத்தைக் கையில் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவரது முகம் மலர்ந்தது. அப்பாடா! சிபாரிசுக் கடிதம் படித்துவிட்டு ஒருவரின் முகம் மலர்ந்ததை, அப்போது தான் அவன் கண்டான்! அவனது அகமும் மலர்ந்தது.

"உட்காருங்கள்" என்று கூறிய அவர், தொடர்ந்து,"என்ன சாப்பபிடுகிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, காப்பிக்கு உத்தரவிட்டார்?

இதுவும் அவனுக்குப் புதுமையாகத்தான் இருந்தது. தாய் தந்தையரைத் தவிர அவனை அன்போடு உபசரித்தவர்கள் கிடையாதல்லவா? அவன் ஊஞ்சலில் உட்கார்ந்தான். அவன் காலில் இருந்த பழைய பூட்சு, தானும் தலை நிமிர்ந்து நின்றது.

அதாவது, அதிலிருந்து ஓர் ஆணி கழன்று மேல் பாகம் தலையைத் தூக்கிக் கொண்டு நின்றது.

“என்ன பெயரில் இதுவரையில் கதை, கட்டுரைகள், எழுதியிருக்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார்.

சொந்தப் பெயரைச் சொல்லவந்த அவன் கொஞ்சம் தயங்கினான். புனைப்பெயருக்குச் செல்வாக்கு இருந்த காலம் அது! அதிலும் தாசன் என்று வரும் புனைபெயருக்கு மரியாதையே தனி. பாரதிதான், கம்பதாசன், சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்கள் நாலுபேருக்குத் தெரிந்த பெயர்களாக விளங்கின. அவன்,“என்ன தாசன்” என்று சொல்லலாம் என்று தான் யோசித்தான். சில விநாடி யோசனைக்குப் பின் தான் யோசித்துச் செல்வதை அவர் அறியாமல் மறைக்க, எங்கேயோ நினைவில் இருந்தவன் போல், “என்ன கேட்கிறீர்கள்?” என்று கேட்டான்.

மீண்டும் அவர் பழைய கேள்வியையே திருப்பினார். அப்போதே அவன் முடிவு கட்டியபடி பளிச்சென்று “கண்ணதாசன்” என்பது, என் புனைப்பெயர்” என்றான். அவரும் அது ஏதோ அறிமுகமான பெயர்போல், “பார்த்திருக்கிறேன் பத்திரிகைகளில்” என்றார்.

இதற்குப் பெயர்தான் சந்தர்ப்பம் என்பது! உண்மையில் அவர் அந்தப் பெயரை, எந்தப் பத்திரிகையிலும் பார்த்திருக்க முடியாது. அந்தப் பெயரே இரண்டு நிமிடங்களுக்கு முன்னால்தான் பிறந்தது!

தெரியாததுபோல் காட்டிக்கொள்வது பெரிய மனிதர்களுக்கு அழகில்லையல்லவா? அவர் தெரிந்ததைப் போல் காட்டிக் கொண்டார். அவனும் சளைத்தானா? “நீங்கள் பார்த்திருக்கக் கூடும்” என்று மட்டும் கூறினான்.

கீழே உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருந்தாரே ஒருவர், அவர் திறந்த வாய் மூடாது அவனையே பார்த்துக்கொண்டிருந்தார். நிறத்தில் அவர் கறுப்புதான். ஆனால், அமைப்பான உருவம். ஜிப்பா போட்டிருந்தார். தலையை அழகாக வாரிவிட்டிருந்தான். கணக்குப் புத்தகத்தில் அவர் எழுதிய எழுத்துக்கள் மணிமணியாக இருந்ததை அவன் கவனித்தான்.

“உங்கள் பெயரென்ன?” என்று அவரைப்பார்த்து அவன் கேட்டான். அவனைப் போலவே வயதில் இளையவரான அவர் தன் பெயர் “சோமநாதன்” என்றார்.

பிறகு அவன் அவரைப்பற்றி முழுவதும் விசாரித்துத் தெரிந்து கொண்டான். அன்றிலிருந்து, அவனது நெருங்கிய நண்பராக ஆகிவிட்ட அவரது சொந்த ஊர், வலையபட்டி என வழங்கப்படும் வலம்புரியாகும். அவர்தான் இந்நாளில் “வலம்புரி

சோமநாதன்" என்று அழைக்கப்படும் எழுத்தாளர் ஆவார். நட்புக்கு அவர் ஓர் இலக்கணம். சொல்லுகிற கருத்தைக் கூர்ந்து கவனிப்பதிலும், எதையும் ஆழ்ந்து சுவைத்துப் படிப்பதிலும், தான் சுவைத்ததை தெளிவாக, அழகாகப் பிறருக்கு மயக்கம் தரும் வகையில் எடுத்துரைப்பதிலும் அவர் வல்லவர். அந்த எழுத்தாளனுக்கு அங்கே கிடைத்த வேலையைக் காட்டிலும், அந்த நண்பர்தான் உயர்வாகத் தோன்றியார். நிற்க.

கடிதத்தைப் பத்திரிகை அதிபர் பார்த்த உடனேயே அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. மிகுந்த மரியாதையோடு அவன் நடத்தப்பட்டான். முதலில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலை, 'புரூப்' திருத்துவது. பழக்கமில்லாத அந்த வேலையையும் இரண்டு நாளில் அவன் பழகிக்கொண்டான். 'புரூப்' திருத்தும்போதே, எந்தக் கட்டுரையானாலும் சாரமற்ற பகுதியை அவன் அடித்து விடுவான்.

அது ஆசிரியரின் வேலைதான் என்றாலும், அவனுக்கிருந்த தன்னம்பிக்கை இதைச் செய்யத் தூண்டியது. பத்திரிகையின் அதிபர் அதைக் கவனித்தான். வேண்டாத பகுதிகளையெல்லாம். அவன் அடித்து விலக்கியது கண்டு அவர் ரசித்தார். உண்மையிலேயே அவை தேவையற்ற பாகங்கள் என்பதைக் கண்டார்.

பிறகு ஒருநாள், பத்திரிகைக்கு ஒரு தலையங்கமே எழுதிக் கொடுக்கும் அவனைக் கேட்டார். யுத்தத்திற்குப் பின் இந்திய தேசீய இராணுவம் மலேயாவிலிருந்து இந்திய உபகண்டத்துள் பிரவேசித்த நேரம் அது.

"வருக, வருக" என்று தலைப்பிட்டு, அவன் அந்த இராணுவத்தை வரவேற்றிருந்தான். அதற்குக் கீழே துணைத்தலையங்கமாக 'பாரதத்தாய் சிரிக்கிறாள்' என்று தலைப்பிட்டு, கேப்டன் லக்ஷமியின் தலைமையில் வந்த ஜான்ஸிராணியின் படையைப் பாராட்டி இருந்தான்.

இரண்டு தலையங்கங்களையும் படித்துவிட்டுப் பத்திரிகை அதிபர் ஆனந்தக் கூத்தாடினார்.

அதன் பலன், அடுத்த வாரமே ஆசிரியராக இருந்தவருக்கு வேலை போயிற்று. அந்த எழுத்தாளன் ஆசிரியராக உயர்த்தப்பட்டான். தான் ஆசிரியராக உயர்த்தப்பட்டதில் அவனுக்கு மகிழ்வில்லை. தன்னிடத்தில் அதிக அன்பு செலுத்திய ஆசிரியர் விலக்கப்பட்டதில், அவன் மிகுந்த மன வேதனையடைந்தான். அவரிடம் சென்று, அவர் விலக்கப்பட்டதற்குக் காரணம், தான் இல்லை என்பதைப் பலமுறை அவன் கூறினான்.

வழக்கத்திற்கு விரோதமாக, அவர் அவனிடம் அதிகமான அன்பு செலுத்தி, அவன் மீது தனக்குச் சந்தேகமோ, கோபமோ கிடையாது என்று கூறினார். அன்று முதல், தினசரி மாலை வேளைகளில் அவரைச் சந்திக்க அவன் தவறுவதில்லை. ஆனால்

பத்திரிகை அதிபர் அதை விரும்பவில்லை. மாலை நேரங்களில் அவன் அந்த ஆசிரியரைச் சந்திக்காதவாறு தடைசெய்து வந்தார்.

எழுத்தாளன் ஆசிரியன் ஆனதும், தன்னுடைய ஆசைகளையும் ஆர்வத்தையும் கொட்டி ஏராளமாக எழுதலானான். எழுத்துத் துறையிலே அவனுக்கு நண்பர்கள் ஏற்பட்டார்கள். பல கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளும் இனிய நண்பராக, சோமநாதன் அவன் அருகிலேயே இருந்தார். இப்படியாக ஓர் எழுத்தாளரான அவன் உருக்கொண்டான்.

இது 1944 ஆம் ஆண்டு 'திருமகள்' என்ற பெயரில்- அவன் ஆசிரியராக இருந்த - இதழில் வெளியாகியது.

காலை குளித்தெழுந்து
கருஞ் சாந்துப் பொட்டுமிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார்கூந்தல் பின்னலிட்டுக்
காத்திருந்தேன். உம்வரவை
கடைக்கண்ணால் பார்த்திருந்தேன்!
கண்ணில் தெரிந்திலைநீர்
கனவுலகில் சஞ்சரித்தேன்!
அந்தி மயங்க
அடிவாளம் அறியாமல்
ஆடவன் நீர் ஓடிவந்தீர்!
தந்தையில் லத்திலில்லை!
தாயும்வெளிப் போயிருந்தாள்!
தகதகத்த உம்எழிலில்
தண்குணத்தாள் சொக்கிவிட்டேன்!
உம்அழகுக் கென்மனத்தை
ஒத்தியாய் வைத்தபின்னர்
உளத்தைத் திடப்படுத்தி
ஓர் வார்த்தை கேட்டுவிட்டேன்!
'யார் நீங்கள்' என்றதற்கு
'ஆணழகன்' என் றிறுத்தீர்!
'அதைத்கேட்க வில்லை! உமை
அறிந்து கொண்டேன் கண்டவுடன்
அத்தை மகன்போல
அவசரமாய் ஓடி வந்த

வித்தை தனைக் கூறி
விரைவில் வெளியேறு" மென்றேன்
"கண்ணே' எனக்கூவிக்
கரத்தைப் பிடித்துவிட்டீர்
கரம்பறிக்க எத்தனித்தேன்
காதல் தடுத்ததையோ
கட்டிப் பிடித்தீர்
கனிமுத்தம் கொடுத்தீர்
காதற் களஞ்சியத்தைக்
கலவியினால் கட்டிவிட்டீர்
பின்னர் பிரிந்த உமைப்
பேதை இன்னும் காணவிலை
ஒருநாளை இன்பமன்று
உருவாகி விட்டதையோ!
ஒன்றும் புரியவில்லை
உடன்வந்து காவீரோ!
சொல்லாலே கொல்லுகிறார்
சோர்வு பொறுக்கவில்லை
உற்றார் உளங்களிக்க
ஊராரின் வாயடைக்க
பெற்றார் உடன்வந்து
பேதையெனைக் காவீரோ!

-இங்ஙனம், காதலி

## 7. ஓர் எளிய பக்தன்

மாலை மணி ஆறடித்தது. கோயில் மணி ஓங்கி ஒலித்தது.

ஊரிலே யாருடைய கண்ணுக்கும் அதிசயமாகத் தோன்றாத ஓர் எளிய மனிதன். அந்த நடுத்தர நகரத்தின் தெருக்களில் நடந்து கொண்டிருந்தான்.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் நன்றாக வாழ்ந்த காலம் அது.

ஆகவே கோயில்கள் எப்போதும் தீபாலங்காரத்துடன் விளங்கும்.

அந்தக் கோயில்களில் ஒன்றை நாடித்தான், அவன் சென்று கொண்டிருந்தான்.

பயம் வரும்போது இறைவனிடம் முறையிட்டுக் கொண்டால், பயன் கிடைக்குமென்று அவன் திடமாக நம்பியிருந்தான்.

பக்தர்கள் காக்கப்படுவார்கள். பாவிகள் ரட்சிக்கப்படுவார்கள் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

கோயில் மண்டபத்தில் குழந்தையைப் போல அவன் அமர்ந்திருந்தான்.

கண்களை மூடி, கைகளைக் கூப்பி, தன்னையும் தன் குடும்பத்தவரையும் நிம்மதியாக வாழ வைக்கும்படி இறைவனிடம் வேண்டிக்கொண்டான்.

கோயிலில் அப்போது கூட்டமில்லை. அர்ச்சகர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அந்த ஆலயத்தினுள்ளே அவன் உள்ளம் அமைதியுற்றிருந்தது.

தாயைப் பிரித்து பழக்கமே இல்லாத அவன், தன் தாய்க்காகவே அதிகம் வேண்டிக்கொண்டான்.

ஐந்து சகோதரிகளோடும், இரண்டு சகோதரர்களோடும் பிறந்த அவன், அந்த எண்மரையும் காப்பாற்றும்படி இறைவனிடம் இறைஞ்சினான்.

நன்றாக மழை பொழிந்து ஓய்ந்த பிற்பாடு, மண்ணிலே தேங்கி நிற்கும் நீரின் அமைதியைப் போல் அவன் உள்ளமும் சலனமற்றிருந்தது.

அந்த அமைதியை இன்று நினைத்தாலும், அவன் உள்ளம் ஆனந்தத்தில் திளைக்கும்.

மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் என்றாலும், அதிலும் பத்து ரூபாய் மீதமாகும்.

ஆலயத்தில் இருந்தபடியே தான் அன்று எழுதி முடித்த கட்டுரையைப் பற்றி, அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

எதிர்காலத்தைப் பற்றிய ஆசைகள் அவன் நெஞ்சில் துளிர்விட ஆரம்பித்தன.

இன்று அவன் எழுதியதை இரண்டாயிரம் பேர் படிக்கப் போகிறார்கள்.

நாளை அவர்கள் அதிகமாகலாம். அதிகமாக வேண்டுமென்பது அவனது ஆசை.

என்னென்ன எழுதலாம்? எப்படி எப்படி எழுதலாம்? இந்தக் கேள்விகள் அவனது சிந்தனையைத் தொடர்ந்தன.

இறைவனிடத்தில் அவன் நம்பிக்கை வைத்திருந்ததால், எதிர்காலத்தையும் அவன் நம்பிக்கையுடனேயே கணக்கிட்டான்.

இன்று கட்டுரை எழுதிவிட்டோம். நாளை கதை எழுத வேண்டும் அடுத்தநாள் கவிதை எழுத வேண்டும். இப்படி அவன் தன் எண்ணங்களை வளர்த்தான்.

என்ன தம்பி என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

நீ சாத்தப்பன் மகனில்லை? வந்தவர் கேட்டார்

ஆமாம் என்றான். எழுந்து நின்றான்.

இங்கேதானிருக்கிறாயா?
ஆமாம்

அவர்கள் பேச்சுத் தொடர்ந்தது.

அவன் தந்தைக்கும் அவருக்குமுள்ள உறவை அவர் விளக்கினார்.

பர்மாவில் 'கையான்' என்ற ஊரில் இருவரும் ஒன்றாக இருந்ததாக அவர் சொன்னார்.

எப்படியாவது முன்னுக்கு வந்து நல்ல பேர் எடு என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

முன்னுக்கு வர ஆசைதான்

காற்று பின்னால் தள்ளாமல் இருக்க வேண்டும்

அவன் நடக்கத் தயார்.

பாதை தெரிய வேண்டும்.

அந்தப் பாதையைக் காட்டும்படி அந்த எளிய பக்தன் இறைவனை வேண்டிக் கொண்டான்.

கைநிறையத் திருநீறெடுத்து நெற்றியில் பூசிக் கொண்டான்.

ஆலயத்தை விட்டு வெளியேறினான்.

சென்னையில் முல்லைப் பதிப்பகம் என்று ஒரு பதிப்பகம் இருக்கிறது. முத்தையா என்பவர் அதன் உரிமையாளர்.

அங்கே போய்த் தங்கினான். அங்கேதான் அவன் ஒரு நண்பரைச் சந்தித்தான்.

அந்த நண்பர் ஒரு நடிகர். திராவிடர் கழகத்தில் தீவிரப் பற்றுக்கொண்டவர்.

இது 1945 ஆம் ஆண்டு

அண்ணாத்துரை முதலியோர் திராவிடர் கழகத்திலேயே இருந்த காலம்.

அவர் சந்தித்த நடிக நண்பர் மிகவும் நல்லவர்.

பழகுவதற்கு இனியவர். பண்புள்ளவர்.

அப்போதுதான் டி.கே.எஸ். நாடகக் கம்பெனியிலிருந்து அவர் விலகியிருந்தார்.

நசுக்கப்பட்ட நாடகத் தொழிலாளர்கள் என்று ஒரு புத்தகமும் எழுதியிருந்தார்.

அவர்தான் நடிகர் டி.வி நாராயணசாமி.

பார்ப்பனர், பித்தலாட்டம், புராணங்களின் பொய்மை, ஆரிய திராவிடர் போராட்டம் இவையே விவாதத்திற்கு வந்த கருத்துக்கள்.

பொய்யைப் பொய்யென்று ஏற்றுக்கொள்ள அவன் தயார்.

### 8. மாறிய வடிவம்

அன்றைய மாலைப்பொழுது, அவன் வாழ்வில் முக்கியமான பொழுதாகும்.

அவனது பக்தி நெஞ்சத்தைப் பிளந்து கொண்டு, பல தீவிர எண்ணங்கள் அன்று மாலைதான் வேரோடத் தலைப்பட்டன.

நீரோட்டம் போலத் தாவி வரும் வார்த்தைகள், வரிக்கு வரி அழகான உவமைகள், புதிய புதிய சொல்லாட்சி, தமிழ் இலக்கணத்திற்கே அப்பாற்பட்ட புதிய பாணிகள்

அவன் மெய்மறந்திருந்தான்.

அன்றைய அண்ணாத்துரை அவன் நெஞ்சில் அழிக்க முடியாதவரானார்.

அவரது பேச்சு, காலமறிந்து ஒரு பேரறிஞர் அவதரித்திருக்கிறார் என்றே அவனை எண்ண வைத்தது.

அந்த எளிய பக்தன் தன் வடிவம் மாறுவது கண்டான்.

தெய்வம் பொய்யா?"

"புராணங்கள் பொய்யா?"

"ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அசைக்க முடியாமல் இருந்து வருகிற இதிகாசங்கள் பொய்யா?"

'சரித்திரத்தில் படிக்கிற ஆரியர்கள் என்போர், இந்தப் பார்ப்பனர்கள் தானா?'

கடவுள்கள் எல்லாம் திராவிடர்க்ள என்போரை ஏமாற்றப் பிறந்த கட்டுக்கதைகளா?"

அவன் உள்ளம் அன்றெல்லாம் இவற்றையே சிந்தித்தது.

அண்ணாத்துரையின் பேச்சு அவன் இதயத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

அதிலும் குறிப்பாக பார்ப்பனச் சமூகத்தின் மீது அவன் தொடுத்த தாக்குதல்கள், அவனால் மறக்க முடியாதவையாயின.

பாம்புக்கு பல்லிலே விஷம், பார்ப்பானுக்கு உடம்பெல்லாம் விஷம்

வேதமோதிகள், மாடோட்டிகள் என்றெல்லாம் அவர் பார்ப்பனச் சமூகத்தை வர்ணித்திருந்தார்.

உலகத்தில் சொந்த நாடே இல்லாத இனங்கள் இரண்டு. ஒன்று யூத இனம், மற்றொன்று ஆரிய இனம்.

மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த ஆரியர்கள் தமிழ்நாட்டில் வேரூன்றி, தமிழகத்தின் பூர்வ குடிகளைத் தாழ்த்தி வைத்து விட்டார்கள்.

இப்படியெல்லாம் அவர் சொன்னது, அவனுக்கு மிகவும் புதுமையாய் இருந்தது.

அந்தக் கருத்து அவனைப் பற்றிக் கொள்ளவும் ஆரம்பித்தது.

தெரியாமலா சொல்வார்!

பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி வாழ்வதற்காக யாரையும் சாய்ப்பதற்குத் தயாராய் இருப்பார்கள். வேதியர்களால் வீழ்ந்த வேந்தர்கள் பலபேர் என்று ஆதாரத்தோடு சொன்னரே, அது உண்மைதான என்று அவன் எண்ணத் தலைப்பட்டான்.

ஆட்டுக்கும் மாட்டுக்கும் ரெண்டு கொம்பு. ஐயங்கார் சுவாமிக்கு மூணு கொம்பு என்று பாட்டுப்பாடினார்.

சுயமரியாதை என்ற சொல் அவனைக் கவர்ந்தது.

நானும் மனிதன்தான் என் மரியாதையைக் கெடுத்துக் கொண்டு எவனுக்கும் நான் மரியாதை தரமாட்டேன்.

அரசனாயினும் சரி ஆண்டியாயினும் சரி

என் மரியாதைக்கு மேல் அவர்களிடம் ஒன்றுமில்லை

இவையே சுயமரியாதை பற்றி அவனுக்குத் தோன்றிய கருத்துக்கள்.

**9. எதிர்பாராத வேதனை**

மீண்டும் அவன் வேலை தேடத் துவங்கினான்.

அந்நாளில் பட்டப்படிப்பு இல்லாதவனுக்கு என்ன வேலை கிடைக்கும்?

பத்திரிகைத் துறையிலிருந்த ஓரளவு அனுபவத்தைக் கொண்டு, பத்திரிகைக் காரியாலயங்களுக்குப் படையெடுக்கத் துவங்கினான்.

பதினெட்டு வயது. பார்வைக்குச் சாதாரணமாகத் தோற்றம். ஆசிரியர் வேலை பார்த்தேன்' என்றால் யார் நம்புவார்கள்.

படியேறி இறங்கியதைத் தவிர, வேறு எந்த லாபமும் இல்லை.

அருணோதயம் என்ற பெயரில் இப்போது பதிப்பகம் நடத்தும் அருணாசலம் என்பவரும், கவிஞர் குயிலனும், கூட்டாக தென்றல் என்னும் திங்கள் இதழைத் துவங்கியிருந்தார்கள்.

தென்றல் முதல் இதழுக்கு அவன் பீலிவளை என்று ஒரு சொற்சித்திரம் எழுதிக் கொடுத்தான்.

சோழன் நெடுமுடிக்கிள்ளியைப் பற்றிய சித்திரம் அது.

இந்தப் பத்திரிகைக்கு முதலீடு. ஆளுக்கு ரூபாய் ஐநூறு வீதம், மொத்தமே ஆயிரத்து ஐநூறு ரூபாய்தான்.

இதில் நான்கு பேர் சாப்பிட்டுக் கொண்டு பத்திரிகையும் நடத்துவதென்றால், எவ்வளவு காலம் முடியும்?

இரண்டு இதழ்களிலேயே ‘தென்றல்’ தள்ளாடத் தொடங்கியது.

‘அணிகலம்’ என்றொரு பத்திரிகையை, ஒரு செட்டியார் நடத்திக் கொண்டிருந்தார்.

இந்தப் பத்திரிகைகளுக்கு ஏதாவது எழுதிக்கொடுத்து, ஐந்து ரூபாய் வாங்கிக் கொள்வான்.

சென்னையில் அப்போது இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கான செயற்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

எழுத்தார்வம் மிக்க அவன் எழுத்தாளர்களைப் பார்ப்பதற்காக அங்கே போனான்.

போன இடத்தில் ‘கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுடைய மகன் சுப்பிரமணியத்தின் தொடர்பு கிடைத்தது.

அவர் அப்போது ‘தினமணி’யில் உதவி ஆசிரியராக இருந்தார்.

ஒரு பத்திரிகையில் ஆசிரியர் வேலை காலியாக இருக்கிறது. போகிறீர்களா? என்று கேட்டார்.

உடனே வேலை கிடைத்துவிட்டது.

அவன் மேதாவியின் ஆசிரியரானான்.

அவன் அங்கு போய்ச் சேர்ந்த அன்றே, ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அவனை அலுவலகத்தில் உட்கார வைத்துவிட்டு அலுவலக நிர்வாகி கொஞ்ச நேரம் வெளியே போய்த் திரும்பினார்.

திரும்பி வந்து பெட்டியைத் திறந்து பார்த்தவர் நூறு ரூபாய் காணோம் என்றார்.

அவனுக்கு பகீரென்றது.

அவன் திருடியது உண்டு என்றாலும் வெளியிலே திருடியதில்லை.

தன் தாயாரின் பணத்தைத்தான் திருடியிருக்கிறான்.

அங்கே நூறு ரூபாய் காணோம் என்றதும், அவனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

அக்காலத்தில் அவன் சிகரெட், காபி எதையும் தொடமாட்டான்.

அதுவொன்றே அவனை அவர் நம்புவதற்குக் காரணமாய் அமைந்தது.

ஆபீஸ் பையன் மீது சந்தேகம் வந்தது.

ஊரிலே முக்கியமான பிரமுகர் ஒருவர்.

ராமசீனிவாசன் என்பது அவர் பெயர்.

அவருக்குத் தகவல் தரப்பட்டது.

அவர் வந்தார்.

பையனை மிரட்டினார்.

பலன் இல்லை.

பையனிடம் அவன் கெஞ்சினான்.

பலனளித்தது.

சமையலறையில் ஒளித்து வைத்திருந்த நூறு ரூபாயை பையன் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான்.

அவனுக்கு உயிர் வந்தது.

பையனை மன்னித்து மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் படி அவன் நிர்வாகியிடம் கேட்டுக் கொண்டான். அதுவும் பலனளித்தது.

**10. நல்ல நண்பர்கள்**

சென்னையில் இரண்டாவது எழுத்தாளர் மாநாடு. ஒற்றைவாடைக் கொட்டகையில் நடைபெறப் போவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது.

எழுத்தாளர் மாநாட்டு விவரங்களை அவன் தாய்நாடு இதழில் எழுதினான்.

அண்ணாத்துரையின் பேச்சைப் பற்றி அவன் எழுதியிருந்த இதழ், அதன் சக்திக்கு மேல் விற்பனையாயிற்று.

அந்தக் கட்டுரைக்குக் கீழே அவன் தன் பெயரை வணங்காமுடி என்று போட்டிருந்தான்.

பின்னொரு சமயம் கலைவாணரோடு சென்று அவன் அண்ணாத்துரையைப் பார்த்த போது அறிமுகப்படலம் முடிந்ததும் அண்ணாத்துரை கேட்ட முதல் கேள்வி கூட தாய்நாடு இதழில் எழுதியது நீங்கள் தானா? என்பதுதான்.

அந்தக் கட்டுரைக்குப் பிறகு புதுக்கோட்டையில் அவனுக்குச் சில புதிய நண்பர்கள் அறிமுகமானார்கள்.

அப்போது பொன்னி என்ற பத்திரிகையை நடத்திவந்த தோழர் முருகு. சுப்பிரமணியன் அவர்களும், தோழர் பெரியண்ணன் அவர்களும் அவனுக்கு வாய்த்த இனிய நண்பர்களாவார்கள்.

### 11. மனப்போராட்டம்

'சக்தி' காரியாலயத்தில் அவன் தங்கிய நாட்கள் மிகவும் இனிமையான நாட்கள். அந்த நாட்களிலே தான் அவன் வாழ்க்கையில் பல நிலைகளைக் கண்டான்.

சில நல்ல நண்பர்கள், சில கெட்ட பழக்கங்கள் அந்தக் காலத்திலேதான் ஏற்பட்டன.

ஒருநாள்

அவன் கையில் நூற்றைம்பது ரூபாய்கள் இருந்தன.

அன்று இரவு ஒன்பது மணியிருக்கும்.

மோபரீஸ் ரோட்டில் இருந்த பஸ் ஸ்டாப்பில் அவன் நின்று கொண்டிருந்தான்.

ஒரு ரிக்ஷா வந்து அவன் பக்கத்தில் நின்றது.

சார்!

அவன் திரும்பிப் பார்த்தான்.

ரிக்ஷாக்காரன் சற்றுமுற்றும் பார்த்துவிட்டு 'வேணுமா?' என்று கேட்டான்.

பதினெட்டு வயது

அவன் விழித்தான்

புதுப்பொண்ணு சார்

அவனுக்குப் புரிந்தது

விலைமாதர்களைப் பற்றி அவன் அனுபவமே இல்லாதவன் அல்ல. ஆனாலும் இப்படித் திடீரென்று அவனது நினைவைத் திருப்பியது அவனுக்குப் புதுமையாக இருந்தது.

சென்னை நகரம் அந்நாளில் இன்றிருப்பதுபோல் அவ்வளவு நெரிசலாக இருந்ததில்லை.

இந்த எட்டாண்டு காலத்திற்குள்ளேதான் குடியேற்றம் அதிகம்.

அவன் நின்று கொண்டிருந்த 'மோபரீஸ்' ரோட்டிலேயே கூட போக்குவரத்து குறைவாகவே இருந்தது.

ரிக்ஷாக்காரன் ஒரு பெண்ணைப் பற்றி விரிவாக வர்ணித்தான்.

மறுக்கவும் முடியாமல், போகவும் மனமில்லாமல் அவன் தயங்கினான்.

கடைசியில் துணிந்து ரிக்ஷாவில் ஏறிவிட்டான்.

ரிக்ஷா போகப் போக அவன் மனதில் பயம் கவ்வியது.

எத்தனை சீர்திருத்த வீரர்கள் வழி தவறிய பெண்ணுக்கு வாழ்வு தரக்கூடியவர்கள்.

### 12. மயக்கத் துவக்கம்

அன்று மாலையே அவனது நண்பர்கள், அவனை 'மவுண்ட்ரோட்'டிலிருந்த ஒரு மதுக்கடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் ஒன்றும் அடிக்கடி குடிப்பவர்கள் அல்ல. எல்லோருக்குமே ஒரு புது அனுபவம்.

'பசட்டோ ஹோட்டல்' அந்த ஏழை எழுத்தாளர்களை வரவேற்றது.

மூன்று நண்பர்களும் அவனுமாக ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்தார்கள்.

அப்போது பக்கத்து மேஜைக்கு அருகிலேயிருந்த நாற்காலியில் ஒருவா், பாதி மயங்கிய நிலையில் அமா்ந்திருந்தாா்.

அவனுக்கு அவா் அறிமுகமானவரல்ல என்றாலும் மற்ற நண்பா்களுக்கு அவா் அறிமுகமானவா்.

அவருக்கு அவா்கள் வணக்கம் தெரிவித்தாா்கள்.

அவரை அவனுக்கு அறிமுகப்படுத்தினாா்கள்.

அவா்தான் கவிஞா் கம்பதாசன்

“இதில் பழக்கமுண்டா?” என்று அவா் கேட்டாா்.

“முதல் நாள்…” என்றான், அவன்.

“பழகாதீா்கள். பிடித்துக்கொண்டால் விடாது” என்றாா் அவா்.

“இன்று மட்டும், நாளை விட்டுவிடுவேன்” என்றான் அவன்.

“அப்படியென்றால் ‘பீா்’ சாப்பிடுங்கள். அது ஆபத்தில்லாத பானம் என்றாா் அவா்.

பொன் வண்ணத்திலே அந்த மது கண் திறந்து வைக்கப்பெற்றது.

அன்று அது பாா்த்த பாா்வை என்றும் தொடருமென்று அவன் நினைத்தானா என்ன?

சுவைத்தான். கசந்தது.

சுவைக்கச் சுவைக்கக் கசப்புக் குறைந்தது.

நேரம் ஆக ஆக அந்தத் தெய்வத்தின் வரம் பூரணமாகக் கிடைத்தது.

உலகம் மிகச் சாதாரணம் என்ற அபிப்பிராயம் உருவாகிவிட்டது.

நண்பா்களோடு தெருவிற்குள் வந்தான்.

“நான் பாட்டுப் பாடட்டுமா? என்று கேட்டான்.

“ஆரம்பமாகிவிட்டது, தெய்வத்தின் வேலை என்றாா் ஒரு நண்பா்.

“இல்லை, நான் நிதானமாகத்தான் இருக்கிறேன்” என்றான்.

“அந்தச் ‘சந்நிதானத்’தில் நிதானமேது?” என்றார் அவர்.

ஆஹா! இதல்லவா உலகம் என்றான் அவன்.

“உமர்கய்யாம் சென்னைக்கு வந்துவிட்டார்!” என்றார் நண்பர்.

“எப்போதும் இப்படியே இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்” என்றான் அவன்.

சம்பளம் எழுபத்தைந்து ரூபாய்தான் என்பதை அவர் கவனப்படுத்தினார்.

‘மோபரீஸ்’ வழியே போகிற பஸ் ஒன்று வந்து நின்றது.

ஒரு கூட்டம் அதற்குள்ளேயே முண்டியடித்து நுழைந்தது.

“சீ… இந்தப் பஸ்’ஸில் மனுஷன் போவானா? ஏறுங்கள் ஆளுக்கொரு ரிக்ஷாவில்…”

“நான்கு ரிக்ஷாக்கள் பாதையிலே அதில் நான்குபேர் போதையிலே”

‘மோபரீஸ் ரோட்’ வருகிற வரைக்கும் அவன் பாடிக்கொண்டே வந்தான்.

சாதாரண காலத்தில் அவன் பாட்டை யாரும் சகிக்க மாட்டார்கள். அத்தகைய சாரீரம்!

அப்பொழுது அவன் பாடியதை நண்பர்கள் ரசித்துக் கேட்டார்கள்.

காரணம், அவனா பாடினான்? அது வல்லவா பாடிற்று.

இதோ சக்தி காரியாலயம் வந்துவிட்டது.

“என்னையா, எல்லோரையும் எங்கிருந்து தூக்கிக் கொண்டு வருகிறார்கள்?” என்று ஒரு குரல் கேட்டது.

சக்தி காரியாலய பொருளாளர் அழகப்பன், சட்டையைக் கழற்றிவிட்டு நின்று கொண்டிருந்தார்.

“நாங்கள் இப்போது எங்கள் வசத்திலே இல்லை” என்றார் ஒரு நண்பர்.

“ஆஹா…! டீ குடிக்கவே காசு கிடையாதே! இதற்கு ஏது பணம்?” என்று அவர் கேட்டார்.

“எல்லாம் ஐயன் அருள்” என்று அனைவரும் அவனைக் கையைக் காட்டினார்கள்.

நாட்கள் கடந்தன.

பணம் கரைந்தது.

பட்டினி தொடர்ந்தது.

எல்லா எழுத்தாளர்களுக்குமே வரட்சி.

யாரிடம் யார் கடன் வாங்குவது?

இந்த நிலையில் பத்திரிகை உரிமையாளர் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

பணத்தைச் செலவு செய்துவிட்டதற்காகக் கோபித்தார்.

பத்திரிகை வேலையிலிருந்து அவன் விடைபெற்றுக் கொண்டான்.

ஆனாலும் சக்தி காரியாலயத்திலேயே தங்கினான்.

## 13. சண்டமாருதம்

அப்போது சேலத்தில் ‘மாடர்ன் தியேட்டர்’ ஸார் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்தி வந்தார்கள்.

அதன் பெயர் ‘சண்டமாருதம்’ என்பது.

அதிலொரு வேலை காலியாகப் போவதாக அவனது நண்பர் சோமநாதன் சொன்னார்.

அதற்கொரு விண்ணப்பம் எழுதினான்.

நான்காவது நாள் பதில் வந்தது.

நேரில் வரும்படி குறித்திருந்தார்கள்.

அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

ஆனால் ரயிலுக்குப் பணம்…? எவ்வளவோ பேரைக் கேட்டான். கிடைக்கவில்லை.

அந்நாளில் தங்கசாலைத் தெருவில் ‘சாயிபாபா புத்தகாலயம்’ என்று ஒன்றிருந்தது.

அதன் ஆசிரியர் காலண்டர்கள், பஞ்சாங்கங்கள், ஆண் பெண் இரகசிய உறவு பற்றிய புத்தகங்கள் போன்ற பல ரகமான புத்தகங்களை வெளியிடுபவர்.

எந்தக் கையெழுத்துப் பிரதியையும் விலைக்கு வாங்கிக் கொள்ளுவார். படித்துப் பார்ப்பதில்லை. நிறுத்துப் பார்ப்பது தான் வழக்கம்.

அவனது நண்பர்கள் பலர் அவசரத்திற்கு எதையாவது எழுதிக்கொடுத்து அங்கே தான் பணம் வாங்குவது வழக்கம்.

அந்தப் பட்டியலில் கவிஞர் கம்பதாசன், கோ.த. சண்முக சுந்தரம் எல்லோருமே இருந்தார்கள்.

அந்தப் புத்தகாலயம் அவனது நினைவுக்கு வந்தது.

அதுவரைக்கும் அவன் பத்திரிகையில் 'ஆடப்பிறந்தவர்கள்' என்ற தலைப்பில் நாட்டியக் காரர்களான கோபிநாத், உதயசங்கர் ஆகியோருடைய வரலாறுகளை எழுதியிருந்தான்.

அவற்றைத் தொகுத்தான்.

'சக்தி' பொருளாளரிடம் இருந்து கஷ்டப்பட்டு இரண்டு ரூபாய் கடன் வாங்கினான்.

இரண்டு இரவுகள், ஒரு பகல் முழுவதும் வெறும் டீயைக் குடித்துக்கொண்டே மற்றும் பல நாட்டியக்காரர்களுடைய வரலாற்றை எழுதினான்.

தூக்கக் கலக்கம், பசி மயக்கம் இவற்றோடு கையெழுத்துப் பிரதியைக் கையிலெடுத்துக் கொண்டு தங்கசாலைத் தெரு வரை நடந்தே போனான்.

அவன் போன நேரத்தில் நல்ல வேளையாக சாயிபாபா புத்தகாலய அதிபர் சண்முகம் அங்கேயே இருந்தார்.

அவரிடம் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்தான்.

அதை அவர் தூக்கிப் பார்த்தார். "எத்தனை பக்கம் வரும்?" என்று கேட்டார்.

புத்தக வடிவில் நூறு பக்கம் வருமென்றான்.

"மொத்தம் ஐம்பது ரூபாய்தான் தருவேன். இப்போது முப்பது தருகிறேன். பிரசுரித்த பிற்பாடு இருபது தருகிறேன்" என்றார்.

அவன் உடனே சம்பாதித்துவிட்டான்.

மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்தார்.

அந்த நோட்டுகள்…

இன்றுவரை அவன் சம்பாதித்த பல லட்ச ரூபாய்களும் அந்த முப்பது ரூபாய்க்கு ஈடாகமாட்டா.

'நீலகிரி எக்ஸ்பிர'ஸில் ஏறினான்.

அந்த ரயிலில் ஒரு ரசமான சம்பவம் நடந்தது.

அவன் உட்கார்ந்திருந்த பெட்டியில் சுமார் நாற்பது ஐம்பது பேர் இருந்திருப்பார்கள்.

அவர்கள் யாரும் அவனுக்கு அறிமுகமானவர்களாக இல்லை.

கொஞ்ச நேரம் ஒரு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தான். அப்படியே அவனது கண்கள் கீழே பார்த்தன.

ஒரு 'டிக்கட்' அங்கே கிடந்தது.

சென்னையிலிருந்து சேலத்திற்குப் போவதற்குள்ள 'டிக்கெட்' அது.

அந்த டிக்கெட்டைக் கையில் எடுத்துக் கொண்டு 'இது யாருடைய டிக்கெட்? இது யாருடைய டிக்கெட்?" என்று ஒவ்வொருவராக விசாரித்தான். எல்லோரிடமும் அவர்களுடைய 'டிக்கெட்' கள் பத்திரமாக இருந்தன.

"யாரோ ஓர் அப்பாவி, "டிக்கெட்டைப் போட்டுவிட்டான் போலிருக்கிறது" என்று 'டிக்கெட்'டை இழந்தவனுக்குத் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

கடைசியில் 'டிக்கட்' பரிசோதகர் வந்து அவனுடைய 'டிக்கெட்'டைக் கேட்டார்.

தேடினான், தேடினான். அகப்படவில்லை.

உடனே பக்கத்திலிருந்த ஒருவர், "நீங்கள் கீழே கிடந்து எடுத்த 'டிக்கெட்' உங்கள் 'டிக்கட்'டுதான் சார்" என்றார். ஆமாம் அவனால் அனுதாபம் தெரிவிக்கப்ட்ட அப்பாவி அவனாகவேயிருந்தான்.

'டிக்கட்' பரிசோதனை முடிந்தது.

பழையபடியும் ‘டிக்கட்’ டைக் கீழே போடாமலிருப்பதற்காக இடுப்பிலே முடிந்து கொண்டான்.

இது சேலம் சந்திப்பு.

மிக உற்சாகத்தோடு இறங்கினான். அவன்.

“இந்த ஊரிலேதான் நல்ல உத்தியோகம் பார்க்கப் போகிறோம்” எனும் எண்ணம் அவனுக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது.

மறுநாள் காலையில் ‘மாடர்ன் தியேட்டர்ஸ்’ விநியோக இலாக்கா நிர்வாகியாக இருந்த தாமோதரனைப் பார்த்தான்.

திரு.டி.ஆர் சுந்தரத்துடன் பேசினான்.

அந்த நாளில் திரு. சுந்தரத்தைக் கண்டால் எல்லோருமே நடுங்குவார்கள்.

அவருடைய சுபாவத்தை அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

மிகவும் பயத்துடனேயே நின்றான்.

வேலை கிடைத்துவிட்டது. மாதம் 90 ரூபாய் சம்பளம்.

சம்பளம் கிடக்கட்டும். போடப்படும் சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கிற இடமாயிற்றே…! அதில்தான் அவனுக்கு மகிழ்ச்சி.

நான்கு நாட்களில் மீண்டும் வந்து வேலையில் சேர்ந்து கொள்வதாகக் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

சென்னைக்குப் போய் பெட்டி படுக்கையை எடுத்து வர வேண்டும்.

கையிலிருந்த பணம் தீர்ந்துவிட்டது.

மீண்டும் யாரிடம் கடன் வாங்குவது?

நேரே ‘ஜவகர் மில்’ லுக்குப் போனான்.

அங்கே சேது என்று ஒரு நண்பன் முன்பு சக்தியில் வேலை பார்த்தவன்.

அவனிடம் பதினைந்து ரூபாய் வாங்கிக் கொண்டான்.

சென்னைக்குப் போய் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு ‘சாயிபாபா’ சண்முகத்திடம் ‘பாக்கி’ யை வாங்கிக் கொண்டு சேலத்திற்குத் திரும்பினான்.

வேலையில் சேர்ந்து விட்டான்.

## 14. புதிய உலகம்

அழகான ஒரு கொட்டகை அதன் பின்னே ஒரு பழைய கட்டிடம். கட்டிடத்தில் குடியிருப்பு. கொட்டகையில் அலுவலகம்.

அடுத்த கட்டிடம் ‘மாடர்ன் தியேட்டர்ஸ்’ விநியோக அலுவலகம். அதன் தொடர்பாக பின்புறத்தில் ஒரு சிறிய கட்டிடம். அது அவர்களுடைய ‘கஜலட்சுமி அச்சகம்’.

அதன் நிர்வாகி பரசு என்பவர் சுந்தரத்தின் உறவினர்.

‘மாடர்ன் தியேட்டர்ஸி’ல் இரண்டு ‘டைப்பிஸ்டு’கள்.

ஒருவர் இன்று சினிமா டைரக்டராக விளங்கும் வி.சீனிவாசன் என்பவர். மற்றொருவர் அவரது சகோதரரான ராமசாமி.

இவர்கள் அவனது நண்பர்களாயினர்.

அவன் ஆசிரியரான பத்திரிகை அவன் சேரும்போது ஐநூறு பிரதிகள் மட்டுமே விற்பனையாகிக் கொண்டிருந்தது. அவன் சேர்ந்த பிற்பாடு அறுநூற்றி ஐம்பதாயிற்று.

அவ்வளவுதான், அதற்கு மேல் ஏறவும் இல்லை, இறங்கவும் இல்லை.

“தேவலோகத்தில் சில நாட்கள்” என்ற கட்டுரையை அதில் அவன் எழுதினான்.

அதை சுமார் அறுநூற்றைம்பது பேரும் படித்திருக்கக் கூடும். சேலத்தில் பொதுக்கூட்டம் கேட்பதற்கு அவனுக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன.

ஒரு நாள் நகர் நடுவிலிருந்த மைதானத்தில் திராவிடர் கழகக் கூட்டம்.

“நெடுஞ்செழியன் பேசுகிறார்” என்பதை அறிவிப்புப் பலகைகள் பறைசாற்றின.

சங்கொலி கிளம்பும் கட்டிடத்தின் முன்பிருந்த மேடையில் ‘நாவலர்’ அமர்ந்திருந்தார்.

அப்போதெல்லாம் அவரை ‘இளந்தாடி நெடுஞ்செழியன்’ என்று அழைப்பார்கள்.

ஆனால் அவன் பார்த்த போது அவர் தாடியின்றிக் காட்டியளித்தார்.

தாடியை எடுத்த புதிது.

அதை அவரே பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

"உருவம் மாறியிருக்கிறது, உள்ளம் மாறவில்லை" என்றார்.

ஒரு மணி நேரப் பேச்சு.

சுவையான விளக்கங்கள்.

நெடுஞ்செழியனிடம் அவனுக்கு அன்பு ஏற்பட்டது. தொடர்ந்து பலரது கூட்டங்கள்.

சிலரது பேச்சுக்கள் அவனைத் திருப்தி செய்யவில்லை.

அண்ணாத்துரையின் மீது அவனுக்கு ஏற்பட்ட பாசம், திராவிடர் கழகத்தின் மீது ஏற்படவில்லை.

இன்று அவனுக்குச் சிந்திப்பதற்கு நேரமில்லை. ஆனால் அன்று அதைத்தவிர வேறு வேலையில்லை.

அமைதி தவழும் அலுவலகக் கொட்டகையில் இருந்து கொண்டே அன்று அவன் சிந்தித்த சிந்தனைகளின் அடிப்படையிலேயேதான். இன்று அவனது 'கட்டிடம்' எழுந்து நிற்கிறது.

அடிக்கடி சென்னை வருவான். நண்பர்களைச் சந்திப்பான். திரும்புவான்.

ஒருநாள் சென்னைக்கு வந்தான்.

மாலை ஆறுமணி

'ரிப்பன் கட்டிட'த்திற்கு எதிரேயுள்ள 'பஸ் ஸ்டாப்'பில் நின்றான்.

சொல்லிவைத்தாற் போல் இப்போதும் ஒரு ரிக்ஷா வந்து அருகில் நின்றது.

ஆனால் இந்த அனுபவம் மிகவும் கொடுமையானது.

மிகப் பயங்கரமானது.

அக்காலத்தில் சென்னையில் நடந்து வந்த பரவலான தொழில் விபச்சாரமாகவே இருந்தது என்பதற்கு, இந்த இரண்டாவது ரிக்ஷா உதாரணமாக இருந்தது.

ஆனால் அதே சமயத்தில் ஆளை ஏமாற்றுகிறது கூட்டமும் அதிகமாயிருந்தது.

இந்த இரண்டாவது ரிக்ஷா அவனை ஏமாற்றுவதற்காகவே ஏற்றிக் கொண்டு போனது.

ஒவ்வொரு வீடாக ரிக்ஷாக்காரன் நுழைந்தான்.

ஒவ்வொரு தடவையும் பத்துப்பத்து ரூபாய்கள் அவன் வாங்கிக் கொண்டான்.

சுமார் அறுபது ரூபாய்கள் அவன் வாங்கிக் கொண்ட பிற்பாடு, இருட்டான ஒரு சந்திலே ரிக்ஷாவை நிறுத்திக் கொண்டு “இன்னும் பத்து ரூபாய் கொடுத்துவிட்டு இறங்கிப் போய்யா!” என்றான்.

அவன் நடுங்கிவிட்டான்.

மெதுவாக அவனைக் கெஞ்சி “பூக்கடை வரையில் கொண்டு போய் விட்டுவிடு” என்று கேட்டுக் கொண்டான்.

அவனும் சம்மதித்து இழுத்து வரும்போது ‘பூக்கடை போலீஸ் ஸ்டேஷன்’ வந்தது. தைரியம் பெற்று அவன் “ஐயா! போலீஸ்காரய்யா! என்று கத்தினான்.

ஒரு போலீஸ்காரர் திரும்பிப் பார்த்தார்.

ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவை வைத்துவிட்டு ஓட்டம் பிடித்தான்!

போலீஸ்காரன் ஓடிப்போய் அவன் தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்தார்.

“என்ன சார் நடந்தது?” என்று கேட்டார்.

நடந்ததைச் சொன்னான்.

போலீஸ்காரர் அவனை உதைத்து, அவன் பையைச் சோதனையிட்டார். சுமார் இருநூற்றைம்பது ரூபாய் இருந்தது.

எத்தனை பேரை ஏமாற்றிப் பெற்ற பணமோ?

“என் பணம் எழுபதுதான்?” என்றான் அவன்.

ரிக்ஷாக்காரனை ‘லாக்கப்’பில் தள்ளினார்.

வழக்கு தொடரப்போவதாகவும், அவன் சாட்சியாக வரவேண்டுமென்றும் சொன்னார்.

“நான் சேலத்திலிருக்கிறேன், வழக்குக்கு வருவது கஷ்டமாக இருக்குமே” என்றான் அவன்.

கடைசியில் வழக்கில்லாமலே ரிக்ஷாக்காரன் விடுதலை செய்யப்பட்டான்.

பணம் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சி அன்றைய சமூகத்தின் நிலைமையை அவனுக்குப் படம் பிடித்துக் காட்டிற்று.

குற்றம் புரிவோர் பலவிதம். குற்றத்தைத் தொழிலாகக் கொண்டோர் அதிலே ஒருவிதம்.

அவர்களை எப்படித் திருத்த முடியும்?

இன்று அவர்களிலே பலர் சில அரசியல் கட்சிகளின் பாதுகாப்பிலிருக்கிறார்கள்.

அரசியல் என்ற ‘போர்வை’ யின் மூலம் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

சமூகத்தின் தலைவர்களுக்கு இவர்களே வலது கரங்’ களாக விளங்குகிறார்கள்.

ஆனால் அன்று நாமும் அரசியலில் ஈடுபட்டால் இவர்களைத் திருத்த முடியும் என்று அவன் நம்பினான்.

அவர்கள் அரசியலையே ‘திருத்தி’ விடுவார்கள் என்று அவன் நினைக்கவில்லை.

அன்றிலிருந்து ஒவ்வொரு ரிக்ஷாவைப் பார்க்கும் போதும் அவனுக்குப் பயம் ஏற்பட்டது.

ரிக்ஷா, குற்றவாளிகளின் ‘வாகனம்’ போல் தோன்றிற்று.

சேலத்திற்குத் திரும்பிய போது அவன் புது மனிதனாக இருந்தான். இனி புதிய உலகத்தில் தன்னுடைய வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அவன் முடிவு கட்டிக் கொண்டான்.

## 15. ஆசை அலைகள்

அவன் நிறைய படிக்க ஆரம்பித்தான்.

புரியாத கவிதைகளைக் கூட மனப்பாடம் செய்தான்.

கம்பனின் இராமகாதை, புறநானூறு, கலித்தொகை, முத்தொள்ளாயிரம் என ஒவ்வொன்றிலும் சில பாடல்களை மனனம் செய்து கொண்டான்.

பொருள் விளங்காமலேயே அவை மனதில் பதிந்தன.

பிற்காலத்தில் தான் பல கவிதைகளுக்கு அவன் பொருள் விளங்கிக்கொண்டான்.

அவனைப் பொறுத்தவரையில் தமிழின் மீது அவனுக்கு ஏற்பட்ட பற்றுதல் அரசியல் ரீதியானதல்ல.

அவன் ஆங்கிலம் படிக்கவில்லை.

படித்ததே தமிழ் ஒன்றுதான்.

அன்றும் சரி, இன்றும் சரி, வெறும் கல்வியறிவு மட்டுமே ஒருவனை உலகின் கண்ணிற்குத் துலங்க வைக்கும் என்று அவன் நம்பவில்லை.

பாடல் எழுதுவதைப் போலவே, எழுதியதைப் பாடுவதிலும் அவனுக்குத் தனி இன்பம்.

ஆனால் அவனது சரீரம் பயங்கரமானது.

ஒருநாள் அந்த சாரீரத்தை உச்ச கதியில் எழுப்பி, அவன் பாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அலுவலகத்திற்கு வந்த சுந்தரம், அவன் பாடியதைக் கேட்டுவிட்டார்.

அங்கே அந்நாளில் தயாரிப்பு நிர்வாகியாக இருந்த திரு. எம்.ஏ. வேணுவை அழைத்து, “கண்ணதாசன் எழுதினால் போதும், பாட வேண்டாம்” என்று சொல்லியனுப்பினார்.

அன்று முதல் அந்த இடத்தில் பாடுவதை அவன் நிறுத்திக் கொண்டான்.

## 16. புதிய கட்சி

‘அபிமன்யு’ படத்தில் அவன் கேட்ட தமிழ், என்றும் மறக்க முடியாத இன்பத் தமிழாகும்.

“ஒடிந்த வாளானாலும் ஒரு வாள் கொடுங்கள்”

“அண்ணன் செய்த முடிவைக் கண்ணன் மாற்றுவதற்கில்லை”

“கண்ணன் மனமும் கல் மனமா?”

“அர்ச்சுனனால் கூடக் துளைக்க முடியாத சக்ர வியூகத்தை அபிமன்யு துளைத்துவிட்டானென்றால், அங்கே தானிருக்கிறது ஆச்சாரியரின் விபீஷண வேலை”.

இந்த நேரத்தில் தான், பெரியாரின் திருமணத்தைச் சாக்கிட்டு அண்ணாத்துரை, சம்பத் ஆகியோருடன் ஆயிரக்கணக்கானவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து விலகினார்கள்.

## 17. மன உறுதி

திருவாரூரிலிருந்து புறப்பட்ட கருணாநிதியின் குடும்பத்தினர், அன்றிரவு சேலம் வந்து சேருவதாக இருந்தது.

காலை ரயிலில் சென்னையிலிருந்து புறப்பட்டால் சேலம் சந்திப்பிலேயே தன் குடும்பத்தாரைச் சந்தித்து விடலாம் என்று எண்ணிய கருணாநிதி காலை ரயிலைத் தேர்ந்தெடுத்தார்.

இருவரும் ‘சென்ட்ரல் ஸ்டேஷ’னுக்கு வந்தார்கள்.

‘டிக்கட்’ வாங்கியது போக மிச்சமிருந்தது, ஒரே ஒரு ரூபாய், அதிலும் எட்டணாவுக்கு சிகரெட் வாங்கியாகி விட்டது.

அதில் இரண்டு வேளை சாப்பிட்டாக வேண்டும்.

அவர்களிருந்த பெட்டிக்குள் வயது முதிர்ந்தவர் ஒருவர் ஏறினார். அவர் கையில் கூடை நிறையப் பழங்கள் கொண்டு வந்திருந்தார்.

அவனும் கருணாநிதியும் அவருக்குத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

ரயில் புறப்பட்டு சிறிது நேரமானதும், அந்தப் பெரியவர் எழுந்து ‘பாத்ரூமுக்’குள் நுழைந்தார்.

“எனக்குப் பசி தாங்கவில்லையே” என்று அவன் கருணாநிதியிடம் சொன்னான். “திருடலாமா” என்று கேட்டார் அவர்.

இப்படி அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போதே, ‘பாத்ரூமி’ற்குள் சென்ற பெரியவர் திரும்பி வந்துவிட்டார்.

பிரயாணிகள் சாப்பிட வேண்டும் என்று கருணையோடு நிறுத்தப்பட்ட வண்டியில், சாப்பாட்டிற்கு வழியில்லாத பிரயாணிகளும் இருந்தார்கள்.

சேலத்திற்கு முன்னாலுள்ள ஒரு சிறு சந்திப்பில் அந்தப் பெரியவர் இறங்கிவிட்டார். சுமார் ஏழு மணிக்கு சேலம் சந்திப்பில் அவர்கள் இறங்கினார்கள்.

கருணாநிதியின் குடும்பத்தார் அங்கே வந்திருந்தார்கள். அவர்களோடு கருணாநிதி புறப்பட்டார். அவனும் மாடர்ன் தியேட்டர்ஸ் ஒத்திகை விடுதிக்குச் சென்றான். (நல்ல வேளையாகக் கருணாநிதியின் குடும்பத்தாரிடம் பணமிருந்தது).

அப்போது அங்கே பொன்முடி என்ற படம் தயாரிக்கப்பட்டு வந்தது. அதில் இரண்டொரு காட்சிகளுக்குக் கருணாநிதி வசனமெழுதிக் கொடுத்தார்.

பிறகு அவரது 'மந்திரிகுமாரி' கதையைப் படமாக எடுப்பதென்று முடிவாயிற்று. அந்த நேரத்தில், இன்னும் இருவர் 'மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாகா'விற்கு வந்து சேர்ந்தனர். ஒருவர் சி.பி. சிற்றரசு. இன்னொருவர் ஆசைத்தம்பி.

"பாட்டெழுதுகிறேன் பாட்டெழுதுகிறேன்" என்று நிர்வாகிகளிடம் கேட்டுப் கேட்டுப் பார்த்தான். அந்தப் பாட்டுத்தான் மிஞ்சியதே தவிர, சினிமாப் பாட்டுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவனுக்கு எழுதத் தெரியும் என்று கூட யாரும் நம்பவில்லை. இந்த நிலையில் அவனது உத்தியோகத்தை மாற்றி ஓர் உத்தரவு வந்தது.

அதாவது, கதை இலாகாவிலிருந்து அவனை விளம்பர இலாகாவிற்கு தூக்கிப் போட்டார்கள்.

எவ்வளவோ ஆசைகளை அடக்கி வைத்துக் கொண்டு எழுத்துத் துறையில் முன்னேற வேண்டுமென்றே அவன் கருதினான்.

முடியுமானால் படகாவோம்; இல்லையென்றால் கட்டையாவோம்; என்றேனும் ஒருநாள் கரை சேர்வோம். அவன் நம்பினான்.

**பத்தாண்டு வனவாசம் முடிவு**

அன்று மாலைப் பத்திரிகைகளில் அவனைப் போலவே சம்பத்தும் ஏராளமான நண்பர்களும் திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்ட செய்தி பிரதானமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது!.

அவன் நெஞ்சு நிம்மதியடைந்தது.

கண்மூடித்தனமான அவனது அரசியல் வனவாசம் முடிந்துவிட்டது.

காட்டுக் குரங்குகளிடமிருந்து அவன் விடுதலை பெற்றுவிட்டான்!

சின்னஞ்சிறிய கூண்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த அந்தப் பறவைப், பரந்த வானத்தில் எழுந்து பறக்கத் துவங்கியது.

சபலத்திற்கும், சலனத்திற்கும் ஆட்பட்ட கோழை மனிதர்களை ‘தலைவர்கள்’ என்று போற்றிப் பாடிய அவன் பாட்டு முடிந்து விட்டது.

சமுதாயத்தின் மூன்றாந்தர மனிதர்களோடு அவனுக்கிருந்த உறவு அறுந்துவிட்டது!

அர்த்தமில்லாமல் அவன் வளர்த்துக் கொண்டிருந்த வெறி தணிந்துவிட்டது!

ஒரு நெடுஞ்சாலைக் கொள்ளைக் கூட்டத்திடமிருந்து அந்த அப்பாவி மனிதன் தப்பி வெளியே வந்துவிட்டான்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த பொருளற்ற கூட்டத்தில் இருந்து அவன் புதிய உலகத்திற்கு வந்து விட்டான்.

பாண்டவர்களைப் போல் -பதின்மூன்று அல்ல – பத்தாண்டுக் காலம் வனவாசம் புரிந்த அவன், நாட்டுக்குத் திரும்பி விட்டான்!

கூண்டுப் பறவை சுதந்திரப் பறவையாகிவிட்டது!

வனவாசம் புரிந்த மிருகம் அன்று மனிதன் ஆனது!

ஏப்ரல் ஒன்பது – அவன் வரலாற்றில் புனிதமான நாள்!

அன்றுதான் அவன் உண்மையை நோக்கி நடைபோடத் துவங்கினான்!

அன்று இரவு நிம்மதியாகத் தூங்கினான்.

மறுநாள் பொழுது ‘மனிதா எழுந்திரு! உன் வாசம் முடிந்துவிட்டது’ என்று அவனுக்கு நினைவுறுத்திற்று!

கண்ணதாசன் திராவிட இயக்கங்களில் வாழ்ந்த காலத்தை அதில் நடந்த தில்லுமுல்லுகளை வெளிச்சம் போட்டு காட்டி, அதிலிருந்து மீண்டு தேசிய நீரோட்டத்தில் கலக்கும் வரை கண்ட அனுபவத்தை வனவாசம் நூலில் பதிவிட்டுள்ளார்.

வனவாசம் - சுருக்கம்

கண்ணதாசன் திமுக மீது ஈர்க்கப்பட்டதில் தொடங்கி, அந்த கட்சியில் அவர் இருந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை அலசி பின் அவர் கட்சியிலிருந்து வெளிவருவதுடன் முடிகிறது. இதனாலேயே திமுக எதிர்ப்பு நிலைப்பாடு கொண்டோருக்கு பிடித்தமான புத்தகமாக அமைந்துவிடுகிறது.

கலைஞர் அபிமானிகள் இப்புத்தகத்தை அதிகம் நேசிக்க மாட்டார்கள். ஆரம்பத்தில் கண்ணதாசனுக்கு மிக வேண்டியவரான ராம. கண்ணப்பன் கண்ணதாசனின் இளமைக்காலம் குறித்து எழுதி உள்ளார். கண்ணதாசனின் தந்தை எந்த வேலைக்கும் போகாமல் சீட்டு ஆட கூடியவர். அதனால் குடும்பம் மிக வறுமையில் வாடி இருக்கிறது.

எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்த கண்ணதாசன் ஊரை விட்டு வெளியேறி வெளியிடங்களில் வேலை தேடி உள்ளார். முதலில் திருச்சி பின் சென்னை என பல இடங்களில் சிறுசிறு வேலைகள் போராட்டங்கள் பல்வேறு பத்திரிகைகளில் வேலை பார்த்து பின் ஒரு பத்திரிகை ஆசிரியராகவும் மாறி உள்ளார். திமுக மீது ஈர்க்கப்பட்டு கட்சியில் சேர்ந்தது, கட்சியில் கலந்து கொண்ட போராட்டங்கள், உள்கட்சி அரசியல் என விலாவாரியாகப் பேசுகிறது இப்பத்தகம்.

காந்திஜியின் சத்திய சோதனை தான் இந்த சுயசரிதை எழுத காரணம் என சொல்லும் கண்ணதாசன், சத்திய சோதனைகள் உள்ளது போல தான் செய்த பல தவறுகளை மனவிட்டு கூறுகிறார். உதாரணத்துக்கு முதல் வேலையில் பொருட்கள் சேர்ந்து வாங்கும் போது அதற்கு விலை ஏற்றி சொல்லி கமிஷன் அடித்தது. விலைமாதர் இல்லம் சென்றது. பல நாள் சாப்பிடாமல் இருந்து காசு கிடைத்ததும் ஹோட்டல் சென்று ஆறு மசால் தோசை ஒரே நேரத்தில் ஆர்டர் செய்து சாப்பிட்டது. முதல் முறை பாட்டெழுதி நூறு ரூபாய் கிடைத்ததும் விலைமாது வீடு தேடி அலைந்தது. நிலையான வருமானம் வந்ததும் ஒரு பெண்ணின் அழகில் மயங்கி மூன்று மாதம் ஆவலுடன் வாழ்ந்தது. ஊருக்கு சென்று திரும்பும் போது அவர் வேறு நபருடன் வாழ்வது கண்டு மனம் வெறுத்தது என எத்தனையோ சம்பவங்கள் சொல்லப்பட்டுள்ளன.

செட்டியார் சமூகத்தில் சுவீகாரம் செய்வது குறித்த பல தகவல்கள் தெரிய வருகிறது. “ஏழைகளுக்கு நிறைய குழந்தைகள் இருக்கும் பணக்காரர்கள் சிலருக்கு குழந்தைகள் இருக்காது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து தெரிந்த உறவினரிடம் குழந்தைகள் தத்தெடுப்பர்” என்கிறார்.

வாழ முடியாதவர்கள் என்கிற தலைப்பில் கலைஞர் எழுதிய சிறுகதையை பற்றி காட்டமாக விமர்சிக்கிறார். மனைவிய இழந்த கணவன் தன் மகளுடனே உறவு

கொள்கிறான் என்கிறது தான் இக்கதை. இது பற்றி இவ்வாறு சொல்கிறார் கண்ணதாசன். "வெளிநாட்டவர்கள் கூட வறுமையை சித்தரிக்கும் போது பண்பாட்டோடு எழுதினார்கள். ஆனால் மகளை கெடுத்த தந்தையை வறுமைக்கு உதாரணமாக்கியுள்ளார் முற்போக்கு ஆசிரியர்."

கண்ணதாசனின் அனுபவம் ஆங்காங்கு தத்துவமாக கருத்தாக வெளிப்படுகிறது. தன் துயரத்தை பகிர்ந்து கொள்ள இன்னொருவர் இருந்தால் மனதுக்கு ஆறுதல் கிடைக்கிறது. அந்த இன்னொருவர் பெண்ணாக இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. சில நேரங்களில் துணிவை மட்டுமே மூலதனமாகக் கொண்டு முன்னேற்றத்திற்கு தேவையான சந்தர்ப்பத்தை மனிதனால் ஆக்கிக்கொள்ள முடியும்.

அரசியல்வாதிகளுடன் சில காலம் பழகியதிலேயே பல உண்மைகள் தெரிய ஆரம்பித்தது. தான் கொண்ட கொள்கைகளில் யாருமே உறுதியாக இல்லை. ஜனங்கள் முட்டாள்கள் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டு, அதை வெளியில் சொல்லாமலேயே அரசியல் நடத்துகிறார்கள்.அரசியல் வாழ்க்கையில் பல சம்பவங்களை மிக விரிவாக விவரிக்கிறார்.

குறிப்பாக எம்.எல்.ஏவாக ஆயிரம் விளக்கு தொகுதியில் நிற்கச் சொல்லி திமுக சொல்ல, இவரோ தன் சொந்த ஊரான காரைக்குடி அருகே ஒரு தொகுதியில் நின்று தோற்றார்.ஆனால் ஆயிரம் விளக்கு பகுதியில் நின்றவர் வென்றுவிட்டார். சென்னை மாநகராட்சி தேர்தலில் கண்ணதாசன் கடுமையாக தேர்தல் பணி செய்தார். அந்த தேர்தலில் திமுக பெரும் வெற்றி பெற்ற போது வேட்பாளர்கள் பலர் அவர் வீடு தேடி வந்து நன்றி கூறினார்கள். ஆனால் வெற்றி விழாவில் அண்ணா கலைஞருக்கு கணையாழி கொடுத்து வெற்றிக்கு காரணம் இவரே என்றாராம். இது பற்றி கண்ணதாசன் அண்ணாவிடம் கேட்க, "நீயும் அவரைப் போல ஒரு மோதிரம் வாங்கிக் கொடுத்தால் உனக்கும் மேடையில் அணிவிக்கிறேன்"என்றாராம்.

டால்மியாபுரம் போராட்டம் பற்றி மிக விரிவாக சொல்கிறார். அப்போதுதான் தண்டவாளத்தில் தலை வைத்து படுக்கும் நிகழ்ச்சிகள் நடந்தேறி உள்ளன. முதல் குரூப் ஓடாத ரயில் முன்பாய்ந்து கைதாகிவிட்டது. அடுத்த குழுவிற்கு கண்ணதாசன் தலைமை ஏற்று இருக்கிறார். அந்த குழு சென்ற போது ரயில் நகரத் துவங்க,ஓடும் ரயில் முன் போய் விழச் சொன்னார்கள். "ஓடும் ரயில் முன் விழுந்தால் நேரே சாக வேண்டியது தான்" என கண்ணதாசன் செய்யவில்லை. இந்த போராட்டத்தில் சிறைக்குப் போய்,பல மாதம் சிறையில் வாடி, குடும்பம் பணமின்றி கஷ்டப்பட்ட பின் தான் கண்ணதாசனுக்கு அரசியல் சற்று புளிக்க தொடங்கியுள்ளது.

கடைசி 100 பக்கங்களைத் திமுகவில் அண்ணா சம்பத்திடையே இருந்த சண்டை பற்றி விரிவாக பேசுகிறார்.இவர் சம்பத் பக்கம் நின்றிருக்கிறார்.அண்ணாவின் கருப்பு பக்கங்களும் இந்த புத்தகத்தில் பேசப்படுவது ஆச்சரியமாக உள்ளது. கலைஞரை நேரடியாக பல இடங்களிலும் கலை ரசிகர் என மறைமுகமாக பல இடங்களிலும் தாக்குகிறார். பெரிய சம்பவங்கள் அல்லது பிரச்சனைகளில் முடிவுகள் எடுக்கும் போது தான் நமக்கெல்லாம் தூக்கம் பாதிக்கும். ஆனால் கண்ணதாசனோ பலமுறை அத்தகைய சம்பவங்கள் பற்றி சொல்லும் போதெல்லாம் அந்த இரவு நன்கு உறங்கினேன் என்றுதான் முடிக்கிறார்.

வனவாசம் என கண்ணதாசன் சொல்லுவது திமுகவில் இருந்த காலகட்டத்தை தான். ஆனால் இந்த நூல் எழுதிய காலகட்டத்தில் அவர் ஒரு புகழ்பெற்ற பாடல் ஆசிரியராக இருந்தார். இந்த நூல் அவர் சுயசரிதை என்றாலும் அவர் பாடல்கள் குறித்து அதிகம் பேசாதது சற்று ஏமாற்றமே இது முழுக்க முழுக்க கண்ணதாசன் என்கிற தனிமனிதரின் திமுக எதிரான நிலைப்பாடு ஏன் என்பதற்கான புத்தகம். கலைஞர் அல்லது அண்ணா அபிமானிகளிடம் இதற்கு நேர் எதிரான தங்கள் நிலை சார்ந்த கருத்துக்கள் இருக்கக்கூடும். ஒரு அரசியல் கட்சியின் உள்ளே நடக்கும் சம்பவங்களை எவ்வளவு விரிவாக பேசிய புத்தகம் என்கிற அளவில் நிச்சயம் இது ஒரு மாறுபட்ட புத்தகமாகும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கண்ணதாசனின் இளமைப்பருவம் குறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | கண்ணதாசனின் முதல் கவிதையைவிளக்குக. | K4 | CO3 | PO5 |
| 3 | வனவாசம் கதைச்சுருக்கத்தினைஎழுதுக. | K1 | CO4 | PO1 |
| 4 | கண்ணதாசனின் மனப்போராட்டங்கள் குறித்துவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | கண்ணதாசனுக்கு வேலை கிடைத்தஅனுபவத்தினைகுறிப்பிடுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கண்ணதாசனின் வனவாசம் ஒருதன்வரலாற்று நூல் என்பதைதெளிவுபடுத்துக. | K1 | CO4 | PO4 |
| 2 | கண்ணதாசனின் இளமையும் பெருமையும் குறித்துவிவரி. | K4 | CO2 | PO6 |
| 3 | புதியஉலகஅனுபவங்களைவனவாசம் வழி பதிவிடுக. | K3 | CO1 | PO5 |
| 4 | நல்லநண்பர்கள் குறித்துகண்ணதாசன் கூறியுள்ளவற்றைதொகுத்துரைக்க. | K2 | CO5 | PO6 |
| 5 | கண்ணதாசனின் இலக்கியபங்களிப்பைவிவரிக்க. | K4 | CO3 | PO3 |

# அலகு 4

# சபாபதி (நாடகம்)

ஆசிரியர் : பம்மல் சம்பந்த முதலியார்

**பம்மல் சம்பந்தனாரின் வாழ்க்கைச் சுருக்கம்**

01-02-1873 ஆம் ஆண்டு விஜயரங்க முதலியாருக்கும் அவரது இரண்டாவது மனைவி மாணிக்கவேலு அம்மாளுக்கும் நான்காவது ஆண் குழந்தையாகப் பிறந்தார். அவருடன் மூன்று அண்ணன்கள், இரண்டு சகோதரிகள் பிறந்தனர்.

1877 ஆம் ஆண்டு வரை திண்ணைப் பள்ளியில் சேர்ந்து தெலுங்கு எழுத்தை எழுத ஆரம்பிக்கிறார்.

1880 ஆம் ஆண்டு சென்னை பிராட்வேயில் இருந்த 'இந்து புரொபரைடரி' (Hindu Proprietary) பள்ளியில் படிக்க சேர்ந்தார்.

1882 ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த அப்பன் பள்ளியை அடுத்த கோபிந்தப்ப நாயக்கன் பிரைமரிப் பள்ளியில் படிக்கலானார். இந்தப் பள்ளியில் தான் வி.வி.சீனிவாச ஐயங்கார் நட்பு பம்மல் சம்பந்தனாருக்குக் கிடைத்தது.

1883 ஆம் ஆண்டு பள்ளி விழாவில் அலெக்சாண்டரும், கள்வனும் என்னும் ஆங்கில நாடகத்தில் கள்வனாக வேடமேற்றார். இவ்வாறு நாடகம் பற்றிய சிந்தனை துளிர்விட ஆரம்பித்தது.

1885 ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று தங்கப் பதக்கம் பெற்றார்.

1887 ஆம் ஆண்டு அரசு மாநிலக் கல்லூரியில் பி.ஏ. படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

1890 ஆம் ஆண்டு திருமணம் நடக்கிறது.

1891 ஆம் ஆண்டு 'சுகுண விலாச சபை' என்கிற நாடகக் குழுவைத் தொடங்குகிறார்.

1896 ஆம் ஆண்டு சட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்று. சுந்தரம் சாஸ்திரியார் அவர்களிடம் பயிற்சி வழக்குரைஞராய்ச் சேர்ந்தார்.

1898 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற வழக்குரைஞராகத் தொழிலைத் தொடங்குகிறார். மதுவிலக்கு சங்கத்தில் சேர்ந்து 64 ஆண்டுகள் உழைத்தார்.

1924 ஆம் ஆண்டு சர். சி.பி. இராமசாமி ஐயரின் வேண்டுதலின் பேரில் சிறு வழக்கு நீதிமன்றத்தின் நீதியரசர் ஆனார். அப்போது அவருக்கு 51 வயது.

**உறுப்பினர்**

- ❖ இந்திய விளையாட்டுக் கழக உறுப்பினராகவும் பின்னர் துணைத்தலைவராகவும் இருந்தார்.
- ❖ சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்.

- ❖ சென்னைப் பல்கலைக்கழக பேரகராதி உருவாக்கத்தில் பங்களித்தார்
- ❖ அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்
- ❖ பள்ளிப்பாடநூல் இலக்கியக் கழகத்தின் உறுப்பினர்
- ❖ சென்னை நகர் அன்னதான சமாஜத்தின் குழு உறுப்பினர்

**பட்டங்கள்**

- ❖ 03-06-1916 ஆம் ஆண்டு ராவ்சாகிப் பட்டத்தையும், 03-06-1927 ஆம் ஆண்டு ராவ் பகதூர் பட்டத்தையும், ஆங்கில அரசு வழங்கியது.
- ❖ 26-01-1951 ஆம் ஆண்டு குடியரசு விழாவில் நடுவண் அரசு பத்ம பூஷன் விருது வழங்கியது.

**சிறப்புகள்**

- ❖ பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணியைப் போற்றி, சென்னை நாடகக் கழகம் விழா கொண்டாடிய போது சர்.சி.பி இராமசாமி அய்யர், இராஜாஜி, ப. ஜீவானந்தம், பேரறிஞர் அண்ணா, டாக்டர் ம.பொ.சி., காமராஜர் போன்றோர் ஒருங்கிணைந்து கலைவாணர் தலைமையில் அவரைப் பாராட்டினர்.
- ❖ டெல்லி சங்கீத நாடக அகாதெமி, நாடக சங்கம் ஆகியன பம்மலுக்கு நடிப்பிற்கான பரிசை வழங்கின.
- ❖ சென்னை நாட்டிய சங்கம், சென்னை சங்கீத நாடக சபை ஆகிய அமைப்புகள் சம்பந்தனாருக்கு சிறப்பு செய்துள்ளன.

## சபாபதி நாடகப் பாத்திரங்கள்

மாணிக்க முதலியார் - சபாபதி முதலியார் தகப்பன்

சபாபதி முதலியார் – மாணிக்க முதலியார் பிள்ளை

குப்புசாமி முதலியார் - சபாபதி முதலியார் மாமனார்

கிருஷ்ணசாமி - சபாபதி முதலியார் மைத்துனன்

முருகேசம், குமரகுரு, நரசிம்மாச்சாரி - சபாபதி முதலியாரின் நண்பர்கள்

சுந்தர மூர்த்திப் பிள்ளை - ஒரு பெரிய மனிதர்

சபாபதி - சபாபதி முதலியாரின் வேலையாள்

சின்னசாமி முதலியார் - தமிழ் வாத்தியார்.

நாகேஸ்வர ஐயர்<br>கோபிநாத் ராவ்<br>கோவிந்தப்பிள்ளை } பாடகர்கள்

திரிபுரம்மாள் - சபாபதி முதலியாரின் தாயார்

தெய்வயானை அம்மாள் - சபாபதி முதலியாரின் மாமியார்

**கதை நிகழ் இடம்**

சென்னை, திருவல்லிக்கேணி

**நாடக அமைப்பு**

சபாபதி நாடகம் மூன்று காட்சிகளை உடையதாக அமைகின்றது.

**கதைக்களங்கள்**

முதலிரு காட்சிகளும் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மாணிக்க முதலியார் வீட்டின் ஓர் அறையிலும், முன்றாங்காட்சி மாணிக்க முதலியார் வீட்டின் மெத்தையிலும் அமைகின்றது.

**முதல் காட்சி**

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மாணிக்க முதலியார் வீட்டின் ஓர் அறையில் சபாபதி முதலியார் தன் நண்பர்களை எதிர்பார்த்து காத்திருக்கும் வேளையில் சபாபதியை அழைக்கிறார். சபாபதி மெல்ல வந்து கதவின் ஓரம் நிற்கிறான். அவன் பேசாமலிருக்கவே சபாபதி பெயரை சபாபதி முதலியார் மாற்ற நினைக்கிறார். முருகேசனும் குமரகுருவும் உள்ளே வருகிறார்கள் அப்போது வேலையாள் சபாபதியை அழைத்து அம்மாவிடம் சென்று கொட்டை பாக்கு கொஞ்சம் வாங்கி வர சொல்கிறார். சபாபதி கையில் பாக்கைக் கொண்டு வருகிறான். அழுக்கான கையில் கொண்டு, வந்ததற்காக கடிந்துக் கொண்டு தட்டிலே வைத்து கொண்டு வர சொல்கிறான். அடுத்ததாக டென்னிஸ் ஷுஸ் கொண்டு வரச் சொல்கிறார். சபாபதி வெள்ளித் தட்டில் வைத்து கொண்டு வருகிறான். சபாபதியை பார்த்து ஷுவைத் தட்டிலா வைத்து கொண்டு வருகிறாய்? என கேட்க. சபாபதி எனக்கென்ன தெரியும் சொல்லிக் கொடுத்தால் தானே தெரியும் என்கிறான்.

சபாபதி முதலியார் வெளியே தூறலைப் பார்த்து வேற ஏதாவது விளையாடலாம் என நினைத்து சபாபதியிடம் கார்ட்ஸ் எடுத்து வரச் சொல்கிறார். சபாபதி ஒரு போஸ்டு கார்டை எடுத்து வருகிறான். இதனால் எரிச்சல் அடைந்த சபாபதி முதலியார் இவனை கட்டிக்கிட்டு அழறது பெரிய கஷ்டமாக போனது என அலுத்துக் கொண்டார்.

சபாபதி ஒரு கார்பெட் பேக் எடுத்துக்கொண்டு வருகிறான். அதைப்பார்த்ததும் சபாபதி முதலியார் கோபமடைந்ததால் இங்கிலீஷில் சொன்னால் புரியவில்லை. தமிழில் சொல்லுங்கள் எனக் கூற காகிதக்கட்டு எடுத்துவா எனச் சொல்கிறார்.

(சபாபதி பெரிய காகிதக்கட்டு ஒன்றை கொண்டு வருகிறான்.)

ச.மு. : பாத்தைங்களா பிரதர்! சொன்னதுக்குச் சரியா செய்யரான்! ஏண்டா இத்தெ வைச்சிகினு என்னமாடா ஆடரது?

ச : பேசலாமா அப்பா?

ச.மு. : பேசு

ச : நீ இஸ்பெட் காயிதம்தானே கேட்டே? அப்பவே நெனெச்சேம்பா, ஆனாலும் நீ பேசக்கூடாது இன்னையே இண்ணு இத்தெ கொண்டாந்தேம்பா.

ச.மு. : போடா! இஸ்பெட் காயிதந்தான் கொண்டா சீக்கிரம்

ச : இதோ கொண்டாந்துட்டேம்பா (விரைந்து போகிறான்)

ச.மு. : இவனெ கட்டிகினு அழரது போதுமிண்ணு போவுது?

(சபாபதி சீட்டுக்கட்டை எடுத்துக் கொண்டு வருகிறான்.)

ச : இத்தெ மின்னாலே சொல்லக் கூடாதாப்பா.

ச.மு. : கொடுடா இப்படி (அதைக் குலுக்கிக் கொண்டே) நாலுபேர் இருந்தா சரியாயிருக்கும் ஆட்டம்.

ச : அப்பா எனக்குக் கூட, இஸ்பெட் ஆடத்தெரியும்பா கொஞ்சம்.

ச.மு. : சத்! அதனப்பிரசங்கி! தெருவுலே போயி தெரிஞ்சவங்க யாரானாலுமிருந்தா இட்டுகுனு வா, நிக்காதெ போ!

(சபாபதி போகிறான்)

சபாபதி சின்னசாமி முதலியாரை அழைத்து வருகிறான். சபாபதி முதலியார் தந்தை வருவதைக் கண்டவுடன் பரபரப்புடன் சீட்டையெல்லாம் சேர்த்து வைத்துவிட்டு சிநேகிதர்களை கண்ணால் சைகை செய்து அனுப்பி விடுகிறார். சின்னசாமி முதலியாரிடம் திருவாசகத்தில் உள்ள "நாடகத்தால் உன்னடியார் போல்" என்ற பாடலுக்கு பொருள் கேட்க, அவர் விளக்கும் போது சபாபதி முதலியாரின் தந்தை மாணிக்க முதலியார் அருகில் வருகிறார். சபாபதி முதலியாருக்கு இரண்டு வரி தமிழ் எழுத தெரியவில்லை என ஆதங்கப்படுகிறார். அவ்வேளையில் சபாபதி முதலியாரை பார்க்க வருகிறார்கள் சிலர். சபாபதி முதலியார் படிப்பது போல பாசாங்கு செய்கிறார்.

**இரண்டாம் காட்சி**

சபாபதி முதலியார் நாற்காலியின் மீது உட்கார்ந்து ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார். சபாபதி எதிரில் நிற்கிறான். அவ்வேளையில் மாமனார் குப்புசாமி முதலியாரும், மைத்துனன் கிருஷ்ணசாமியும் வந்து சபாபதி முதலியாரின் ரிசல்ட் பற்றி விசாரித்துவிட்டு பொங்கல் விருந்திற்கு அழைக்கிறார்கள். சபாபதி முதலியார் சபாபதியிடம் சோடா புட்டியை ஒடச்சி கொண்டா என்கிறார். சபாபதியும் அது கெட்டு பூடும்மா என சொல்ல, குறுக்கே பேசாமல் கொண்டு வா என சொல்ல, சபாபதி ஒரு தட்டில் ஒரு சோடா புட்டியைத் துண்டு துண்டாக உடைத்து வைத்துக் கொண்டு வருகிறான்.

ச. : பாத்தையா அப்பா! அப்பவே சொன்னேனெ புட்டியெ ஒடெச்சா கெட்டுபூச்சி இன்னு! ஒடெச்ச உடனே தண்ணியெல்லாம் புஸ் இண்ணு பூட்டுதப்பா.

ச.மு. : வாட் நான்சென்ஸ்! (What nonsense) உன்னை யார் புட்டியெ ஒடெக்கச் சொன்னது?

ச. : நீ தானே அப்பா சென்னே? அப்பவே நானு வேணாம் இண்ணனே?

ச.மு. : தெறந்து கொண்டு வாடா இண்ணா!

ச. : தெறக்கரதா? எப்படியப்பா? நீ சாவி கொடுத்தாயா?

ச.மு. : டாம் இடியட் (Damm Idiot) நீ ஒண்ணுக்கும் ஒதவ மாட்டே போ?

ச. : போறேம்பா

ச.மு. : இங்கே வா இப்படி! உள்ளே போய், காபி (Coffee) யாவது சுடசுட, கொண்டுவா அத்தெ தொடத்தெவலே! அத்தெயும் கெடுத்து வைக்கப் போரே! தெரியுமா?

ச. : தெரியும்மா

ச.மு. : போனா போவுது தம்பி, வில்யூ ஹாவ் சம் டீ (will you have some tea)?

சி : எஸ் (Yes)

ச.மு. : சபாபதி!

ச. : (உள்ளிருந்து) ஏன் ?

ச.மு. : அப்படியே ஒரு டம்ளர் டீ (Tea) யும் கொண்டு வா சுடச்சுட!

சபாபதி ஒரு தட்டில் ஒரு டம்ளர் காபியும் ஒரு டம்ளர் தேத்தண்ணீரும் எடுத்துக் கொண்டு வருகிறான்.

ச.மு. : அவங்க நடுவுலே வை அதை

(அப்படியே வைக்கிறான்! குப்புசாமி முதலியாரும் கிருஷ்ணசாமியும் அதைத் தொட்டு "அப்பப்பா"! என்கிறார்கள்.

ஏன்டா, சபாபதி! இவ்வளவு கொதிக்க கொதிக்கவா கொண்டாரச் சொன்னேன்?

ச. : எனக்கென்னமாப்பா தெரியரது? தொடத்தேவலெ இண்னையே என்ன?

ச.மு. : ஆல் ரைட் (all right) உனக்கு சரியான பனிஷ்மென்ட் (punishment) கொடுக்கணும்

இத்தெ ரெண்டையும் ஆத்திக் கொண்டு வா சீக்கிரம்; கை சுடட்டும் உனக்கு!

(சபாபதி போகிறான்)

நீங்க ஏன் நியூ போடகிராப் (new photograph) கேட்ட இல்லைங்களே?

கு : என்னா அது?

ச.மு. : நியூ போடகிராப் (new photograph) அது என்னம்மா பாடுதிண்ரைங்க; வெரி குட் மியூஜிக் (very good music) தாகத்துக்கு சாபிட்டவுடனே அத்தெ கொஞ்ச வாசிக்கரேன். அத்தெ வாசிக்க கத்துகிரத்துக்கு மூணு வர்ஷம் புடிச்சுது. ஒரு மியுஜிக் மாஸ்டர் (music master) வைச்சி அவருக்கு மன்திலி செவன் ரூபீஸ் (monthly seven rupees) கொடுத்து வந்தேன். இப்போ நண்ணா வாசிக்கரென்.

(சபாபதி மறுபடியும் இரண்டு டம்ளர்களைக் கொண்டுவந்து குப்புசாமி முதலியாரிடம் ஒன்றையும் கிருஷ்ணாவிடம் ஒன்றையும் கொடுக்கிறான்)

இருவரும் : (குடித்துப் பார்த்து) து..... து!

கு. : என்ன அப்பேன் இது? காப்பி ஆட்டம் இல்லையே!

கி : இதுவும் டீ (Tea) ஆட்டம் இல்லெ

ச.மு. : வாட் ஈஸ் தி மேட்டர்? (what is the matter?) லெட் மி சி (let me see) (முகர்ந்து பார்த்து) சபாபதி என்னடா செய்தே?

ச : ஆத்தி கொண்டாரச் சொன்னையே அப்பா! ரெண்டையும் ஊத்தி ஆத்தி கொண்டாந்தேன்.

ச.மு. : டாம் தி ஆஸ்! (Damn the ass) ஒண்ணாவா ஊத்தச் சொன்னே? இன்பொ என்னா செய்ரது அத்தே?

ச. : அதுக்கென்னாப்பா, வடி கட்டனா சரியா போவுது.

ச.மு. : டாமிட் (damn it) என் முன்னே நிக்காதே! எனக்கு கோபம் வரும்! போ வெளியே! பிக் பூல் (big fool) (சபாபதி போகிறான் ) நெவர்மைன்ட் (never mind) அவ்வையார் சொன்னபடி வயிற்றுக்குச் சோறு இல்லாத பொழுது காதுக்குக் கொஞ்சம் கொடுக்கப்படும் என்றபடி கொஞ்சம் மியூஜிக் (music) கேட்போம்.

**(கிராமபோனில் ஒரு பிளேட் (plate) போடுகிறார்)**

இது நான் பாடின ஸ்பெஷல் சாங் (special song) ரொம்ப ஸ்பிலென்டிட் (splendid) ஆயிருக்கும் ஹியர் பிளீஸ் (hear please) அதற்கு சாவி கொடுக்கிறான்) வாட்டீஸ் திஸ் (what is this) சம்திங் ராங் (something wrong) அந்த டாம் பூல் (damn fool) என்னமோ கெடுத்து வைச்சிருக்கிறான்! சபாபதி…!

சபாபதி வருகிறான்

ச : ஏம்பா!

ச.மு. : இத்தெ யென்னமானா தொட்டையா நீ?

சஇ : நானு ஒண்ணும் செய்யலெ அப்பா! அல்லாம் தொடச்சி வைக்கச் சொன்னையே இண்ணு, அந்த தோசக்கல்லு மாதிரியிருக்குதே, அது ரொம்ப அழுக்காயிருக்குது இண்ணு, நண்ணா செங்கல் போட்டு பளபள இண்ணு தேச்சு வைச்சேன்.

ச.மு. : பாத்தைங்களா! நெனைச்சேன் நானு! இந்த இடியட்டெ (idiot) கட்டிக்கொண்டு அழவேண்டியதாயிரக்குது! இன்னொரு பிளேட் (plate) போட்டுப் பார்க்கிறேன்.

(கொஞ்ச நேரம் பாடின பிறகு கமப, கமப, கமப என்று பாடிக் கொண்டிருக்கிறது) வாட் நான்சென்ஸ் இஸ் திஸ் அகேய்ன் (what nonsense is this again) இங்கே வாடா இப்படி சபாபதி, நிஜத்தைச் சொல்லு, இத்தெ என்னா செய்தே?

ச : நான் ஒண்ணும் செய்யலெ அப்பா! நானு தொடைக்கவேயில்லெ அப்பா இதெ! இது பொய் பேசுதப்பா!

ச.மு. : நான்சென்ஸ் (nonsense) நிஜத்தைச் சொல்! இல்லாப் போனா உடனே டிஸ்மிஸ் (dismiss) பண்ணி விடுவேன்.

ச. : இல்லெ அப்பா! நெஜத்தே சொல்லிடரேன். நேத்து நீ சொன்னையா ஊசியினாலெ கோடு பண்ணியிருக்கிரத் தொட்டுதான் பாடுது இண்ணு. அத்தெ பாக்கணும் இண்ணு. ஒரு குண்டூசி எடுத்துக் கோடு கிழிச்சிகினெ வந்தெ!

ஓரண்டெ போத்தலா போச்சிப்பா கொஞ்சம், அவ்வள தாம்பா.

ச.மு. : பொத்தலா பண்ணிவுட்டே!

ச. : இல்லெ அப்பா! அத்தெ ஒடனே கொஞ்சம், சாதம் போட்டு ஒட்டிவிடரெம்பா, நீ கோவிச்சுக்காதேப்பா!

ச.மு : டாம் டர்ட்டி பூல் (dam dirty fool) உன்னெ டிஸ் மிஸ் (dismiss) பண்ணிவிட்டேன்! போ வெளியே.

**மூன்றாங்காட்சி**

மாணிக்க முதலியார் வீட்டின் மெத்தையில் சபாபதி முதலியார் உட்கார்ந்திருக்கிறார். முருகேசமும், குமரகுருவும் வருகிறார்கள். சபாபதி முதலியாருக்கு வாழ்த்துகள் சொல்லுகிறார்கள். எந்த கல்லூரிக்கு படிக்கச் செல்கிறாய் என சபாபதி முதலியாரிடம் கேட்ட போது அம்மா படித்தது போதும் என்கிறார்கள் என பதிலுரைத்தான் சபாபதி முதலியார். அந்நேரம் மாமனாருக்குத் தந்தி அனுப்பி செய்தி சொல்லி விட்டாயா என, ரிசல்ட் வந்ததைப் பற்றிக் கேட்க, சபாபதி முதலியார், டெலிகிராம் அனுப்பி தபால் ஆபீஸில் கொண்டு போய் போடணும் என சொல்லி வேலையாள் சபாபதியை அனுப்புகிறார்.

**சபாபதி வாடிய முகத்துடன் வருகிறான்.**

ச : என்னப்பா அது! சும்மா பாஸ் (pass) பண்ணூட்டேன் பாஸ் (pass) பண்ணூட்டேன் இண்ணு மாத்ரம் சொல்ரே! உனக்கு இன்னும் கொஞ்சமாவது புத்தியில்லெ அப்பா!

ச.மு. : என்னடா அது! டாம் புரூட் (னயஅெ டிசரவந)

ச : இங்கே எல்லாம் போடாதே, தபால் ஆபிசுலெ போடு இண்ணு சொன்னையா... நானு அப்பவே நெனைச்சேன் தப்பு இண்ணு. ஆனாலும் நீ சொல்ரத்துக்கு எதிர்த்துப் பேசக்கூடாது இண்ணு பேசாதே போன்னா... போனதுக்கு நல்ல தொடப்பக்கட்டெ அடி ஆப்டுது!

ச.மு. : ஏன்?

ச : ஏனா? தபாலாபீசிலெ. எல்லாரும் உக்காந்துகினு இருக்கர எடத்துலெ நடுப்புர போட்டேன். போட்டுட்டு இத்தெ யாரானா எடுத்திகினு போராங்களா இண்ணு மொள்ளமா ஒளிஞ்சிகினு பாத்துகினு இருந்தேன். கொஞ்சம் பொறுத்து அங்கே பெருக்கரவ வந்து. அந்தெ பெருக்கிம்போயி குப்பையிலே கொட்ட போனா!. உடனே எனக்கு கோபம் வந்து, அவ கிட்ட போயி, அப்படியே புடிச்சிகினேன்! அப்புறம் ரெண்டு பேரும் சண்டெ போட்டோம்.

ச.மு. : அப்புறம்?

ச : அப்புறம்.... எனக்கு தொடப்பக்கட்டெ அடிதான்!

ச.மு : அந்தக் காகிதம் என்னமாச்சு?

ச : ஆ! அத்தெ மாத்திரம் உடலே அப்பா! அந்த குப்பெ தொட்டியிலே தேடி பாரத்தேன். என் கண்ணுக்கு ஆப்பிடலெ, சரிதான் இருக்கட்டும் இண்ணு, அங்கேயிருந்த குப்பை யெல்லாம் ஒண்ணுகூடம் உடாதெ, தபால் பெட்டியிலெ வாரி போட்டுட்டு வந்தூட்டேன்!

ச.மு. : டெலிகிறாமெ (Telegram) தபால் பெட்டியிலெ ஏண்டா போட்டே? அதுக்கு ரூபாய் வாங்கிகினு போகலெ அம்மா கிட்ட?

ச : உம்! சொன்னையா அப்பா அது எனக்கு? என்னா முட்டாளாயிருக்கரெ அப்பா? என்னப்பாது, இதுதானா நீ பாஸ் (pass) பண்ணது? எனக்கென்னமோ சந்தேகமா இருக்குதுப்பா!

ச.மு : போ அதனப்பிரசங்கி! ரெகுலர் இடியட் (regular idiot) வாய் மாத்திரம் இருக்குது!

சின்னசாமி முதலியார், சபாபதி முதலியாருக்கு எழுதிய சாத்துக்கவி காகிதத்தை, கடை பொருள் வாங்க லிஷ்டு எழுத அம்மாவிடம் கொடுக்கிறான் சபாபதி. ஐஸ்கிரீம் செய்ய சொன்னால் உப்பு சேர்த்து செய்கிறான். புல்லாங்குழலை அடுப்பூதக் கொடுக்கிறான். கச்சேரி பண்ண வைத்திருக்கிறான். இவ்வாறு எதையும் சரியாக செய்ய முட்டாளாக சபாபதி காணப்படுகிறான். இந்நிலையில் சபாபதி முதலியார் நண்பர்களுக்கு பார்ட்டி கொடுத்து மகிழ்ச்சியாய் இருக்கும் போது தபால்காரர் வந்து சபாபதி முதலியார் பாஸ் பண்ணவில்லை என்ற தந்தியைக் கொடுத்து சபாபதி முதலியாரைக் கலங்க வைக்கிறார்.

(இரு தபால்காரன் வருகிறான்.)

த. : நாயினா தந்தி வந்திருக்குது.

ச.மு. : தந்தியா! கொண்டா இப்படி

(கையெழுத்துப்போட்டு அதை வாங்கிப் பிரித்துப் பார்க்கிறார் தபால்காரன் போகிறான்)

மு.கி. : என்னா பிரதர் (brother) விசேஷம்?

ச.மு. : மை மதர் இன்-லா நியர் ரிலேடிவ் டைட் (my mother-in-law near relative died) நான் உடனே புறப்பட வேண்டியதாயிருக்குது.... ஐயா, கொஞ்சம் கச்சேரியெ நிறுத்துங்க நெக்ஸ்ட் டிரெயின் எப்பொ பொறப்படுது பிரதர்? (brother)?

மு. : ஆறுமணிக்கு புறப்படுது.

ச.மு. : அப்போ நான் உடனே பாக் (pack) பண்ணணும். உங்களையெல்லாம் டிஸ் அபாயின்ட் (disappoint) பண்ரது எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்குது பிரதர்ஸ் (brothers) ஆனாலும் இது ரொம்ப அர்ஜென்ட்மாடர் (urgent matter) நீங்கல்லாம் இப்போ தயவு செய்து டேக் லீவ் (take leave) பண்ணுங்க. இன்னொரு நாளைக்கி இந்த பார்டி (party) வைச்சிக்கலாம்.

(சபாபதி முதலியாரும் சபாபதியும் தவிர, மற்றவரெல்லாம் போகிறார்கள்)

ச. : என்னாப்பா சமாசாரம்?

ச.மு. : உடனே சாமான்களெல்லாம் பாக் (pack) பண்ணணும்.... ஊருக்குப் போவணும்.

ச. : ஏம்பா?

ச.மு. : இத்தெ யாரு கிட்டவும் சொல்லாதே இப்போ! தெரியுமா மச்சான் கிட்டயிருந்து தந்தி வந்தது. 'நீ பாஸ்' (Pass) பண்ணினதாக எழுதியனுப்பனனே அது தப்பு. பாஸ் (Pass) பண்ணது பட்டணத்திலே இருக்கிற பம்மல் சபாபதி முதலியார், எனக்கு சொன்னவங்க முன்னே தப்பா சொன்னாங்க. மன்னிக்கணும். இண்ணு தந்தி கொடுத்திருக்கிறான்

ச. : அடடெ! அப்பவே நெனைச்சேம்பா

ச.மு. : எனக்குக்கூடம் சந்தேகமாயிருந்தது. என்னமா பாஸ் பண்ணோம் இண்ணு; இப்போ இன்னம் ஒரு மாசம் பட்டணத்துலேயே இருக்கக்கூடாது. இவ்வளவு தூரம் எல்லோருக்கும் சொல்லி கில்லி, பார்ட்டியெல்லாம் கொடுத்த பிற்பாடு, ரொம்ப வெட்கக்கேடா போகும்.

ச.மு. : அப்படித்தான் எனக்கும் தோணுது... நீ போயி சீக்கிரம் பாக் (pack) பண்ணு.

ச. : கொஞ்சதூரம் போய் திரும்பிவந்து) ஏம்பா, அப்படி போட்டா அதுக்கு என்னாப்பா பேர் வைப்பே?

ச.மு. : எம்பேர்தான் வைக்கலாமிண்ணு யோசிக்கிறேன்.

ச. : ஏம்பா, எம்பேர் கொஞ்சம் வையேம்பா?

ச.மு. : சத்! நான்சென்ஸ் (nonsense))அதெல்லாம் ஒதவாது எம்பேர்தான் வைக்கணும்.

ச. : ஆனா... சபாபதி இண்ணு வை அப்பா, யாரு எப்படி ஒணுமிண்ணாலும நெனைச்சிகட்டும்பா

(போகிறான்)

ச.மு. : அவன் சொல்ரதும் ஒரு யுத்திதான்.

சபாபதி நாடகம் விடுதலைக்கு முன் வாழ்ந்த மக்களின் பேச்சு வழக்குகளையும், பழக்கவழக்கங்களையும் நம் கண்முன் காட்டுகின்ற ஒரு நகைச்சுவை நாடகமாகும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சபாபதியின் பண்புநலன்கள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | சபாபதிநாடகத்தின் கதைச் சுருக்கத்தினைஎழுதுக | K4 | CO3 | PO5 |
| 3 | சபாபதிநாடகஅமைப்பினைவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | பம்மல் சம்பந்தனார் குறிப்புவரைக. | K5 | CO5 | PO2 |
| 5 | சபாபதிநாடகத்தின் கதைக்களங்கள் குறித்துவிளக்குக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சபாபதிநாடகம் ஒருநகைச்சுவைநாடகம் என்பதைதெளிவுபடுத்துக. | K1 | CO4 | PO4 |
| 2 | சுபாபதிநாடகத்தின் பாத்திரப்படைப்புகுறித்துவிவரிக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | பம்மல் சம்பந்தனாரின் இலக்கியபங்களிப்புகுறித்துகட்டுரைவரைக. | K3 | CO1 | PO5 |
| 4 | சபாபதிநாடகஅமைப்புகுறித்துவிரிவாகவிவரி. | K2 | CO5 | PO6 |
| 5 | சுபாபதிநாடகத்தின் கதைக்களங்களைஎடுத்துரைக்க. | K4 | CO3 | PO3 |

# அலகு 5

# இரசிகமணியின் கடிதங்கள்

**ஆசிரியர்க் குறிப்பு**

இரசிகமணி என அறியப்படும் டி. கே. சிதம்பரநாத முதலியார் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் தீத்தாரப்ப முதலியாருக்கும், மீனாம்பாளுக்கும் மகனாக 11-09-1882-இல் பிறந்தார். தென்காசியில் ஆரம்பக் கல்வியும் திருச்சிராப்பள்ளியில் உயர்நிலைக் கல்வியும் கற்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார்.

**இலக்கியப் பணி**

திருநெல்வேலியில் வண்ணாரப்பேட்டை சாலைத் தெருவில் உள்ள இவரது வீட்டின் நடு முத்தமாக இருந்த தொட்டிக் கட்டு வட்ட வடிவமான அமைப்பில் இருக்கும். இவரது நண்பர்கள் மாலை வேளைகளிலும்,ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூடுவார்கள். இந்த கூட்டத்திற்கு தான் வட்டத் தொட்டி என்ற பெயர் ஏற்பட்டது. அந்த நாட்களில் தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு நன்கு அறிமுகமான இடம் வட்டத் தொட்டி ஆகும்.

மேலைநாட்டில் டாக்டர் ஜான்சனின் லைப்ரரி கிளப்புக்கு எவ்வளவு பெருமையும் முக்கியத்துவமும் உண்டோ அந்த அளவுக்கு திருநெல்வேலியில் இருந்த இந்த வட்ட தொட்டிக்கும் உண்டு. தமிழ் கவிதைகளையும் கம்பராமாயணத்தையும் கம்பன் பாடல்களில் காணப்படும் நயங்களையும் அனுபவிப்பதற்காகவே ரசிகமணி டி.கே.சி.யின் வீட்டில் கூடிய கூட்டத்திற்கு தான் நாளடைவில் வட்டத் தொட்டி என்ற பெயர் ஏற்பட்டது. இவரது வட்டத் தொட்டி இலக்கிய அமைப்பில் அறுபது வயதை எட்டியவர்கள், அதற்கும் மேற்பட்டவர்கள் முதல் 18 ஆண்டு கூட நிறையாத கல்லூரி மாணவர்கள் மற்றும் நண்பர்களான மீ. பா. சோமு, ஸ்ரீ நிவாச்சாரி,கல்கி, ரா.பி. சேது பிள்ளை, இராச கோபாலாச்சாரி, சீனிவாச ஐயங்கார், தொ.மு. பாஸ்கர தொண்டைமான், வையாபுரி பிள்ளை, சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

வட்டத் தொட்டியின் தலைவரும், நிறுவனரும் ரசிகமணி டி.கே.சி தான். ஆனால் அதை தாங்கி நின்ற கற்றூண் செயலாளர். தொ.மு. பாஸ்கர தொண்டைமான் ஆவார்கள். நல்ல தமிழ் அறிவு படைத்த குடும்பத்திலிருந்து வந்தவர். கல்லூரியில் பயிலும் காலத்திலேயே அவருடைய தமிழார்வத்தை மேலும் வளர்த்தவர் சொல்லின் செல்வர் ரா.பி. சேது பிள்ளை அவர்கள். பின்னர் முதுபெரும் புலவர் வெள்ளைக்கால் சுப்ரமணிய முதலியார் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. கிட்டத்தட்ட அவருடைய இலக்கியப் பணிக்கெல்லாம் உறுதுணையாக இருந்து மேலும் அறிவை வளர்த்துக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ரசிகமணி டி.கே.சியினால் காந்தம் போல் கவரப்பட்டு அவருடன் செயல்பட்டார்.

இரசிகமணி வழக்கறிஞராகவும், எழுத்தாளராகவும், இலக்கிய திறனாய்வு முன்னோடியாகவும் திறம்பட செயல்பட்டவர். ரசிக மணி டி.கே.சி-யின் கடிதங்கள் மாபெரும் இலக்கியச் செல்வம். அவை ரசனையின் எண்ணற்ற தடங்கள் கொண்டவை. தமிழ் இலக்கிய மரபை ஒரு புதிய வெளிச்சத்தில் நமக்கு காட்டுபவை. இரசிகமணி அவரது வாழ்நாளில் பலருக்கு எழுதிய கடிதங்களின் முழு தொகுப்பு தான் இரசிகமணியின் கடிதங்கள். இவை ஒவ்வொன்றும் நேருக்கு நேர் நின்று பேசும் யாருக்கு எழுதுகிறார்களோ அந்த ஆளை தம் கண் முன் நன்றாக நிறுத்தி வைத்துக்கொண்டு,இரசிகமணி அவர்களுடன் இயல்பாக உரையாடுவார். உணர்வுகளின் ஆழ அகல உயரங்களையும் ஆளுமைகளையும் காட்டுவது ரசிகமணியின் கடிதங்களே.

இவர் வட்டி தொட்டி நாயகர், வளர் தமிழ் ஆர்வலர், இரசிகமணி, குற்றால முனிவர்என்றெல்லாம் அழைக்கப்பட்டார். டி.கே. சிதம்பரநாத முதலியார் 1954 -ஆம் ஆண்டு 73-ஆம் வயதில் 16-12-1984 -இல் மறைந்தார்.

**கடிதம் 1**

வண்ணாரப்பேட்டை,

4.1.37.

நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

அருமையோடு தாங்கள் அனுப்பிய கடிதமும் புது வருஷ வாழ்த்தும் வந்தன. ரொம்ப சந்தோஷம்.

ரவீந்திரர் எழுதிய கவி முக்கியமாக 19-ஆவது வருஷத்தைக் குறித்ததாய் இருந்தாலும், தற்போது நிகழ்கிற 1938- ஆவது வருஷத்துக்கு ரொம்ப அமைப்போடு பொருந்துவதாய் இருக்கிறது.

சோர்வடைந்து மனம் தத்தளித்துக் கொண்டிருக்கிற யாவருக்கும் எக்காலத்திலும் கை தூக்கி விடக் கூடிய அரியதொரு சமாதானமாக இருக்கிறது. அதை மேற்கோளாகக் கையாண்டது ரொம்பவும் நயமான காரியம்.

காகிதம், அச்சு முதலான அம்சங்கள் எல்லாம் ரொம்ப அலங்காரமாக அமைந்திருக்கின்றன. வருஷப் பிறப்பன்று அத்தகைய வாழ்த்து கைக்கு வருகிறது என்றால் எப்பேர்ப்பட்ட சகுனம்.

நான் அதை ரொம்பவும் அனுமதித்தேன். அப்படியே பல நண்பர்களும் அனுபவித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

1938-ஆம் வருஷத்துக்கு நான் வாழ்த்த வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தாங்கள் எப்படியும் இங்கே மாற்றி வந்து விட வேண்டும். வட்டத் தொட்டியை அலங்கரித்துப் பலப்படுத்த வேண்டும் என்பதுதான்.

தாங்கள் கிறிஸ்துமஸ் ரஜாவில் இங்கே வந்து போவீர்கள் என்பது எனக்கு தெரியும். ஆகையால் தங்களை எப்படியும் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன். தாங்கள் வந்த இரண்டு தடவையும் நான் இங்கே இல்லாமல் போய்விட்டது வருந்தத்தக்கதே.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் நாங்கள் கலந்து கொண்டது ரொம்பவும் சந்தோஷமான செய்தி. நாலைந்து வருஷங்களுக்கு முன் தலைமை வகித்த முறையில் நானும் கலந்து கொண்டேன். அப்போது சைவத்துக்கும் புறம்பல்ல, கம்பராமாயணம் படித்தக் குற்றம் உண்டானாலும் சைவத்தை விட்டுவிட்டு வேறொரு சமயத்துக்கு போனவன் அல்ல என்று ரொம்ப தடபுடலாய் விளம்பரப்படுத்திக் கொண்டேன்.

இந்த நையாண்டி தனத்துக்கு எல்லாம் அங்குள்ள சைவ நன்மக்கள் சிரித்து விடுகிறார்களா? அல்ல. சரி என்று ஒப்புக்கொண்டு சந்தோஷப்பட்டார்கள். யாரோ ஒருவர் இருவர் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டார்கள்.

தாங்கள் இவ்வருஷமம் போட்டதோ,ஜப்பான் வெடிகுண்டு. ரொம்ப ரொம்ப சமாஜத்தை குலுக்கி இருக்கும். தலைவராவது கம்பத்துவேஷியா இல்லாமல் போனது, கொண்டாட தகுந்த விஷயம்.

திருநெல்வேலி தமிழ் பயப்பட வேண்டிய காரியம்,என்று எண்ணுவதற்கு தாங்கள் மடத்தார் என்று சொன்னது ஒரு வகையில் உண்மைதான். 20 வருஷத்துக்கு முன் திராவிட மகா பாஷ்யம் என்று ஒரு பொக்கிஷம் ஒன்று இருக்கிறது. திருவாவடுறை மடத்தார் ஒழித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

“ஏண்டா மடத்தார் இப்படி வைக்கோல் படப்பு வைரவனாய் இருக்கிறார்கள்.அப்படி அருமையான நூலை வெளியிட்டால் அவர்களுக்கு என்ன குறைந்து போய்விடும், என்றெல்லாம் சைவ பக்தர்கள் புகார் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக வந்ததையா திராவிட மகா பாஷ்யம்.

சைவ புலவர்கள் கிடைத்ததடா வட்டை என்று அதை வாசிக்க ஆரம்பித்தார்கள். தமிழ் வசனத்துக்கு எடுத்துக்காட்டு உரைகள் என்று பலவாறாக புகழவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

அவ்வளவுதான் திருநெல்வேலி தமிழ் எழுத்தாளர் எல்லாரும் சேர்ந்தது போல கோபுரம் கட்டவே ஆரம்பித்துவிட்டார்கள். ஆகையால் தாங்கள் சொன்னது உண்மையே. பூசி முழுகுறதற்கும், பொய் சொல்லி கொண்டிருப்பதற்கும் காலாவதி ஆகிவிட்டது.

இனிமேல் வெட்டொன்று துண்டு ரெண்டு என்று விஷயம் விழவேணும். நாங்கள் பேசியது ரொம்பவும் சரி.

கொஞ்சம் இந்த முறையிலே தான் கல்வியின் கதை கொத்து முகவரியில் எழுதி விட்டேன். அரும்ப அகராதிக்குள் ஊசி போல் குத்ததான் செய்யும். என்ன ஆகிறது என்றுதான் பார்ப்போமே. தாங்கள் எழுதிய கடிதத்தை ரொம்பவும் அனுபவித்தேன். சென்ற ஞாயிற்றுக்கிழமை வி. பி.எஸ் அவர்கள் அங்கே வந்திருப்பார்களே பிறகு அவர்களை பார்க்க நேரம் வாயக்கவில்லை.

எனக்கும் தூத்துக்குடி போய் வரவேண்டும் என்று ஆசைதான். இடது தோள்பட்டையில் கொஞ்சம் வலி இருந்து கொண்டு இடைஞ்சல் செய்வதால், பிரயாணம் என்றால் கொஞ்சம் பயமாய் இருக்கிறது. சௌக்கியமாய் இருந்தால் விபிஎஸ் கூட நானும் வந்து இருப்பேன்.

"என்னத்தை" என்ற வியாசத்தைப் பற்றி பாப்பா ஸ்ரீனிவாசயயங்கார் அவர்கள் பிரமாதமாக எழுதியிருக்கிறார்கள். டாக்டர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்களுமே அதை ரொம்ப ரொம்ப அனுபவித்ததாக தெரிகிறது. இதிலிருந்து எனக்கு ஒரு படிப்பினை.இந்த மாதிரி கொஞ்சம் கொஞ்சம் எழுதவும் முயல வேண்டியது தான். அது முற்றிலும் வீணென்று ஆகிவிடாது என்பதுஉண்மை.

செல்லையா திருவனந்தபுரம் தாங்கி, வீரராகவபுரம் பிரான்சில் வேலை பழகுகிறான். கிறிஸ்மஸ் ரஜாவுக்கு சென்னை போயிருக்கிறான். இரண்டு மூன்று தினத்தில் திரும்புவான். வீட்டில் எல்லாரும் சௌக்கியமே. அவ்விடத்திலும் தாங்கள் அம்மாள் குழந்தைகள் எல்லாம் சௌக்கியம் என்று எண்ணுகிறேன்.

தங்கள்

டி.கே. சிதம்பரநாதன்.

## கடிதம் 2

2, சாம்பசிவம் தெரு,
தியாகராஜ நகர்,
சென்னை.
18-01-1938.

அருமை நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

தாங்கள் ரொம்ப அருமை பாராட்டி அனுப்பிய பொங்கல் வாழ்த்தும் கடிதமும் வந்து சேர்ந்தன. ரொம்ப சந்தோஷம் விளாத்திகுளத்தைப் பற்றி எழுதிய குறிப்புகள் எனக்கு ரொம்பவும் ரசமாய் இருந்தன.

பழுதுபட்டு போன காரியங்கள் எல்லாம் தங்கள் ஆதரவால் திருத்தம் அடையும் என்று நம்புகிறேன். விளாத்திகுளம் போன்ற சிறு ஊரில் நாம் பேசிக்கிறபடி எல்லா திருத்தங்களையும் கை கூடும்படி செய்துவிடலாம். ஜனங்கள் திருத்தங்களின் பயனை மறுநாளே கண்கூடாக பார்த்து விடலாம். அதனால் திருத்த முயற்சியில் எல்லாரும் கலந்து கொள்ளுவார்கள். ஆகையால் தாங்கள் முயற்சி வீண் போகாது. ஊர்க்காரருடைய நன்றிக்கு தாங்கள் எப்போதும் உரியவராவீர்கள்.

மாம்பலம் வந்து மூன்று மாதம் ஆகிறது என்பது தங்களுக்கு தெரிந்தது. இப்படியும் வண்ணார்பேட்டைக்கு சங்கராந்தி சமயம் போய்விட வேண்டும் என்று தீர்மானித்திருந்தேன்.

ஆவுடையப்பிள்ளை அவர்கள் நாகர்கோயில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் மற்றும் நண்பர்கள் டிசம்பர் ரஜாவுக்கு இங்கே வந்திருந்தார்கள். தாங்களும் வருவீர்கள் என்று எதிர்பார்த்து இருந்தேன். நண்பர்களுடன் வண்ணார்பேட்டைக்கு போக வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இடையில் செல்லையாவுக்கு காய்ச்சல் வந்து ரொம்ப கஷ்டப்படுத்திவிட்டது. நாலைந்து நாளாக காய்ச்சல் இல்லை. ஆனால் ஹீனம் இருந்து கொண்டிருக்கிறது. உடம்பு தேறுவதற்கு இரண்டு வாரம் செல்லலாம். இது காரணமாக ஊருக்குப் போவதை குறைந்தது இரண்டு வாரமாவது ஒத்திவைக்க ஏற்பட்டுவிட்டது.

தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடல்கள் அடங்கிய புத்தகத்தை இத்துடன் அனுப்பி இருக்கிறேன். அது நல்ல முறையில் அச்சிட்டு அழகு பெற கட்டிடம் அமைந்திருப்பதால் தங்களுக்கு மிக்க உவகையைக் கொடுக்கும். இதெல்லாம் செய்தது அடுத்த வீட்டு நண்பர் அருணாச்சலம் பிள்ளை அவர்கள். அவர்களும் தம்பியும் மைத்துனரும் ரொம்பவும் தமிழில் ஈடுபாடு உள்ளவர்கள். அவர்கள் ஒரே வளைவில் அடுத்த வீட்டில் இருப்பதால் இணை பிரியா நண்பர்களாய் இருக்கிறார்கள்.

இவர்கள் தேசிய விநாயகம் பிள்ளை அவர்களோடு விடுவதாய் இல்லை. வருகிற மார்ச் மாதம் 18, 19-ஆம் தேதிகளில் கம்பர் விழாவினை கம்பர் பிறந்த ஊரான தேரெழுந்தூரில் மிக விமரிசையோடு நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உறவினரும், நண்பருமான சில மிரசுதார்கள் தேரெழுந்தூரிலேயே வசிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கம்பர் விழாவை வெகு கோலாகலமாக நடத்த வேண்டும் என்று ஆசை. நம்முடைய வட்டத் தொட்டியைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் விழாவுக்கு வந்து சேர வேணும்.தாங்கள் அவசியமானால் மார்ச் 20, 21-ஆம் தேதிகளையும் சேர்த்து விழாவோடு உபயோகித்து கொள்ளும்படி ஏற்பாடு இப்போதே செய்து கொள்ள வேண்டும். கல்கிக்கும் விழாவில் ரொம்ப ஆத்திரம். ஆகவே கம்பர் விழா என்றும் இல்லாத முறையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த 1939 -ஆம் வருஷம் தமிழுக்கு முக்கியமான வருஷம் என்று சொல்ல நேரும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒன்று தே.வி-யின் கவிகள் வெளிவந்த விஷயம். அடுத்தது கம்பர் விழாவின் மூலம் கம்பர் பெருமை தமிழ் உலகுக்கு தெளிவாய்த் தெரிய வருவது. இந்த இரண்டு அம்சங்களும் சேர்ந்துதான் வருஷத்துக்கு சிறப்பு கொடுக்க வேணும்.

வீட்டில் அம்மாள் குழந்தைகள் எல்லாரும் சௌக்கியம் தானே? இங்கே எல்லாரும் விசாரித்ததாகச் சொல்ல வேணும்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்.

**கடிதம் 3**

குற்றாலம்

6-4-38.

நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

நாங்கள் நாங்குனேரியிலிருந்து எழுதிய கடிதம் வந்தது. ரொம்ப சந்தோஷம் எப்படியும் தூத்துக்குடி தூரம்தான். நாங்குனேரி பக்கம் தான். நாங்குனேரியிலும் தாங்கள் வசிக்கிற இடமோ ரொம்பச் சரியான இனம்.முஜாபரி பங்களா முதலிய சௌகரியங்களைப் பார்த்தால் ஏன் அங்கே நாலு நாள் தங்கக்கூடாது, தங்களோடும் மற்ற நண்பர்களோடும் கூடி ஒரு ஜமா போடக் கூடாதென்று சதா இனி தோன்றும். தாங்கள் தூத்துக்குடியில் இருந்த போது அப்படி ஒன்றும் தோன்றி விடாது. உண்மையிலேயே நம்பிபுரம் திருநெல்வேலி ஜில்லாவில் அழகாக அமைக்கப்பட்ட வாசஸ்தலங்களில் ஒன்று. தாங்கள் அங்கே தங்குகிறீர்கள் என்பது எனக்கு ரொம்ப சந்தோஷமான சமாச்சாரம்.

குழந்தைகளும் அம்மாளும் நன்றாய் வசதியாய் அனுபவிப்பார்கள்.ஆரோக்கியமும் அதனால் அதிகமாக ஏற்படும்.

நான் குற்றாலத்தில் முகாம் போட்டு கிட்டத்தட்ட இரண்டு மாசம் ஆகிறது. ஒரு வாரம் வண்ணாரப்பேட்டையில் தங்கி இருக்க நேர்ந்தது. குற்றாலத்துக்கு வந்த பின் தான் எனக்கு உடம்பு சௌகரியப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வாரம் இங்கே தங்கி விட்டு வண்ணாரப்பேட்டைக்குத் திரும்பிவிடுவேன்.

ஆர்.வி. சாஸ்திரிகளின் பிரசங்கத்தை தென்காசிவாசிகள் நன்றாக அனுபவித்தார்கள். விஷயத்தையும் நன்றாய் உணர்ந்தார்கள் என்பது இனி யாராவது பாகவதர் பாட வந்தால் உம் பூச்செல்லாம் இங்கே பலியாது. தமிழில் பாடத் தெரியுமானால் பாடும். அல்லாத பட்சத்தில் நடையைக் கட்டமென்று சொன்னதிலிருந்து தெரிந்தது. அந்த சமயத்தில் கல்கி எல்லாம் வந்து 13 நாள் எங்களோடேயே தங்கினது உற்சாகமாக இருந்தது. அவர்கள் சென்னைக்கு புறப்பட்டுப் போய்விட்டபின் குற்றாலம்,குற்றாலமாகக் காணவில்லை. நான் என்னடா செய்கிறது என்று கையை நெறித்துக் கொண்டிருந்தேன்.

வருகிற செவ்வாய் அன்று இங்கிருந்து வண்ணாரப்பேட்டைக்குத் திரும்ப உத்தேசித்திருக்கிறேன். அங்கே வந்துவிட்டால் எப்படியும் தங்களைப் பார்த்தல் எளிது. தங்களுக்கு தூத்துக்குடி விலாசத்திற்கு எழுத வேண்டும் என்று கருதிக் கொண்டிருந்த தருணத்திலேயே தங்கள் கடிதம் வந்தது. அது ஒரு அதிசயம் தானே. தாங்கள் அம்மாள் குழந்தை எல்லாம் சௌக்கியம் என்று நம்புகிறேன்.

தங்கள்

டி.கே.சிதம்பரநாதன்.

## கடிதம் 4

வண்ணார்பேட்டை,

27-04-38

நண்பர் பாஸ்கர் அவர்களுக்கு,

தங்களுடைய அன்பும் உல்லாசமும் கலந்த கடிதம் வந்தது. செல்லையாவும் வாசித்துப் பார்த்துக் கடிதம் நன்றாய் அமைந்திருக்கிறது என்று அனுபவித்தான். இன்னும் மற்ற நண்பர்கள் பார்க்கவில்லை. பார்த்தால் அவர்களும் அனுபவிப்பார்கள். தாங்கள் அனுபவித்துக் கடிதம் எழுதுவதற்கும் நண்பர்கள் வாசிப்பதற்கும் காரணமாய் இருந்தது விமர்சனம் அல்லவா. இது பற்றியே "நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்

பயனில சொல்லாமை நன்று" என்று திருவள்ளுவர் பெரும்போடு போட்டிருக்கிறார். கல்கி சிறந்த எழுத்தாளராய் இருக்கிறதில் அவ்வளவு வருத்தம் இல்லை. டிகேசி சிந்ததாயிருக்கிறது கல்கி எழுத்து என்று சொன்னதில் தான் வருத்தம். ஆமா புருஷன் அடித்ததில் ஒன்றும் இல்லை. அடுத்த வீட்டுக்காரி சிரித்ததில்தானே கோபம். இப்படி எல்லாம் மணல் வறுக்கிறது சகஜந்தான். ஆனால் நமக்காக வறுத்தால் தான் நாம் நன்றாய் உணரலாம் அனுபவிக்கலாம்.

வட்டத்தொட்டி நண்பர்களில் அனேகர் பத்திரிகை வந்த உடனேயே வாசித்துவிட்டு எனக்கும் ஒரு பிரதி கொண்டு வந்து கொடுத்தார்கள். அவர்களுக்கு ரொம்ப ரொம்ப கோபம். தாங்களும் நாங்குனேரியிலிருந்து கொண்டே வட்டத்தொட்டிக்குள்ளிருந்து நடப்பது போல நடந்து கொண்டீர்கள். ஆகையால் வட்ட தொட்டிக்குக் குறுக்களவு பதினைந்தடி அல்ல காதக் கணக்கில் சொல்ல வேண்டும்.

இது சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். பாரதியார் கவி எழுதுவதில் தேர்ந்தவர். தமிழ்நாடு என்றும் போற்றத்தகுந்தவர். சிலர் அளவுகடந்த வார்த்தைகளில் பாரதியாரின் கவியைப் புகழ்ந்து பேசினாலும் அவர்கள் அதை நான் மதிக்கிற அளவு அனுபவிக்கிற அளவு, மதிக்கிறதாக அனுபவிக்கிறதாகவாவது சொல்ல முடியாது. கவியை எவ்வளவோ அனுபவித்தாலும் அவர் எழுதிய வசனம், நான் படித்தமட்டில் அவ்வளவாகச் சிறந்ததென்று சொல்லமுடியாது. அப்படியே தான் வி.வி.எஸ். ஐயர் எழுதிய வசனமும் பகட்டும் பளபளப்பும் அதிகப்பட்டு, உண்மையான பாவம் அதாவது சாயல் சிதைந்து போவதையே காண்கிறோம். இந்த இரண்டு ஆசிரியர்களின் வசனத்தைப் பற்றி எத்தனையோ தடவை நான் பேசினதுண்டு. அதை ஒட்டித்தான் (மறதியினால் அல்ல, பகைமையோ இல்லவோ இல்லை) கணையாழியின் முகவுரையில் அவர்களைப் பற்றிப் பிரஸ்தாபியாமல் விட்டது. இது ஒன்றும் தெரியாமல் பேனாவும் கடுதாசியும் கிடைத்தது என்று எண்ணிக்கொண்டு கைக்கு வந்ததை எழுதிவிட்டால் நாம் என்ன செய்கிறது. சிரிக்க வேண்டியது தான். வேண்டுமானால் தமிழ் மகள் அழுதுகொள்ளட்டும்.

தாங்கள் சொல்லுகிறபடி உயிருள்ள தமிழ், உயிர் அற்ற தமிழ் என்ற வித்தியாசம் நம்மவர்களுக்குத் தெரிய வேணும். அப்படித் தெரிந்தால் அல்லவா உண்மையான இலக்கியம் நாட்டில் உற்பத்தியாகும். சுந்தரம், சோமு இருவருக்கும் பரிசு கிடைத்தது. வட்டத்தொட்டிக்கே ஒரு சிறப்பு. சுந்தரம் தங்கள் கடிதத்தை வாசித்து நடை நல்ல மாதிரியாக உல்லாசப் போக்காய் ஓடுகிறது என்று அனுபவித்துச் சொன்னார். பரிசு கிடைத்தது சம்பந்தமாய் தாங்கள் சந்தோஷப்பட்டதற்கும் நன்றி ரொம்பவும் பாராட்டுகிறார்.

இரண்டு மாசமாய் நான் குற்றாலத்தில் தங்கி விட்டதால் மார்ச்சு மாசம் மத்தியில் இங்கே வந்த போது ஒரு கூட்டம் மாத்திரம் கூடி கிஷ்கிந்தா காண்டத்தை முடித்தோம்.

மே முதல் தேதி வாக்கில் கன்னியாகுமரிக்கு முகாம் போவதாக உத்தேசம். ஏதோ பத்து இருபதுநாள் தங்கலாம் என்று உத்தேசம். தாங்களும் அங்கே வந்து போகலாம் அல்லவா. கன்னியாகுமரியிலிருந்து திரும்பி வந்தபிறகு நாங்குனேரி வருகிறதைப் பற்றி யோசிக்கிறேன். நாங்குனேரி வருகிறதென்றால் வட்டத்தொட்டி முழுதுமே வரவேண்டியதுதான். சரியானபடி முகாமை அனுபவித்துவிடத்தான் உத்தேசம். நம்மை ஆராவது கண்டு இனம் விசாரிக்க நேரலாம். அப்போது தெ.கி. சிதம்பரநாதன், தொ.மு. பாஸ்கரன் என்று யாரிடமாவது பயந்து பேர் சொல்லுவோமானால் காரியம் மோசத்துக்கு வந்துவிடும்.

உலகமே ரொம்ப தமாஷ்தான். அதற்கு நபர்கள் ரொம்ப ரொம்ப வேணும்.

வீட்டில் அம்மாள் குழந்தைகள் எல்லாம் சௌக்கியந்தானே.

தங்கள்

டி.கே. சிதம்பரநாதன்

**கடிதம் 5**

முகாம்,

மத்தளம்பாறை, தென்காசி

20-05-38

நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

நேற்று தென்காசி வந்தேன். இன்று சாயங்காலம் இங்கு வந்தேன். நடராஜனும் பாட்டியும் உடன் வந்திருக்கிறார்கள். நாளை இங்கே இருந்து புறப்பட்டு சாயங்காலம் வண்ணார்பேட்டை வந்து சேர உத்தேசம்.

நாங்குனேரியில் கம்பராமாயணப் பாட்டும், பாரதிவிழாவும் தங்கள் விருப்பம்போல எல்லாருக்கும் திருப்தியை உண்டாக்கின. வட்டத்தொட்டி நண்பர்களுக்கு என்றும் இல்லாத கோலாகல நாளாய் இருந்தது. பஸ்ஸில் வரும்போதும் வந்து சேர்ந்த பிறகும் பாரதிவிழாவும் தங்கள் விருப்பம் போல எல்லாருக்கும் திருப்தியை உண்டாக்கின. வட்டத்தொட்டி நண்பர்களுக்கு என்றும் இல்லாத கோலாகல நாளாய் இருந்தது. பஸ்ஸில் வரும்போதும் வந்து சேர்ந்த பிறகும் பேச்செல்லாம் நாங்குனேரி வைபவந்தான். எல்லாருக்கும் எப்படியாவது வராதவர்கள் வயிற்றில் பொறாமை பற்ற வேண்டும் என்ற விஷயம் ஏற்பட்டு சாப்பாட்டைப் பற்றியும் உல்லாசத்தைப் பற்றியும் ரொம்ப ரொம்ப விளம்பரம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். எல்லாருமே எண்ணுகிறார்கள். இதோடு விட்டுவிடக் கூடாது. நாங்குனேரியைப் பார்த்து இன்னொரு படையெடுப்பு எடுக்க

வேண்டியதுதான் என்று… நாள் நட்சத்திரம் பார்ப்பதாகவும் எண்ணம் இல்லை. தாங்கள் மறந்தாவது தலையசைக்க மாட்டீர்களா… போதும் அவ்வளவு என்றிருக்கிறார்கள்.

நம்முடைய நாங்குனேரி நண்பர்கள் எல்லாருக்கும் ரொம்பவும் விசாரித்ததாகச் சொல்ல வேணும். ஹிந்து கலாசாலையிலும் பாரதிவிழா சிறப்பாக நடந்தது. பாரதியின் மனைவியும் பேத்திப் பெண்களும் விஜயம் செய்தார்கள். பேத்திப் பெண்கள் பாடிய பாட்டு ரொம்ப அருமையாய் இருந்தது. பாரதியார் பாடல்களைப் பாடியது ராகபாவமும் இதய பாவமும் கலந்து ரொம்ப நயமாய் இருந்தது. இவர்களுடைய பாடல்களே விழாவைச் சிறப்பித்தன என்று நன்றாய்ச் சொல்லலாம். கமிஷனர் ராமலிங்க முதலியார் அவர்கள் ஒவ்வொரு துறையிலுமே பாரதியாருக்கிருந்த சுதந்திர நாட்டத்தை பற்றி விரிவாய் எடுத்துச் சொன்னார்கள். முத்து சிவனும் ஸ்ரீனிவாசராகவனும் சில விஷயங்களை எடுத்து அழுத்தமாகச் சொல்லி விளக்கினார்கள். நான் பாரதியும் தேசிக விநாயகம் பிள்ளையுந்தான் கவி பாடியிருக்கிறார்கள் என்பதை உதாரணங்கள் மூலமாகக் காட்டினேன். விழாவை எல்லாரும் அனுபவித்தார்கள். தாங்கள் வந்திருந்தால் ரொம்ப நன்றாய் இருந்திருக்கும் வி.பி.எஸ். அவர்களும் வந்திருந்தார்கள். ரொம்ப அனுபவித்தார்கள்.

நானும் நடராஜனும் பாட்டியும் 25-09-38 இல் சென்னைக்குப் புறப்படுகிறோம். தீபாவளியை சென்னையிலேயே கொண்டாடிவிட்டுத் திரும்புவதாக உத்தேசம். வீட்டில் அம்மாள் குழந்தைகள் எல்லாரும் சௌக்கியந்தானே.

தங்கள்
டி.கே. சிதம்பரநாதன்

**கடித இலக்கியம்**

தமிழ் இலக்கியத்தில் கடித இலக்கியத்திற்கென ஒரு தனித்த மரபு உண்டு. கடித இலக்கியத்தை வளர்க்கும் பணியில் ஆர்வம் கொண்டிருந்தவர்களில் இரசிகமணியும் ஒருவர்.

செல்லிடப்பேசி அதிக அளவில் பயன்பாட்டிற்கு வந்தபின், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கடிதம் எழுதுவது, அடியோடு நின்று போய் விட்டது. கடிதம் எழுதுவதில் உள்ள சுகம். கடிதம் வந்தபின் எழும் பல்வேறு உணர்வுகள் என இந்த தலைமுறையினரும், வருங்காலத் தலைமுறையினரும் இழந்த அனுபவங்கள், உணர்வுகள் ஏராளம்.

இவ்வாறு இரசிகமணி தம் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களைத் திரட்டி, அவற்றில் இருந்து பலவற்றை தேர்ந்தெடுத்து இரசிகமணியின் கடிதங்கள் என்ற

தலைப்பில் ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளார்கள். பாஸ்கர தொண்டைமான், மூதறிஞர் ராஜாஜி கவிமணிதேவி, திருப்புகழ்மணி, டாக்டர் திருமூர்த்தி, பேராசிரியர் கல்கி, ஜஸ்டிஸ் மகாராஜன், மீ. ப. சோமு என பலதரப்பட்ட நண்பர்களுக்கும், தம்மிடம் அன்பு காட்டிய பெண் குழந்தைகளுக்கும் எழுதிய கடிதங்கள் அதில் இடம்பெற்றிருக்கின்றன. டி.கே.சி-யின் ஆள அகலங்களையும், அவரது ஆளுமையையும் அவரது கடிதங்களில் காணலாம்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | இரசிகமணிபாஸ்கர தொண்டைமானுக்குஎழுதியகடிதங்கள் பற்றிஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | கடித இலக்கியம் என்றால் என்ன? | K3 | CO3 | PO5 |
| 3 | இரசிகமணிடி.கே.சிகுறித்துஎழுதுக. | K4 | CO4 | PO1 |
| 4 | இரசிகமணிஎழுதியகடிதங்களின் மையத்தைவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | இரசிகமணிஅவர்களின் கடிதம் வழி வெளிப்படும் அவரதுஆளுமையைவிளக்குக. | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | இரசிகமணியின் கடிதங்கள் மாபெரும் இலக்கியச் செல்வம் என்பதைவிவரி. | K2 | CO1 | PO4 |
| 2 | கடித இலக்கியம் குறித்துகட்டுரைவரைக. | K1 | CO2 | PO6 |
| 3 | இரசிகமணியின் இலக்கியபங்களிப்பைதொகுத்துரைக்க. | K4 | CO2 | PO5 |
| 4 | இரசிகமணிபாஸ்கர தொண்டைமானுக்குஎழுதியகடிதங்கள் பற்றிவிரிவாகவிளக்குக. | K3 | CO4 | PO6 |
| 5 | இரசிகமணியின் கடிதவாழ்வினைவிவரி. | K5 | CO1 | PO3 |

| TextBooks |
|---|
| • மதர்ந்பதடுத்தபாடத்திற்மகற்பபுத்தகத்மதம்த்*ர்வு |

| Reference Books |
|---|
| • நான்கண்டதும்மகட்டதும்புதியதும்பமழயதும்,உ.மவ.சாமிநாமதயர்டாக்டர்உமவ. சாமிநாமதயர்நூல்நிமலயம்,பசன்மன,2016. |
| • தங்மகக்கு,மு.வரதராசன்,விற்பமனஉாிமம:பாாிநிமலயம்,பசன்மன,மறுபதிப்பு2002. |
| • பசம்பமாழிவரலாற்றில்சிலபசப்மபடுகள்,மலரும்மு.கருணாநிதி,பசம்பமாழித்தமிழாய்வுமத்தியநிறுவனம், பசன்மன, 2010. |
| • மபரறிஞர்அண்ணாவின்பமட-இப்புகள்மயதளம்http://www.annavinpadaippugal.info |
| • திருவி.க.எழுதிமவத்தவாழ்க்மகக்குறிப்புகள்,வுர்பதிப்பகம்,பசன்மன,2008. |
| • ஒன்மறஉலகம்,தனிநாயகஅடிகள்,பாாிநிமலயம்,பசன்மன,முதற்பதிப்பு,மார்ச்1966. |
| • தனிநாயகஅடிகளாாின்பமடப்புகள்,பதாகுப்பு:அமுதன்,தனிநாயகஅடிகளார்நூற்றாண்டுக்குழு,பூம்புகார் பதிப்பகம், பசன்மன,முதற்பதிப்பு,2013. |
| • பாாிபடுகளம்,பிரளயன்,வசந்தியாபதிப்பகம்,பசன்மன,முதற்பதிப்பு2021. |
| • மமறமமலயடிகளார்கடிதங்கள்,பதாகுத்தவர்,அன்புப்பழம்நீ,பாாிநிமலயம்,பசன்மன,முதற்பதிப்பு:1957. |
| • வ.உ.சி. கடிதங்கள், பதாகுப்பு: ஆ.ரா. பவங்கடாசலபதி மசகர் பதிப்பகம்,பசன்மன முதற்பதிப்பு:1984. |
| • இந்தியஇலக்கியச்சிற்பிகள்,வ.உ.சிதம்பரனார்,மா.ரா.அரசு,சாகித்தியஅகாபதமி,சாகித்தியஅகாபதமி புதுதில்லி,2005. |
| • தம்பிக்கு,மு.வரதராசன்,விற்பமனஉாிமம:பாாிநிமலயம்,பசன்மன,மறுபதிப்:2009 |
| • வாழ்க்மகவரலாற்றுஇலக்கியம், சாலினிஇளந்திமரயன்,மமய்யப்பன்தமிழாய்வகம், சிதம்பரம்,முதற்பதிப்பு,2002. |

- தமிழ்நாடகத்தின்மதாற்றமும்வளர்ச்சியும்,ஏ.என்.பபருமாள்,கமணியகம்,பசன்மன,1982.
- தமிழ்நாடகத்தின்மதாற்றமும்வளர்ச்சியும், ஆறு அழகப்பன்,பாாிநிமலயம், பசன்மன,முதற்பதிப்பு 2013
- ரஸிகமணிடி.மக.சியின்கடிதங்கள்,பதாகுத்தவர்,தாமு.பாஸ்கரத்பதாண்டமான் பபாதிமகமமலப்பதிப்பு,பதன்காசி,விற்பமனஉாிமம:பாாிநிமலயம்,பசன்மன, முதற்பதிப்பு 1961.

| Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
|---|
| **Web Sources** |
| • www.tamilvu.org<br>• www.tamildigitallibrary.in<br>• https://www.tamiluniversity.ac.in/english/library2-/digital-library/<br>• https://www.tamilelibrary.org/<br>• www.projectmadurai.or<br>• http://www.tamilvu.org/ta/library-libcontnt-273141<br>• https://www.tamildigitallibrary.in/ |

| ExpectedCourseOutcomes | | |
|---|---|---|
| **இப்பாடத்மதக்கற்பதால் பின்வரும் மளமாணவர்கள் மட்வர்** | | |
| OntheSuccessfulcompletionoftheCourse,Studentswillbeableto | | |
| CO1 | இக்கால இலக்கியத்தின் பல்வமகப்மபாக்குகமளயும் எழுச்சிகமளயும் மககமளயும் நன்குணர்தல் | K2 |
| CO2 | கட்டுமர இலக்கியக்கமலயின் நுட்பங்கமளணர்தல் | K3 |
| CO3 | பயண இலக்கிய வளத்மதயும் சிறுப்மபயும் விழுமியமும் அனுபவங்கமளயும் பபறுதல். | K4 |
| CO4 | இருபதாம் நூற்றாண்டில் நாடக இலக்கியம் பபற்றுள்ள பதழுச்சிமயப் புரிந்துபகாள்ளுதல்; புதியனவாக நாடகங்கள் புமனயும் ஆற்றமலப் பபறுதல். | K3 |
| CO5 | தமிழறிஞர்களின் ஆளுமமப்பண்புகமள அறிந்து இக்காலத் தமிழ் இலக்கியங்களில் இலக்கியம் நாக்கு இலக்கியம் பாக்கு சமூக உணர்வு உலகளாவிய பார்மவ முதலியவற்மற நன்குணர்தல் | K5 |
| emember;K2-Undestand;K3-Apply;K4-Analyze;K5-Evaluate;K6-Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 |
| CLO2 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 |
| CLO3 | 3 | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 |
| CLO4 | 3 | 2 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 |
| CLO5 | 2 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 3 | 2 |